நவம்பர் 11 - 17, 2007 November 11 - 17, 2007 பக்கங்கள் - 28 20.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



சமஷ்டி: 'உள்ளக சுயநிர்ணய உரிமை' சந்திரிகாவுக்கு புரியவில்லை!

சமாதானத்துக்கு விடை! யுத்தத்துக்கான அழைப்பு!!


# சமாதானத்துக்கு விடைகொடுப்பு! யுத்தத்துக்கான அழைப்பு விடுப்பு!

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் - அதாவது சிங்களவர் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடை யில் - சர்வதேசத்தின் பிரசன்னத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகி அதற்கு அகவை ஆறாகும் போது -

அந்த ஒப்பந்தத்தின் கீழ் யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, சமாதான சூழல் நிலவும் காலத்தில் -

அந்த சமாதான முயற்சிகளின் முக்கிய கதாபாத்திரம் அந்த சமாதான முயற்சியில் இருந்து அகற்றப் பட்டுள்ளது.

இதன்விளைவு சமாதான முயற்சிகள் யாவும் நிறுத்தப்பட்டு மீண்டும் யுத்த சூழலுக்குள் நாடு தள்ளப்படப் போகின்றது என்பதையே சுட்டி நிற்கின்றது.



2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் இருந்து தெற் கின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐ.தே. கட்சியின் தலைமையுடன் ஆறுகட்டப் பேச்சுகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையுடன் இரண்டு கட்டப் பேச்சுகள் என எட்டுகட்டப் பேச்சுகளும் அரங்கேறியுள்ளன.

அந்த எட்டுக் கட்டப் பேச்சுகளிலும் முக்கிய கதாபாத்திரம் வகித்தவர்தான் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஒவ்வொரு கட்டப் பேச்சுகளிலும் தமிழ் மக்களின் அபி லாஷைகளை பூர்த்திசெய்யக் கூடிய தீர்வு ஒன் றைக் காணவேண்டும் என்பதில் அதீத ஈடுபாடு காட்டியவர் அவர்தான்.

பேச்சுக்கான உயர்மட்டக்குழு வெளிநாடு செல்வதற்கு முன் னர், அனுசரணையாளர்களான நோர்வேயின் பிரதிநிதிகள் வன்னி வந்து கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனோடு தான் பேசுவார்கள்.

அந்தப் பேச்சுகளின் முடிவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, பேச்சில் பேசப்பட்ட விடயங்களை அச்சொட்டாக வெளிப்படுத்தி,பேச்சின் போக்கை, தன்மையை மக்களுக்கு தெரியப்படுத்துவது அவரது முக்கிய பணியாக இருந்தது.

சில சந்தர்ப்பங்களில் இரு தரப்புகளுக் கும் இடையில் காரசாரமான வாதப் பிரதி வாதங்கள் இடம்பெறும். தமது சாணக்கிய மான போக்கால் எந்தவிட்டுக் கொடுப்பும் இன்றி தமது தரப்பு நியாயங்களை முன் வைப்பார்.

பேச்சுகள் முடிவடைந்து நோர்வே பிரதிநிதிகளை வழி அனுப்பிவிட்டு, முகத்தில் கடும்போக்கு காணப்பட்டாலும், சிரித்த முகத்துடன் பத்திரிகையாளரைச் சந்திப்பார்.

அப்போது அவர் வெளிப்படுத்தும் கருத்து கடுமையான போக்கை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தாலும், தனக்கே உரிய பாணியில் சிரித்த முகத்துடன் செம்மையாக வெளிப்படுத்துவதில் தவறுவதில்லை.

சில சந்தர்ப்பங்களில்,பேச்சுகள் ஏறு மாறாக அமைந்தால் ஊடகவியலாளர்களைச் சந்திக் காமலேயே, பேசப்பட்ட விடயங்கள் குறித்து தலைமையிடம் தெரிவிப்பதற்காகச் சென்று விடுவார். மணிக்கணக்கில் காத்துக்கிடந்து ஏமாற்றத்துடன் ஊடகவியலாளர்கள் சென்றதும் உண்டு.

இப்படிப் பல சந்தர்ப்பங்களில் ஊடகவிய லாளர்கள் சென்றாலும் ஓரிரு ஊடகவியலாளர் களை அவர் தனியே சந்தித்து, பேச்சின் போக்கை வெளிப்படுத்தியதும் உண்டு.

'எங்கடை காதில பூ வைக்கப் பார்க்கிறாங் கள்' என்ற வார்த்தையை அவர் தன்னுடன் நெருக்கமான ஊடகவியலாள ரிடம் பரிமாறி, 'எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை; பலமான நிலையில் இருந்துதான் பேசுகிறோம்; சமதரப்பாக இருந்து பேசுகிறோம்' என்று கூறுவார்.

எந்தப் பேச்சுகளாக இருந்தாலும் அது அரச தரப்புப் பிரதிநிதிகளுடனாக இருக்கலாம், சர்வ தேசப் பிரதிநிதிகளுடனாக இருக்கலாம் தமிழ் மக்களின் விடிவை உறுதிப்படுத்தக் கூடிய கருத்துக்களையே அவர் முன்வைப்பார்.

ஆயுதப் பயிற்சி பெற்று களம் பல கண்ட போராளியாக அவர் இருந்தாலும் அரசியல் சாணக்கியம் பெற்ற ஒரு முதிர்ந்த அரசியல் தலைவராக நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.

உலக அரசியல் மாற்றங்களை எல்லாம் அக்குவேறு ஆணிவேறாகக் கரைத்துக் குடித்து, தமிழ்மக்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப் படுத்தும் முதிர்ச்சியைப் பெற்றிருந்தார்.

விடுதலைப்புலிகளுக்கு என்ன சண்டை பிடிக்கத்தான் தெரியும் அவர்களுக்கு என்ன அரசியல் தெரியும் என சகலர் மட்டங்களி லும் நிலவிவந்த கருத்தை பொய்ப்பித்த தலைவரான 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் பாசறையில் வளர்ந்து வந்தவர்தான் தமிழ்ச் செல்வன்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் குமரப்பா, புலேந்தி, கிட்டு, சங்கர் போன்றோரின் வரிசையில் களம்பல கண்டபோதும், சண்டைக்கு அப்பால் அரசியலில் தனிமுத்திரை ஒன்றைப் பதித்துச் சென்றுள்ளார் தமிழ்ச் செல்வன்.

தலைவர் பிரபாகரனுடன் தோளோடு தோள் நின்று முடிவுகளை நிதான மாக எடுத்து, அவற்றைச் செயற்படுத்தி வந்த முக்கிய தலைவர் இவராவார்.

## படுகொலையின் விளைவை நாடுதாங்குமா???

### யாழவன்

2002ஆம் ஆண்டு சமாதான காலம் ஆரம்பமான காலத்தில் இருந்து சமாதானத்தை வெளிப் படுத்தும் வகையில் வெள்ளை சேர்ட் அணிந்தே வலம் வந்தார்.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின் வன்செயல்கள் வெடித்த பின் சிலவேளைகளில் வரி உடுப்புடன் 'ஹோல்சர்' கட்டிக் கொண்டுதான் நடமாடினார்.

என்ன அண்ணா இந்தக் கோலத்தில் என்று ஊடகவியலாளர் கேட்டால், இனி இதுக்குத் தான் வேலை என்று ஹோல்சரைக் காட்டு வார்.

சமாதானத்தின் முக்கிய கதாபாத்திரமாக திகழ்ந்த அவரை இலங்கை அரசு சாகடித்து சமாதானப் பாதையை மூடிவிட்டது என்றே சகலரும் கருதுகிறார்கள்.

பிரிகேடியர் தரம் அவருக்கு தலைமை யால் வழங்கப்பட்டாலும் சமாதானத்தில் அவர் ஆற்றிய பங்கை மக்கள் மறக்க மாட் டார்கள்.

அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தலைவர் பிரபாகரன் விடுத்த செய்தியில் -

''சமாதான வழியில் நீதியான முறையிலே எமது மக்களது தேசியப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணுமாறு அனைத்துலகம் அடுத்தடுத்து அழைப்பு விடுத்தபோதும், சிங்கள தேசத்தில் இருந்து நல்லெண்ணம் வெளிப்படவில்லை. பௌத்தத்தின் காருண் யத்தைக் காணமுடியவில்லை. சிங்களதேசம் தனது இதயக் கதவுகளை திறந்து சமாதானத் தூதும் அனுப்ப வில்லை. மாறாகப் போர்க் கழுகுகளை ஏவி இராட் சதக் குண்டுகளை வீசியிருக்கின்றது. எமது அமைதிப்புறா வைக் கொடூரமாகக் கொன்றொழித்திருக் கிறது.

அவர்கள் கோரக் கொலை செய்த தமிழ்செல்வன் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கிறான். எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றி இருக்கிறான்''

இப்படி அவர் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழீழம் என்ற இலட்சிய உறுதிக்கு உரம் ஊட்டிச் சென் றுள்ள தமிழ்ச்செல்வன் பாதையில் அடுத்த கட்ட நகர்வுகள் அமையப் போகின்றன.

தமிழ்ச்செல்வனின் படுகொலை குறித்து சர்வதேச ஏஜென்ஸி ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ -

''புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்ட சம்பவம் படையினரின் நடவடிக்கையின் ஆரம்பம். இது விடுதலைப் புலிகளின் தலை மைக்கு கொடுக்கப்பட்ட ஒரு செய்தி.

புலிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர் கள் ஒவ்வொருவரும் எங்கு இருக்கிறார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும் என்ற செய்தி யையும், நாம் நினைத்தால் அவர்கள் ஒவ்வொருவரையும் வரிசையாகத் தொலைத்துக் கட்டமுடியும் என்பதையும் இந்த நடவடிக்கை மூலம் புலிகளின் தலைமைக்கு தெரியப் படுத்தியிருக்கிறோம்.''

இப்படிக் கூறியுள்ள நிலையில் -

தமிழ்ச்செல்வனின் படுகொலைக்கு அரசு ஆச்சரியப்படும் விதத்தில் பதிலடி கொடுப்போம் என விடுதலைப்புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதேவிதமான எச்சரிக்கையை புலிகளின் தளபதி களும் விடுத்துள்ளனர்.

இருதரப்புகளில் இருந்தும் எச்சரிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் -

இலங்கையின் தற்போதைய போர் நிலைமைகள் குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக அனுசரணையாளர்களான நோர்வேயின் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம், விசேட தூதர் ஹன்சன் போவர் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சுக்கான கதவுகள் திறந்து இருப்பதாகவும் பேச்சு மேசைக்கு புலிகளைக் கொண்டுவருவதற்காகவே அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதாகவும் அரச தரப்பில் இருந்து தகவல்கள் வெளி வருகின்றன.

பேச்சு என்பது இனிக் கானல்நீர்தான். அதற்கான பாதைகள் யாவும் மூடப்பட்டு விட்டன என்று ஆய் வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

உடனடியாக பேச்சுகள் ஆரம்பமாவதற்கான வாய்ப்பு அறவே இல்லை. மீண்டும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவேண்டுமானால் நீண்டகாலம் செல்லும் என்று தெற்கு ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பேச்சுக்கான கதவுகள் மூடப்பட்டு விட் டால் அடுத்து என்ன?

இருதரப்பினரும் புதிய புதிய போர்முனை களைத் திறந்து நாலாம் கட்ட ஈழப்போரை ஆரம் பிக்கப் போகின்றார்கள்.

விலைவாசி உயர்வு, பாதுகாப்பு இறுக்கம் போன்றவற்றால் பெரி தும் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சின்னஞ்சிறிய நாட்டின் மக்கள் யுத்தச் சுமையையும் சுமக்க வேண்டிய கட்டாயத்துக் குள் தள்ளப்பட போகின்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது, தெற்கு அரசி யல் தலைவர்கள் தமது அரசியல் அஞ்சலோட்டங்களை நிறுத்தி, நாட்டின் எதிர் காலத்தைச் சிந்தித்து செயற்பட முன்வரமாட் டார்களா என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வெடிக்கப் போகும் யுத்தத்தின் பாதிப்பு தமிழ் மக்களை மட்டுமல்ல இந்த நாட்டில் பட்டிதொட்டியில் வாழும் சகல மக்களையும் பாதிக்கப் போகின்றது.

இந்த யதார்த்த நிலை தெற்குத் தலைமைகளுக் குப் புரியுமா? அல்லது நாடு யுத்தம் ஒன் றில் மூழ்க உதவப் போகிறார்களா? இதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ★

## கல்விச் சுடர்

**தரம்-04 மாணவர்களுக்காக கடந்தவார சுடர்ஒளி வாரமலரில் வெளிவந்த படிமுறைப்பரீட்சை -07 இன் விடைக்குறிப்புக்கள்.**

**ஆசிரியர்: திரு.சண். சுதர்சன்** (குறிஞ்சி வெளியீடு)
(மதீனா தேசிய பாடசாலை, கண்டி.)

01. 1) குயவன். 2) தண்ணீர் வைப்பதற்கு. 3) குயத்தி. 4) தண்ணீர். 5) தண்ணீர்
02. 1) உள்ளம் 2) மகிழ்ச்சி 3) சாமர்த்தியம். 4) அன்பளிப்பு
03. 1) உலோபி. 2) அஞ்ஞானம். 3) நவீனம். 4) அந்தரங்கம்.
04. 1) B 2) D 3) D 4) D
05. 1) 3 2) 2 3) 1
06. 1) திருகோணமலை. 2) கந்தளாயில். 3) பசுபிக். 4) பொன்விழா. 5) 1330
07. 1) 2 2) 1
08. 1) 3 2) 2 3) 3
09. 1) 3 2) 2 3) 2 4) 3 5) 2
10. 1) D 2) D
11. 1) ஒட்டகச்சிவிங்கி Giraffe 2) வாத்து Duck 3) உலங்கு வானூர்தி. Helicopter 4)
12. 1) Artist 2) Electric Iron
13. 1) காவல் நிலையம் 2) ஊடகம்.
14. 1) நீதிமன்றம். 2) மாம்பழம்.
15. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான ஐந்து வாக்கியங்கள்.


Tomorrow's Leaders
Dr. Chamalya Perera
MBBS (SL) MRCP (UK)
Mr. Imran Farook
Attorney-at-Law, LL.B, MA - (Hons)
Eng. Chandu Wickramasinghe
B Sc (Eng), M Sc (Eng)
Ms. Divya Shanmugam
BA (Hons)
ஒன்றிணைந்து நாம் உலகை வெல்வோம்
நாளைய தலைவர்களுக்கு முடிசூட்டும், செலிங்கோ பிரணாம புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். இச்சந்தர்ப்பம் திறமை மிக்க செலிங்கோ காப்புறுதிதாரர்களின் பிள்ளைகளுக்கானது. உங்கள் பிள்ளை கல்வி, விளையாட்டு, கலை மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் போன்ற துறைகளில் திறமையுடையவர்களாயின் இதற்கு விண்ணப்பிக்க அவர்கள் முழு தகுதி உடையவர்களாவார்கள். உங்கள் செலிங்கோ பிரணாம விண்ணப்பப்படிவங்களை அருகில் இருக்கும் செலிங்கோ லை∴ப் கிளையில் அல்லது 011 2 461 461 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் இன்றே பெற்றுக்கொள்ளலாம்.
2007 செலிங்கோ பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது.
• ஆண்டு 5 - 2006 மற்றும் 2007 - ஒவ்வொன்றும் ரு. 60,000/- பெறுமதியுடைய 50 புலமைப்பரிசில்கள்
• க.பொ.த (சாதாரண தரம்) - 2006 - ஒவ்வொன்றும் ரு. 36,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
• க.பொ.த (உயர் தரம்) - 2007 - ஒவ்வொன்றும் ரு. 72,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
- ஒவ்வொன்றும் ரு. 10,000/- பெறுமதியுடைய 75 புலமைப்பரிசில்கள்
• தேசிய திறமை விருதுகள் - 2006/2007 - ஒவ்வொன்றும் ரு. 25,000/- பெறுமதியுடைய 10 புலமைப்பரிசில்கள்
பிரணாம
புலமைப்பரிசில்
விண்ணப்பங்கள் 2007 நவம்பர் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
செலிங்கோ லை∴ப்
செலிங்கோ இன்சூரன்ஸ்
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ
இல. 134, காலி வீதி, கொழும்பு 03. தொ.இ. (011) 2 461 461 வெப்தளம் www.ceylincolife.com

# ஜெயலலிதாவின் கனவுக்கு ஆப்பு!





முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் பதவி மீது எப்போதுமே ஒரு கண் உண்டு. கலைஞர் கருணாநிதி தமிழகத்துக்குள் தனது அரசியலை செய்து கொண்டு, தானுண்டு தன் பாடுண்டு என்று இருப்பவர். அம்மாவோ தமிழக எல்லை தாண்டி டெல்லிக்கும் தனது அரசியலை வியாபிக்க முயல்பவர். 1991 இல் ராஜீவ் காந்தியை தூண்டி, கலைஞர் ஆட்சியை கலைப்பித்தவர் அம்மா. வேறு வழியின்றி

**என்.சுரேந்திரஜித்**

கலைஞரும் டெல்லியில் கால் ஊன்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். காங்கிரஸும், பி.ஜே.பியும் அல்லாத மூன்றாவது அணிதான் ஜெயலலிதாவுக்கு பிரதமர் கதிரையைப்பிடிக்க ஒரே வழி. ஏற்கனவே இந்த மார்க்கத்தில்தான் கர்நாடக முதல்வர் தேவகௌடா பிரதமராகியது குறிப்பிடத்தக்கது. அதே மூன்றாவது அணி மார்க்கத்தில் செல்ல ஜெயலலிதாவும் பிள்ளையார் சுழியை இந்த வருட ஆரம்பத் திலேயே போடத் தொடங்கினார். அணுசக்தி ஒப்பந்தம் காரணமாக மத்தியில் காங்கிரஸ் அரசு கவிழ்ந்தால், மூன்றாவது அணி ஆட்சி அமைக்கலாம் என்று கருதப்பட்டது. ஏற்கனவே, உத்தரப் பிரதேச தேர்தலில் ஜெயலலிதா சென்று பிரசாரம் செய்து முலாயம் சிங் யாதவின் ஆதரவைத் தேடி னார். மூன்றாவது அணி அமைப்பு ஓரளவு செயலுருப் பெற்றது. ஆனால், அதன் தலைவர் பதவியைக் கோரினார் அம்மா. பெண்ணாக இருப்பதால் தனது வசீகரமும் அணிக்கு அணி சேர்க்கும் என்று மூன்றாவது அணித்தலைவர்களிடம் சொன்னார். ஆனால், ஜெயலலிதா போட்ட கணக்கு பிழைத்துவிட்டது.

கடந்த 2004 லோக் சபைத் தேர்தலில் தமிழகத்தின் 40தொகுதிகளிலும் அ.தி.மு.க. தோல்வி கண்டது. ஒரு எம்.பி. கூட இல்லாத கட்சியின் தலைவருக்கு எப் படி கூட்டணியின் தலைவர் பதவி தருவது என மற்றத் தலைவர்கள் நினைத்தனர். உத் தர பிரதேச முன்னாள் முதல்வர் முலாயம் சிங் யாதவ் வசம் 35 எம்.பிக்கள் உள்ளனர். சந்திர பாபு நாயுடுவுக்கு 5 எம்.பிக்கள் உள்ளனர். இவர்கள் இருவரும் முறையே மூன்றாம் அணியின் தலைவராகவும் அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவர், அமைப்பாளர் பதவி தவிர்ந்த வேறு பதவி தரலாம் என அம்மாவுக்கு கூறப்பட்டது. அவரோ மறுத்துவிட்டார். தவிரவும் ஜனாதிபதி, மற்றும் உப ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது அணியின் முடிவுக்கு முரணாக ஜெயலலிதா செயற்பட்டது, வேறு மற்றத் தலைவர்களுக்கு எரிச்சலைத் தந்தது. பி.ஜே.பி பக்கம் சாய அம்மா முயல்வதும் அப்பொழுது வெளிப்படையாகத் தெரிந்தது. உப ஜனாதிபதி தேர்தலில் பி.ஜே.பி. வேட்பாளரை அம்மா ஆதரிக்கவும் செய்தார். பொறுத்துக் கொண்ட மூன்றாம் பொறுத்துக் கொண்ட மூன்றாம் அணித்தலைவர்கள் அண்மையில் நடந்த அணியின் கூட்டத்துக்கு அம்மாவுக்கு அழைப்பு விடுத்தனர். தனக்கு பதவி கிடையாது என்று தெரிந்ததும் அம்மா கூட்டத்தை புறக்கணித்தார். இதை அடுத்து மூன்றாம் அணித்தலைவர்கள் தி.மு.க.வுக்கு வலைவீசத் தொடங்கினர். அதாவது அணு ஒப்பந்தத்தால் மன்மோகன் அரசு கவிழ்ந்தால் காங்கிரஸ் அணியிலுள்ள சரத் பவார் கட்சி, தி.மு.க., லல்லு பிரசாத் கட்சி, இடதுசாரி கள் ஆகியோரை இணைத்து அரசமைக்க மூன்றாவது அணி முயன்றது. சரத்பவார் அல்லது லல்லு பிரசாத்துக்கு பிரதமர் பதவி என்றும் பேச்சு அடிபட்டது.

ஆனால், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு காங்கிரஸின் ஆதரவு மிக அவசியம் என்பதால் தி.மு.க.வால் காங்கிரஸுக்கு விரோதமாக செயற்பட இயலாது. டெல்லியை விட சென்னைதான் தி.மு.க.வுக்கு முக்கியம்.

இது தவிர மூன்றாவது அணி தனித்து ஆட்சி அமைப்பதும் கடினமே. பி.ஜே.பி. வெளியில் இருந்து ஆதரவளிக்க, மூன்றாவது அணி ஆட்சிக்கு வருவதே நடக்ககூடியது. ஏனெனில், தற்போது லோக் சபையில் காங்கிரஸுக்கு 150 எம்.பிக்களும், பி.ஜே.பி.க்கு 125 எம்.பிக் களும் உள்ளனர். ஆக இந்த இரு கட்சிகளுக் கும் மொத்தம் 275 பேர் உள்ளதால் எஞ்சிய 267 எம்.பிக்கள் சகலரும் ஒன்றிணைந்தாலும் மூன்றாவது அணியில் தனித்து ஆள 272 என்ற பெரும் பான்மை கிடையாது.

மேலும் லல்லு பிரசாத் உள்ள அணி ஆட்சி அமைக்க பி.ஜே.பி. இணங்காது. மூன்றாவது அணி ஆட்சி அமைக்க முயன்றால் பி.ஜே.பி.யின் தோழமைக் கட்சிகள் சிலவும் ஆட்சியில் பங்கெடுக்க முயலலாம். இதனால் பி.ஜே.பி.யின் அணி உடையும். தனது அணியை உடைத்து மற்றொரு அணி ஆட்சிக்கு வரும் தற்கொலைச் செயலை பி.ஜே.பி. செய்யுமா என்பது சந்தேகமே.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரித்து ஆட்சியை இழக்க காங்கிரஸ்கட்சி தயாராக வேண்டும். மற்றபடி இடதுசாரிகள் காங்கிரஸ் ஆட்சியை கவிழ்க்க முன்வரமாட்டார்கள். எனவே, மூன்றாவது அணி ஆட்சிக்கு வருவதற்கு பல முட்டுக்கட்டைகள் உள்ளன. மாற்றுவழியாக ஆட்சி கவிழ்ந்தால் பி.ஜே.பி. பதவிக்கு வருவதை தடுக்க காங்கிரஸ் மூன்றாவது அணியை ஆதரிக்கலாம். ஆனால், தேவகௌடாவை பிரதமராக்கி ஏற்கனவே இதில் மூக்குடைபட்டதால் இதுவும் நடக்க வாய்ப்பில்லை என்றே கருதப்படுகிறது.

# குடாநாட்டு வைத்தியசாலைகளில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு!
## அல்லல்படுகிறார்கள் நோயாளிகள்!!

**யாழ்.** மாவட்டத்தில் உள்ள மக்களிடையே போசாக்கு இன்மை காணப்படுமாக இருந்தால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்படும் என்று யாழ். அரசாங்க அதிபர் அண்மையில் எச்சரித்துள்ளார்.

நோய்கள் பரவும் அபாயம் அல்லது நோய் தொற்றும் வாய்ப்பு காணப்படுகின்ற நிலையில் யாழ். மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலையிலும்சரி, மாவட்ட வைத்தியசாலைகளிலும் சரி மருந்துவகைகள், ஊசிவகைகள் என்பவற்றுக்குத் தட்டுப்பாடு தொடர்ந்தவண்ணமே உள்ளது.


யாழ். குடா நாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையை விட ஒரு ஆதார வைத்திய சாலை யும் (பருத்தித்துறை) 05 மாவட்ட வைத்தியசாலைகளும் 04 கிராமிய வைத்தியசாலைகளும் 06பிரதேச (PERI PHERAL UNIT) வைத்தியசாலைகளும் காணப்படுகின்றன. இவற்றைவிட விட 29 மத்திய மருந்தகங்களும் காணப்படுகின்றன.

இவ்வைத்தியசாலைகளில் (யாழ். போதனா வைத்தியசாலை உட்பட) நாளொன்றுக்கு ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது முதல் இரண்டாயிரம் வரையான நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றார்கள்.

இதனைவிட 20 இற்கும் மேற்பட்ட கிளினிக்குகள் இடம் பெற்று வருகின்றன. இதிலும் அதிக எண்ணிக்கையான கிளினிக்குகள் யாழ். போதனா வைத் தியசாலையில் மட்டுமே இடம் பெற்றுவருகின்றன.

இதே போன்று நாள் ஒன்றுக்கு இருநூற்று இருபது பேரில் இருந்து இருநூற்று எழுபத்தைந்து பேர் வரை உள்ளக சிகிச் சைக் காக அனுமதிபெறுவதும் இருநூற்று பதினைந்தில் இருந்து இருநூற்று நாற்பதுவரை சிகிச்சை முடிந்து வெளியேறும் நிலை யும் இந்த வைத்தியசாலை களில் காணப்படுகின்றது.

இந்த நோயாளர்கள்' அனைவரும் மருந்துகள் வழங்கப்பட வேண்டியவர்களாகவே காணப்படுகின்றார்கள். யாழ்



## தனியார் மருந்தகங்களில் தாராளமாக மருந்துகள்

போதனா வைத்தியசாலையின் மருந்தகத்தில் தமக்கு வைத்தியர் எழுதிக் கொடுக்கும் மருந்துகளுக்கு 'O/S' என்ற ஆங்கிலத்தில் எழுதப்பட்டு மருந்து இல்லை என வெளியில் வாங்கிப் பாவியுங்கள் என்று சொல்லப்படுகின்றது.

'O/S' என்பதன் அர்த்தம் out of stock அதாவது மருந்து கையிருப்பில் இல்லை என்பதாகும். 'O/S' என்ற எழுத்தைக் கண்டவுடன் தனியார் மருந்தகங்கள் உஷார் அடைந்து விடும். விலை பல மடங்குகளாக அதிகரித்துவிடும். இன்று விட்டால் நாளை அதைவிடக் கூடியவிலை என்ற நிலைமை யாழ்ப்பாணத்தில் காணப்படுவதால் கடன் பட்டாவது பலர் மருந்துகளை வாங்கிச் செல்கிறார்கள்.

இதே நிலை தான் ஏனைய ஆதாரமாவட்ட கிராமிய வைத்தியசாலைகளிலும் காணப்படுகின்றது. மருந்துகள் மட்டுமல்ல குழந்தைகளுக்கான ஊசி முதல் பெரியவர்களுக்கான ஊசி மருந்துகளும் போதிய அளவில் வைத்தியசாலைகளில் இல்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் நொந்து போயிருக்கும் மக்கள் மீது வைத்தியசாலைகளும் மருந்துகள் இல்லையெனக் கூறி சுமைகளை அதிகரிக்கின்றன.

நோயாளர்களின் அவலங்கள் நேரடியாகப்

**— வில்லவன் —**

பார்ப்பதன் மூலமே உணர்ந்து கொள்ளக் கூடியவை. வெளி நோயாளர்கள் பிரிவுகளில் அன்றாடம் வரிசையில் காத்திருக்கும் நோயாளிகளுடன் மனம் விட்டு உரையாடும்போது அவர்களின் நிலை நன்கு புலப்படும். தமக்கான மருந்துகளைப் பெற்றுச் செல்ல அவர்கள் காலை 6மணிமுதல் மாலை 4 மணி வரை கிளினிக்குகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

காலை முதல் மாலை வரை காத்திருந்து இறுதியில் மருந்துகள் இல்லை'O/S' என்ற அடையாளம் மட்டுமே கிடைக்கிறது.

(27 ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி: 'உள்ளக சுயநிர்ணய உரிமை' சந்திரிகாவுக்கு புரியவில்லை!

''உள்ளக சுயநிர்ணய உரிமை' என்று எதுவும் உலகில் இல்லை. உள்ளக சுய நிர்ணய உரிமை என்றால் என்னவென்று எனக்கு விளங்கவில்லை. இதுகுறித்து அன்டன் பாலசிங்கம் தான் சதா கூறிக்கொண்டிருக்கிறார். அதன் அர்த்தம் - வரைவிலக்கணம் - என்ன வென்பதை அவர் தெளிவுபடுத்தினால் நல்லது''.

''அரசியல் விஞ்ஞானம் அல்லது அரசமைப்புச் சட்டம் அறியாதவர்கள் 'உள்ளக சுயநிர்ணய உரிமை' என்று ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். 'சுயநிர்ணய உரிமை' என்பது உள்ளது. அதுகுறித்து எல்லோருக்கும் விளங்கும். ஆனால், 'உள்ளக சுயநிர்ணய உரிமை' என்று ஏதும் இல்லை''.



- இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க எனக்குத் தெரிவித்த கருத்துகள் 'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ்களில் பிரசுரமானதும். அதை வாசித்த மதியுரைஞர் பாலாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது என்று குறிப்பிட்டேன் அல்லவா ? சந்திரிகா எனக்களித்த பேட்டியில் இவ்விடயம் குறித்து அவர் குறிப்பிட்ட வாசகங் களை மீண்டும் ஒரு தடவை வாசித்தீர் களாயின் பாலாவின் கோபத்துக்கான காரணம் உங்களுக்குப் புரியும்.

''உள்ளக சுயநிர்ணய உரிமை குறித்து பாலசிங்கம்தான் சதா பேசிக்கொண்டிருக்கிறார்'' - என்று குறிப்பிட்ட ஜனாதிபதி சந்திரிகா, அடுத்த வசனத்தில் ''அரசியல் விஞ்ஞானம் அல்லது அரசமைப்புச் சட்டம் அறியாதவர்கள்தான் உள்ளக சுய நிர்ணயஉரிமை என்று ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றும் குறிப்பிடு கிறார். அதன்மூலம் ஜனாதிபதி சந்திரிகா வெளிப்பட்டுத்த முயலும் கருத்து என்ன?

செய்திகளில், வரிகளுக்கு இடையில் - அச்சில் வராமல் - பொதிந்து கிடக்கும் விடயங்களையும், அர்த்தங்களையும் கூட இலகுவாக ஊகித்தறிந்து வெளிப்படுத்தும் மதிநுட்பம் மிகுந்த பாலாவுக்கு சந்திரிகா கூறவந்த கருத்து என்னவென்பது விளங்காமல் இருக்குமா?

தமிழரின் ஏகபோக விடுதலை அமைப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழரின் தேசியத் தலைவராக வே.பிரபாகரனும் பரிணமித்தமையின் பின்புலத்தில் பாலாவின் பங்குபணியும் குறிப்பிடத்தக்கவை. வெற்றிகரமான போராட்ட சக்தியாக புலிகள் இயக்கத்தைத் தலைவர் பிரபாகரன் வழிநடத்திச் செல்வதற்கு உற்ற தோழனாக - மதியுரைக்கும் நண்பனாக - அரசியல் ஆலோசகராக - செயற்பட்டு தமது திறமையை நிரூபித்தவர் அவர். அவரது அரசியல் மதிநுட்பத்தை எதிரிகள் கூட பாராட்டத் தவறியதில்லை. அரசறிவியல் துறையில் ஆழ்ந்த புலமைமிக்க விற்பன்னர் அவர்.

அத்துறையில் அவர் இவ்வளவு தூரம் மேம்பட்டமைக்கு - உயர்ந்தமைக்கு - அவரிடம் இருந்த என்ன திறமைதான் காரணம்?

அவரது மறைவுக்குப் பின்னர், ஒருநாள் லண்டனில் அவரது இல்லத்தில் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்துடன் ஆறஅமர இருந்து, பாலா அண்ணை பற்றிய மறக்கமுடியாத நினைவுகளை நாம் இரைமீட்ட சமயம் இதுபற்றிக் கேட்டேன். அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

''வாசிப்பு. வாசிப்பு. வாசிப்பு'' - இதுவே திருமதி பாலசிங்கம் கூறிய பதில். வாசிப்பு ஒன்றே பாலாவை முழுமனிதனாக்கியது. தம் வாழ்நாளில் பெரும் பகுதியை வாசிப்புடன் செலவிட்டவர் அவர்.

சாவுப் படுக்கையில்கூட, காலன் தன்னை நெருங்கி விட்டான் என்பதை உறுதியாக உணர்ந்த நிலையில்கூட, அவர் தளராது - அயராது - வாசித்துக் கொண்டிருந்தமையை நேரில் பார்த்து நான் வியந்திருக்கிறேன்.

பாலா அண்ணனின் லண்டன் இல்லத்தில் அவரது அலுவலக அறை நூலகம் போலவே இருக் கும். வரிசையாகப் புத்தகங்கள். திறந்த அலுமாரியில் அவை அடுக் கப்பட்டிருக்கும் அழகே தனி.

உடை அணிவதிலாக இருக்கட்டும், எழுதுவதிலாக இருக்கட்டும், முகத்தில் - நாடியில் - ஒரு நீள் வட்ட, மெல்லிய கோடு போன்ற தாடியை ஒழுங்குபடுத்துவதிலாக இருக்கட்டும், ஏன் தனது லண்டன் இல்லத்தில் தம் கைவண்ணத்தில் சமையல் செய்து அதன் பின்னர் பாத்திரங்களைக் கழுவி ஒழுங்காக அடுக்குவதிலாகட்டும் - அனைத்திலுமே ஒரு நேர்த்தி, ஒழுங்கு, கனகச்சிதம், அழகு பொதிந்து இருக்கும்.

சலரோகத்தினால் நீண்டகாலம் - சுமார் முப்பத்தி ஐந்து வருடங்கள் - பாதிக்கப்பட்ட அவரின் கைகள் எழுதும்போதும் சிலசமயங் களில் நடுக்கம் தென்படும். முகத்தில்கூட

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - VII

அந்த நடுக்கத்தைத் தொலைக்காட்சியில் அவர் தோன்றும்போது - அல்லது நேரில் அவரைக் காணும்போது - நீங்கள் அவதானித் திருப்பீர்கள். கை நடுங்கியதோ, நடுங்க வில்லையோ அவரது எழுத்து மட்டும் உறுப் பாக இருக்கும். ஆங்கிலமாகட்டும் தமிழாகட்டும் - அச்சு எழுத்தில், ஆற்றோட்டமான வச னங்களில், தங்கு தடையின்றி அவர் எழுதும் எழுத்தும் அதன் வடிவும் ஆச்சரியப்படத்தக்க நேர்த்தியில் அழகு ஒழுங்கில் இருக்கும்.

அந்த நேர்த்தியை அவரது வீட்டு அலு வலக அறையின் புத்தக வரிசை அடுக்கு முறையிலும் காணலாம்.

புத்தகங்களைத் தேர்ந்து தெரிவு செய்து அதில் மூழ்கிப் போவார். அதன் மூலம் தமது அறிவை விருத்திசெய்து கொண்டு, அரசறிவியலுக்கான நடமாடும் நூலகமாகவே அவர் மிளிர்ந்தார்.

மணிக்கணக்காக வாசிப்பில் ஆழ்ந்து விடும் பாலா அண்ணனின் அந்தப் பழக்கம் கண்டு அவரின் துணைவியார் 'அன்றி' வியந்ததுண்டு. அவரின் அந்தக் கடுமையான வாசிப்பு உழைப்புக்கு உந்து சக்தியாகவே 'அன்றி' விளங்கினார். நூல்களாகட்டும், கணினியில் இணையத்தளங்கள் மூலமாகட்டும் ஆழமான - கருத்துச் செறிவு நிறைந்த - விடயங்களை பாலா அண்ணனுக்குத் தேடி எடுத்துக் கொடுப்பதே அன்றியின் நாளாந்த பணியில் முக்கிய கடமையாக இருந்தது.

''பாலா தமிழரின் சொத்து (Legacy of Tamils) என்றால், அவரின் ஒரே சொத்து இந்தப் புத்தகங்கள்தாம்!'' - என்றார் திருமதி பாலசிங்கம்.

கொழும்பில் பத்திரிகையாளராகப் பணி புரிந்த காலத்தில் அலுவலகத்துக்கு சுகவீன லீவு போட்டுவிட்டு, விஹாரமாதேவி பூங்கா வில் புத்தக தேவதையை அரவணைத்தபடி அதில் மணிக்கணக்காக லயித்துப் போயி ருக்கும் பாலாவை அவரது அந்நேரத்து நண் பர்கள் இப்போதும் நினைவுகூர்வது வழமை.

அவ்வாறு 'மதியுரைஞர்' என்றும், 'தத்து வாசிரியர்' என்றும், 'அரசியல் ஆலோசகர்' என்றும் விதந்துரைக்கும் நிலைக்கு அறிவை வளர்த்துக்கொண்ட பாலாவை, எனக்கு அளித்த பேட்டிமூலம் ''அரசியல் விஞ்ஞானம் அல் லது அரசமைப்புச் சட்டம் பற்றி அறியாதவர்'' என்ற சாரப்பட நாட்டின் தலைவி சந்திரிகா விமர்சித்திருப்பார் என்றால், அதை வாசித்த பாலாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்ததில் என்ன தவறு இருக்க முடியும்?

***

'உள்ளக சுயநிர்ணய உரிமை' குறித்து எனக்குத் தொலைபேசியில் ஒரு குட்டி விரிவுரையே நடத்தினார் பாலா அண்ணன்.

நான் அரசியல் சந்தேகங்களைக் கிளப்பு வதும், அதற்காக நீண்ட - நெடிய- விளக்கங் களை ஆற அமர - அதேநேரம் ஆற்றோட்ட மான கருத்துச் செறிவோடு - பாலா அண் ணன் எனக்கு அளிப்பதும் அவ்வப்போது இடம்பெறுபவைதான்.

'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிவது' போல, புலிகளின் மதியுரைஞரின் அறிவுத்தேடல், வெளியில் இருக்கும் என் போன்ற பத்திரிகையாளர்களுக்கும் அவ் வப்போது கிட்டுவது பேறுதான்.

சமாதானப் பேச்சுக் காலத்தில் ஒருதடவை வன்னிக்கு வந்து, லண்டன் திரும்பும் வழியில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை ஒட்டிய ஹோட்டலில் ஒரு சில மணிநேரம் தங்கியிருந்தனர் பாலா தம்பதியினர். அவரது அழைப்பைச் செவி மடுத்து அங்கு அவரைச் சந்திக்கச் சென்றிருந் தேன். எனது பத்திரிகைத்துறை நண்பர் ஒருவர் பாலா அண்ணனைத் தாமும் சந்திக்க விரும்புகின் றார் என்று கேட்டதால், பாலா அண்ணனின் அனுமதியோடு அவரையும் அழைத்துச் சென்றிருந்தேன்.

வழமை போல 'அன்றி'யின் அன்பான உபசரிப்புடன் சந்திப்பு ஆரம்பமானது. நான் அரசியல் சார்ந்த கேள்வித் தூண்டில்களைப் போடத் தொடங்கினேன். அது ஒன்றும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பேட்டியல்ல. எனது அறிவுத் தேடலுக்கான விதைப்பு. விளக்கமான பதில்கள், அரசியல் - அரசறிவியல் - விரிவுரை போல ஆற்றொ ழுக்காக பிரவாகமெடுத்து கொட்டிக் கொண்டி ருந்தது பாலா அண்ணனிடமிருந்து.

சுமார் மூன்று மணிநேர 'லெக்சர்' முடிந்த போது பாலா அண்ணன் களைத்துப் போயிருந்தார்.

என்னுடன் வந்த பத்திரிகைத்துறை நண்பருக்கு ஆச்சரியமோ, ஆச்சரியம். மூக்கில் விரலை வைக்காத குறை.

''என்ன ஐஸே பார்க்கிறீர்? ஏன் உவருக்கு (என்னைக் காட்டி) இவ்வளவு நீண்ட 'லெக்சர்' என்று பார்க்கிறீரா? இவர் ஒரு தமிழ்ப் பத்திரிகையாளர். முக்கிய பத்திரிகையாளர். இவருக்குச் சொன்னால் - படிப்பித்தால் - பல லட்சம் தமிழருக்குச் சொன்ன மாதிரி. அதுதான் விளங்கப்படுத்தினனான் '' என்றார்

- வித்தி -

பாலா அண்ணன்.

பாலா அண்ணனை வழியனுப்பிவிட்டு கட்டுநாயக்காவிலிருந்து திரும்பிக் கொண்டி ருந்தோம். எனது பத்திரிகைத்துறை நண் பருக்கு ஆச்சரியம் இன்னும் நீங்கியபாடில்லை.

''மிக ஆழமான மனிதர் பாலா!'' - என்றார் அவர்.

(22ஆம் பக்கம் பார்க்க)


டுபாயில் வெற்றிடங்கள்
யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

விதிகளும் நிபந்தனைகளும்

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்டு(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் இருவழி விமானப் பயணச் சீட்டு வழங்கப்படும். தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

* வங்கிக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் நவம்பர் 6 லிருந்து 20 வரை
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

* உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் ரோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

01. மருதமுனை - 03. தொலைபேசி: 077-6968684/077-9027572
02. ஆரையம்பதி - 01. தொலைபேசி: 077-9911503/065-2247715
03. பெரியபோரதீவு(பம்மியடியூற்று) தொலைபேசி- 077-5000474/065-4921964
04. மருதமுனை - 04. தொலையபசி: 077-7405996/067-2220877
05. கிரான்குளம் -08. தொலையபசி: 077-5024029/060-2641572
06. சூராவத்தை. தொலைபேசி: 077-524554/077-3405643



COMPUTERISED ACCOUNTING training ???
don't get caught to 1-2 week courses which rush through software packages and you are left with nothing
be wise... be a...
SMART COMPUTERISED ACCOUNTANT
from a basic beginner's level to an advanced intermediary level
4
leading industry accounting packages .....
MYOB /Accpac /Tally /Quickbooks
- Small and Friendly batches
- Unlimited practical hours
- World class software packages
Only
Rs. 5000 /=
(all inclusive)
Governor's Academy of Management Studies
376 Galle Road, Colombo 03
Tel - 2 378 371
governors@sltnet.lk
Call - 0777 99 44 00

சுடர் ஒளி
நவ.11 - நவ.17. 2007
85, ஜெயந்தமல்லிமாரார்ச்சிமாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

# சர்வதேசமயமாகும் கருணா விவகாரம்

இலங்கையில் அரசுப் படைகளுடன் இணைந்து துணைப் படைக்குழு ஒன்றை இயக்கி வந்த கருணா, பிரிட்டிஷ் குடிவரவு அதிகாரிகளினால் பிரிட்டனின் கென்சிங்டன் பகுதியில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவரை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும்-

யுத்தக் குற்றம் இழைத்தது தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றம் ஒன்றின் முன் இவரை நிறுத்தவும் - சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் அவதானிப்பு மையம் ஆகியவை சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றன.

சித்திரவதைகள், கொலைகள், சிறுவர் கடத்தல்கள் தொடர்பாக கருணாவை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான சட்ட வாய்ப்புகள் குறித்து இந்த மனித உரிமை அமைப்புக்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் இலங்கை அரசு மற்றும் ஒரு தடவை சர்வதேச நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கருணா போலி இராஜ தந்திரக் கடவுச் சீட்டு ஒன்றைப் பயன்படுத்தி பிரிட்டன் சென்றிருப்பதும்-

இந்த போலி கடவுச் சீட்டு சிங்கள நபர் ஒருவரின் பெயரில் இலங்கை அரசினாலேயே கருணாவுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்திருப்பதுமே- சர்வதேச அரங்கில் இலங்கை அரசு எதிர்நோக்கும் புதிய நெருக்கடிக்குக் காரணம். ஆகவே இலங்கை அரசே கருணாவை களவாக பிரிட்டனுக்கு அனுப்பி இருக்கிறது, அதிலும் போலியான பாஸ்போர்ட் ஒன்றைப் பெற்றுக் கொடுத்து. அதனால்தான் கருாணாவை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் முயற்சிக்கு எதிராக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சுறுசுறுப்பாக செயற்பட்டு வருகின்றன.

வழமையாக போலி பாஸ்போட் மூலம் பயணம் செய்து பிடிபடும் ஒருவர் நாடு கடத்தப்படும் பட்சத்தில் அவர் நாடு திரும்பியதும் விமான நிலையத்தில் கைதாகி அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும். ஆனால், கருணா விடயத்தில் இதனை எதிர்பார்க்க முடியாது. கருணா திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று நிச்சயமாக நம்பலாம். அரசாங்கமே அவரை களவாக அனுப்புகிறது. ஆகவே எப்படி விசாரணை நடத்த முடியும்?

தற்பொழுது இடம்பெறும் ஆட்கடத்தல்கள், கொலைகள், சித்திரவதைகள், விலைவாசி உயர்வுகள் எல்லாவற்றுக்கும் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தையே அரசு காரணம் காட்டி சர்வதேச சமூகத்திடம் நியாயம் தேட முயற்சிக்கிறது. கருணா விவகாரத்திலும் இப்படியான ஒரு நியாயமே கற்பிக்கப்படலாம்.

ஆகவே கருணா திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பது தெளிவு.

2004ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்று அரச படைகளுடன் துணைக் குழுவாக இணைந்தது மூலம் தமிழ்த் தேசத்துக்குப் பெரும் துரோகம் செய்தவர் கருணா.

கருணா மீது பல்வேறு மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பிரிட்டனிலோ அல்லது சர்வதேச நீதிமன்றத்திலோ கருணாவை நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும் என்ற சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் முயற்சிக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்க வேண்டியது அவசியம்.

## குழந்தைகள் மீதான அரச பயங்கரவாதத்தைத் தோலுரிக்கும்

# 'It is a Kfir'



அழகிய நீலவானத்தின் நடுவே திரளான மேகக்கூட்டங்கள் ஒன்றையொன்று முத்தமிட்டபடி அசைந்து கொண்டிருக்க, மெல்லிய ஆனால், அடர்த்தியான இசை பின்னணியில் பரவ அந்த ரம்மியமான சூழலையே தீவிரப்படுத்துவதுபோல் சமகாலத்திலேயே கறுப்புப்பொருள் ஒன்று ஊடறுத்துக்கொண்டு விரைந்து சென்று மறைகிறது. அது ஒரு பறவையா? இல்லை ஒரு விமானமா? என்று பார்வையாளன் சற்று குழம்பி தடுமாறி உன்னிப்பாக கவனிக்க முற்படும் போதே அது முழுவதுமாகக் காணாமல் போய்விடுகிறது.

அடுத்து எம் கண்முன் விரிவது சிதறி சின் னாபின்னமாகி கிடக்கும் ஒரு சிறிய கட்டடச் சிதறலின் நடுவே 'unicef' என்று எழுதப்பட்ட சில பதாகைகளைத்தான். பார்வையாளனுக்கு இப்போது வானத்தில் தோன்றி மறைந்து ஒரு விமானம் போல்தான் இருக்கிறது என்ற சந்தேகம் லேசாக மூளையில் பொறி தட்டத்தொடங்கவும் அதை நிரூபணம் செய்வது போல் திரையில் 'It is a Kfir' என்ற வாசகங்கள் தோன்றி மறைகின்றன.

கடந்த 9 ம் திகதி அனைத்துல உளவள நல நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட ஆவணப்படத்தின் முதல் 30 வினாடி காட்சிப்படுத்தல் குறித்த விவரணமே மேற்குறிப்பிடப் பட்டுள்ளது. சிறிலங்காவின் வானூர்தித் தாக்குதல்களினால் சிறார்களின் உளவுறன் எத்தகைய பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் முகமாகவே இவ்விவரணப் படம் தயாரிக்கப்பட்டிருப்பதாக சமாதானச் செயலகம் அறிவித்திருக்கின்றது. 10.30 நிமிட நேரம் இயங்கும் இவ் ஆவணப்படம் அதன் நோக்கத்தையும் வெற்றியையும் முதல் 30 விநாடியிலேயே மிக எளிதாக சாதித்துவிடுகிறது. ஏனெனில், படம் தொடங்கி அந்த 30 விநாடியை கடக்கும் இந்த கால இடைவெளிக்குள்ளேயே பார்வையாளன் அடையும் பதற்றங்கள் மிகத்தீவிரமானவை. ஒரு தரமான உலகத்தரத்திற்கு நிகரான ஆவணப்படத்திற்கேயுரிய ஆரம்பம் இது.

இவ் ஆவணப்படம் குறித்த தெளிவான புரிதலுக்கு நாம் இன்றைய ஈழச் சூழலின் உளவியல் சார்ந்த சில அவதானங்களை பதிவு செய்யும் அதே வேளை, அதையொட்டி வேறுசில காரணிகளைப்பற்றியும் பேசுவது பொருத்தப்பாடானதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஏனெனில் இவ் ஆவணப்படம் தன்னூடாக உலகத்தின் முன்வைக்கும் கேள்விகளும் சந்தேகங்களும் மிக முக்கியமானவை.

சிறுவர்களின் உளவுறன் பாதிப்பு குறித்து வெளிப்படையாகப் பேச முற்படும் இப்படம் மறைபொருளாக பேசுவது ஏராளம். அதுவே இப்படத்தை சிறந்த அரசியல் செயற்பாடாக- ஆவணமாக உலகத்தின் மீதான விமர்சனமாக தன்னை உயர்த்திக்கொள்ள வழி சமைத்திருக்கிறது.

அது தன் வழியே ஒரு இனத்தின் மீதான பிறிதொரு இனம் செலுத்தும் வன்முறை குறித்துப் பேசுகிறது. ஓர் இனத்தின் விடுதலை குறித்து பேசுகிறது. அரச பயங்கர வாதம் குறித்து பேசுகிறது. போர் தர்மம் குறித்துப் பேசுகிறது. தொண்டு நிறுவனங்களின் இருப்புக் குறித்துப் பேசுகிறது. போர்த்தளபாடங்களின் தோற்றத்தையும் மூலத்தையும் குறித்துப் பேசுகிறது- அதன் இலக்குகள் தொடர்பான கேள்விகள் குறித்து பேசுகிறது. பட்டியலிட்டால் அது நீண்டுகொண்டேயிருக்கும். மொத்தத்தில் மனித உரிமை, உலக அமைதி, நாகரிகம், மனித விழுமியம் குறித்து வாய்கிழியப் பேசும் உலக மனச்சாட்சியின் முன் அதன் அசிங்க முகத்தை தோலுரித்து நிர்வாணமாய் நிற்கிறது.

'கிபிர்' யுத்த விமானங்களின் இரைச்சலைக் கேட்டு பதறியடித்துக் கொண்டு பதுங்கு குழிகளை நோக்கி ஓடும் சிறார்கள் எழுப்பும் 'அலறல்' அந்த சிறார்களுடையதா? அல்லது உலகத்தை நோக்கிய ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களுடைய அலறலா அது? ஏனெனில், படம் முடியும் போது பதுங்கு குழிகளுக்குள் இருந்த படி கண்ணீருடனும் நடுக்கத்துடனும் வெறித்துப் பார்க்கும் ஒரு சிறுமியின் ஏக்கப் பார்வை இந்தக் கேள்வியாக மனவரங்குகளில் வந்து ஒட்டிக் கொள்கிறது.

உலகதின் பரவலான பார்வைக்கும் கவனத்துக்கும் இப்படம் போய்ச் சேருமாயின் நிச்சயமாக உலகத்தின் மனச்சாட்சியில் ஓர் உறுத்தலாக தங்கிவிடும் 'It is a Kfir'.

கனவுகளும், கற்பனைகளும் இல்லாமல் ஒரு மனிதனால் இன்றைய நவீன வாழ்வை கடந்து செல்லமுடியாது. ஏனெனில், அந்தளவுக்கு வாழ்வு தரும் நெருக்கடிகள் சக மனிதர் களால் - சமூக நிறுவனங்களினால் வன்முறையாக வெளித்தள்ளப்படுகின்றன. இதன் வழி ஒரு சராசரி மனிதனின் ஆசைகள், ஏக்கங்கள் எல்லாம் இந்த சமூகத்தினால் ஈவிரக்கமின்றி நிராகரிக்கப்படுகின்றன. எனவே, இந்த நிலையிலிருந்து எழும் வெறுமையையும் தனிமையையும் தாண்டி மீதியுள்ள வாழ்வை கடந்து செல்ல கனவுகளையும் கற்பனைகளையும் கூடவே துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

ஒரு சராசரி மனிதனின் நிலையே இவ்வாறிருக்கும் போது குழந்தைகளின் கதையைக் கேட்கவா வேண்டும்! குழந்தைகளின் உலகம் கனவுகளாலும் கற்பனைகளாலும் சூழப்பட்டது. அந்த உலகம் இயல்பாகவே விசாலமானது. எல்லைகளற்றது. அந்த வெளிக்குள் அனுமதியின்றி பிரவேசிக்கும் அந்நியர்கள் யாருமே அக்குழந்தைகளின் உலகத்தில் வன்முறையாளர்களாக மாறிவிடுகின்றார்கள்.

குழந்தைகளின் இத்தகைய சிந்தனை உலகத்தின் மீது வன்முறையைப் பிரயோகிக்கும் முதல் குற்றவாளிகளாக அக்குழந்தைகளினது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிறுத்தப்படுவது இந்த புரிதலின் அடிப்படையில்தான்.

குழந்தை வளர்ப்பு என்பது இன்று ஒரு சிக்கலான விடயமாக பரவலான விவாதத்துக்கு உள்ளாகியுள்ளது. இன்றைய நவீன உலக ஒழுங்கை உள்வாங்கி குழந்தை வளர்ப்பு - அவற்றின் நடத்தைகள் தொடர்பாக சமூக விஞ்ஞானிகள் தொடர்ச்சியாக தெரிவித்து வரும் கருத்துக்கள் குறிப்பான கவனத்துக்குரியவை. அதன் ஒட்டுமொத்த சாரம் என்னவெனில் குழந்தைகளை அவர்களின் போக்கிலேயே விட்டுவிடுவதுதான் என்பதே ஆகும். குடும்பம், சமூகம், பாடசாலை என்று எந்த உறவுகளின் - தொடர்புகளின் அடிப்படையிலும் அவர்கள் கட்டுப்படுத்தப்படுவதை நிராகரிக்கிறது மேற்படி ஆய்வுகள்.

மேற்குலக குழந்தை வளர்ப்பும் சிறுவர் நலன் பேணலும் இத்தகைய புரிதலின் அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், மூன்றாம் உலக நாடுகளில் இப்படியான நடைமுறைகள் கைக்கொள்ளப்படுவதில்லை என்பது ஒரு புறம் இருக்க, அப்படியொன்று இருப்பதே பல பேருக்குத் தெரியாது என்பதுதான் உண்மை. 'தந்தை', 'ஆசிரியர்' என்பவையெல்லாம் அதிகாரத்தின் மாற்று வடிவங்களாகவே இன்னும் தொடர்கின்றன.

இதன் காரணமாக குழந்தைகளின் கற்பனை சிறகுகள் கத்தரிக்கப்பட்டு சிந்தனை வறுமைக்குள் தள்ளப்படுகிறார்கள். 'அப்பா அடிப்பார்' என்பதே குழந்தைகளின் மனவுலகை அதிரச் செய்யும் என்று சொல்லப்படும் ஒரு

**பிரான்ஸிலிருந்து**
**பரணி கிருஸ்ணரஜனி**

சூழலில், கூடவே 'கிபிரும் அடிக்கும்' என்பது எத்தகைய விளைவைக் கொடுக்கும். இதைத்தான் 'It is a Kfir' உரத்த குரலில் பேச முற்படுகின்றது.

இனம், மதம், மொழிதாண்டி குழந்தைகளின் உல்லாசமான வெளிவானமும் அதன் நீலமும். குழந்தைகளின் மனவுலகத்தைப் போலவே எந்தவித பாசாங்குகளுமின்றி விரிந்து கிடக்கிறது வானம். அவர்களின் கற்பனைச் சிறகுகள் விரியும் ஆரம்பப் புள்ளியே வானம்தான். குழந்தைகள் காலம் காலமாக வானத்திலிருந்து 'அம்புலிமாமா' இறங்கி வருவதற்காகவும், நட்சத்திரங்கள் தேவதைகளாக மாறி இறங்கி வருவதற்காகவும் தவம் கிடக்கிறார்கள்.

'அம்மாக்கள்' அதைக்காட்டியும் - கதை



பேசியும் சோறூட்டிய நிஜம் அல்லவா அது. அது எப்படிப் பொய்த்துப் போகும்! குழந்தைகள் காத்திருந்தார்கள். அம்மாக்களின் கதை அம்பலமேறியது. வன்னியில், வாகரையில், காசாவில், டார்பரில், பாக்தாத்தில், காபூலில் இருக்கும் அம் மாக்கள் எல்லோருமே பொய் அம்மாக்களாகினர்.

'It is a Kfir' அம்மாக்களை பொய்யாக்கிவிட்டிருக்கிறது. இப்போது இந்தக் குழந்தைகளிடம் இருக்கும் ஒரே கேள்வி அம்மா ஏன் பொய் சொன்னா? இந்தக் கேள்வியே எல்லைகள் தாண்டி மொழிகள் தாண்டி அரச பயங்கரவாதத்திற்கெதிரான ஆக்கிரமிப்பிற்கெதிரான, குழந்தைகள் மீதான வன்முறைக்கெதிரான ஒரு குறியீடாக இந்த ஆவணப்படம் தன்னை நிறுவிக்கொள்கிறது. ஒரு படைப்பாக்க முயற்சியாக தன்னை முழுமையாக நிறுவிக்கொள்ளும் இடம் இது.

உலக அளவில் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு ஒன்றை இந்த ஆவணப்படம் திறந்து விட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான விடயம். நிஜமான படைப்புக்கு மொழிகிடையாது. எல்லைகளும் கிடையாது. ஓர் ஆப்கானியரோ, ஈராக்கியரோ வேறு ஒடுக்கப்பட்ட இனக்குழுமத்தைச் சேர்ந்த யாராயினும் இப்படத்தோடு தம்மைப் பொருத்திப் பார்க்கமுடியும். இம்மனவெழுச்சியே இந்த ஆவணப்படத்தை அதன் நோக்கத்தையும் தாண்டி அடுத்த கட்டத்தை நோக்கி அதனை நகர்த்திச் செல்கிறது. ஒரு பல்குரல் தன்மையை அடையாளப்படுத்துகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களின் விளிம்புநிலை மக்களின், கலைவடிவங்கள் முழுமையாவது இப் பன்முகப்தன்மையூடாகத்தான். இந்தவகையில், 'It is a Kfir' நுண்தள அரசியலைப் பேசும், பன்முகத்தளத்தில் இயங்கும் ஒடுக்கப்பட்டோருக்கான ஒருகலை வடிவம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

சினிமா என்ற வெகுஜன ஊடகம் வெறும் பொழுதுபோக்கு என்ற வட்டத்துக்குள் குறுகிப்போனதன் காரணமாக ஒரு மாற்றுத் தீர்வைத் தேடியபோது கிடைத்ததுதான், தீவிர சினிமா, மாற்று சினிமா என்னும் கலைவடிவங்கள். அவற்றைக்கூட, வணிக சினிமா உள்வாங்கி செரிக்கத்தொடங்கிய போதே

(22ஆம் பக்கம் பார்க்க)


## உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?!...

மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகின்றீர்களா....



# இதோ! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து....


### HOME GYM



கட்டுமஸ்தான உடலினைப் பெற்றுக்கொள்ள ஆர்வமுடைய அனைவருக்கும் இது உகந்தது. இதனைப் பயன்படுத்துவதனால் உடற்பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லுகின்ற நேரம் மற்றும் பணம் போன்றவற்றை குறைத்துக்கொள்ளலாம். இது ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. இத்துடன் உடற்பயிற்சி பற்றிய அறிவூட்டும் புத்தகமொன்றும் இலவசமாக வழங்கப்படும்.

### E-TRAINER

இது Fat Burning (கொழுப்பினைக் கரைத்தல்) பயிற்சி உபகரணமாகும். உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கொலஸ்ரோல் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றினால் துன்பப்படுபவர்களுக்கு இது பயன் தரவல்லது. தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதனால் நல்லதொரு பிரதிபலனை நீங்கள் எதிர்பார்க்கலாம். நீச்சல், நடைபயிற்சி போன்றவைகளுக்கு ஒப்பான பயிற்சியினை இதனால் செய்துகொள்ளலாம். இக்கருவி ஆண், பெண் இருபாலாருக்கும் மற்றும் சகல வயதினருக்கும் உகந்தது.



ரூ. 9900/-

### AB SHAPER



இக் கருவி உங்களின் வயிற்றுப் பகுதியின் மிதமிஞ்சிய தசைப் பகுதியை குறைக்கவும் உங்களின் இடையினை கவர்ச்சியாகவும் கச்சிதமாகவும் வைத்திருக்க உதவும். இத்துடன் உடற்பயிற்சி விதிமுறை உள்ளடங்கிய ஒளிப்பதிவு நாடாவும் புத்தகமும் இலவசமாக வழங்கப்படும்.

ரூ. 4900/-

### ELECTRONIC TREADMILL



ரூ. 49,000/- ரூபாவிலிருந்து


### TOTAL TRAINER (TOTAL GYM)



இது உடலின் அனைத்து வகையான உடற்பயிற்சியினை மேற்கொள்ள உதவும். நாளொன்றுக்கு 45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதனால் உங்கள் விருப்பம் போல் உடலின் அமைப்பை மாற்றி கவர்ச்சியாகவும் கட்டுக்கோப்பாகவும் வைத்துக்கொள்ளலாம்.

இந்த உடற்பயிற்சி கருவியினை உபயோகிப்பதனால், நல்லதொரு பிரதிபலனை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். இத்துடன் உடற்பயிற்சி விதிமுறை உள்ளடங்கிய ஒளிப்பதிவு நாடாவும் புத்தகமும் இலகுவாக வழங்கப்படும்.

### PUNCHING BAG, GLOVES



### AB PRO

ரூ. 7900/-



இவ் உடற்பயிற்சிக் கருவியை பயன்படுத்துவதால் உங்களின் வயிற்றுப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் மிதமிஞ்சிய தசையினை குறைத்து உங்கள் இடையினை கச்சிதமாகவும் கவர்ச்சியாகவும் மிகக் குறுகிய கால உடற்பயிற்சியினால் பெற்றுக்கொள்ளலாம். இக்கருவியுடன் உடற்பயிற்சி விதிமுறைகள் அடங்கிய CD மற்றும் புத்தகமும் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

### BENCH





**HOT LINE: 5 652 652**

VISA | HSBC | SEYLAN

தவணைக் கட்டடண முறை

**Eser Marketing (Pvt) Ltd.**

| | |
|---|---|
| இராஜகிரி- 997/9, கோட்டை வீதி, வெலிகடை | தொ: 071 4440555, 5347632, 5357632. |
| மொறட்டுவை - 649,காலி வீதி ராவதாவத்தை. | தொ: 5528888. |
| நுகேகொடை - 213, ஹைலெவல் வீதி. | தொ: 4304787, 4407242, 5529888. |
| கண்டி - 266, பேராதெனிய வீதி. | தொ: 081 5673333. |
| குருநாகல் - 151/2, விக்கிரம கட்டிடம், கதுருகஸ் சந்தி, கொழும்பு வீதி. | தொ: 037 5672562. |
| களனி - 374, கண்டி வீதி, தலுகமை. | தொ: 5552008. |
| மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. | தொ: 060 2652848, 077 3512341. |
| காலி - 66, கொழும்பு வீதி, கலுவெள்ள. | தொ: 091 5457777. |
| இரத்தினபுரி - 70 சீ, பண்டாரநாயக்க மாவத்தை. | தொ: 045 5678887. |
| நீர்கொழும்பு - 433, கல்கந்தை சந்தி, கொழும்பு வீதி. | தொ: 031 5678880. |



# அறிவியல்

ரி.கே.ஆர்






## ரோபோ டைனோசர்

செல்லப்பிராணிகளாக நம் வீடுகளில் வளர்க்கும் நாய், பூனை, முயல், காதல் பறவைகளால் நமக்கு எவ்வளவோ மகிழ்ச்சியும் மன அமையும் கிடைக்கின்றது. இவற்றால் சில பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால், இந்த தாய்வான் நாட்டுபெண் கொஞ்சிக்கொண்டிருக்கும் டைனோசர் ரோபோவால் எந்த பிரச்சினையும் இருக்காது. செல்லப்பிராணியைப் போல இதைக் கொஞ்சி மகிழலாம். தாய்வான் தேசிய அறிவியல் கல்வி மையத்தில் நடை பெற்ற ரோபோ கண்காட்சியில்தான் இந்த கொஞ்சல்.



## ஜில்லுனு ஒரு ஆராய்ச்சி

பிரான்ஸை சேர்ந்த 'ஜீன் லூயிஸ் எடியன்னி' என்ற ஆராய்ச்சியாளர் வட துருவத்தை ஆராய திட்டமிட்டு உள்ளார். இதற்காக விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட விமானம் பயன்படுத்தப்பட உள்ளது. அது பிரான்ஸில் உள்ள மார்செய் நகர் அருகே உள்ள மரிக்னானோ விமான நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டுள்ளது. மார்ச் 1 ஆம் திகதி இந்த சிறப்பு விமானம் புறப்படும். பேர்ளின், சுவீடன், நோர்வே வழியாக வடதுருவத்தை சென்றடையும். அங்கு பனி உருகி வரும் நிலையில் பனிப்பாறைகளின் தடிமன் குறித்து ஒரு மாதகாலம் ஆராய்ச்சி செய்வதற்கு ஜீன் திட்டமிட்டுள்ளார்.

## காரீபூ மான்கள்

அழிந்து வரும் அரிய பனிமலைப் பிரதேச காரீபூ மான்கள் கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா பனி மலைப் பகுதிகளில் மட்டுமே வசிக்கின்றன. இவற்றைப் பாது காக்கவும், இனப் பெருக்கம் செய்யவும் கனேடிய அரசு திட்டமிட்டுள்ளது. மற்ற விலங்குகளிடம் இருந்து காரீபூ மான்களைக் காக்க 21.8 லட்சம் ஹெக்டேயர் பகுதியை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள 18 லட்சம் ஹெக்டேயருடன் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 3.8 லட்சம் ஹெக்டேயர் நிலம் கூடுதலாக ஒதுக்கப் படும். இதன் மூலம், பனிமலை மான்கள் சுதந்திரமாக வசிக்கவும், அதிக இனப்பெருக்கம் செய்யவும் வழியேற்படும் என்று வன விலங்கு ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



## காஞ்சி மாநகரம்

நகரங்களிலேயே சிறந்த நகராக காஞ்சி குறிக்கப்படுகிறது. பஞ்ச பூத தலங்களுள் நிலத்துக்குரிய தலமாக உள்ளது. ஒரு காலத்தில் காஞ்சி நகரம் கல்வியில் சிறந்து விளங்கியதாம். 'காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்' என்ற பழமொழி,



காஞ்சிபுரம் நெசவுத் தொழிலில் அனைவருக்கும் வேலை வாய்ப்பினைத் தரும் ஊர் என்பதை உணர்த்துகிறது. காஞ்சிபுரம் குறித்த செய்திகளுக்காக yahoo groups 'kanchi-friends-group' என்ற வெப்சைட் குழு தொடங்கப்பட்டுள்ளது.



## சூரியக் குடும்பத்தில் புதிய கோள்

ஜோன் ஹாப்கின்ஸ் அப்ளைட் பிசிக்ஸ் ஆய்வுகூடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், சூரியக் குடும்பத்தில் புதிய கோள் ஒன்று உருவாகும் நிலையில் தென்படுவதாக அறிவித்துள்ளனர். எச்.டி. 113766 என்ற குறியீட்டுப் பெயரால் அழைக்கப்படும் இந்தப் புதிய கோளுக்கு இன்னும் பெயர் எதுவும் சூட்டப்படவில்லை. சூரியக் குடும்பத்தில் 424 ஒளி ஆண்டுகள் தொலைவுக்கு அப்பால், 100 லட்சம் முதல் 160 ஆண்டுகள் வயது கொண்ட இந்தக்கோள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது புவியைப் போன்று நீரும் காற்றும் கொண்ட, உயிரினங்கள் தோன்றுவதற்கு ஏற்ற சூழல் கொண்டதாக அமைந்துள்ளது என்று இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கோள் முழுமையாக உருவாகி முடிய 10 கோடி ஆண்டுகள் வரை ஆகலாம். அடுத்த 100 கோடி முதல் 200 கோடி வரையான காலகட்டத்தில் அங்கே டைனோசர் போன்ற உயிரினங்களும் உருவாகலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆமை

ஆமைக்கறி மற்றும் ஆமை ஓட்டில் மருத்துவ குணம் இருக்கிறது என்று எந்த நேரத்தில் எந்த புண்ணியவான் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால், அதன் விளைவாக உலகம் எங்கும் ஆமைக் கடத்தல் நடந்து கொண்டே இருக்கிறது. பாலித்தீவில் உள்ள தேன்பாசர் என்ற இடத்தில் இருந்து பெரிய ஆமை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடல்களுக்கு மத்தியில் இணைப்பு மையம் போல இந்தோனேசியா அமைந்திருக்கிறது. உலகின் ஒட்டுமொத்த ஆமை எண்ணிக்கையில் அதிகமான ஆமைகள் இந்தோனேசியாவில்தான் இருக்கின்றன.



# புரோட்டினெக்ஸ்®

**நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது...**




100%
தாவரப் புரதம்
கொலஸ்ரோல் அற்றது
லக்டோஸ் அற்றது
ஐசோபிலேவோன் அடங்கியது

சூடாகவோ குளிராகவோ பருகலாம்

13 விட்டமின்கள் 11 கனியுப்புக்கள் அடங்கியது
98% கொழுப்பு அற்றது

**புதிய புரோட்டினெக்ஸின் அனுகூலங்கள்-**

நீங்களும் உங்கள் குடும்பமும் ஏனைய போஷாக்குப் பானங்களை விட புதிய புரோட்டினெக்ஸ் இனை ஏன் தெரிவு செய்யவேண்டும். புதியபுரோட்டினெக்ஸ் ஆனது சோயா புரதம் ஐசோலேட் இனை ஆதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச் சிறந்த முறையில் சுகாதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச்சிறந்த முறையில் சுத்திகரிக்கப்பட்ட தாவரதப் புரதம். மேலும் சோயாப் புரதம் ஐசோலேட் ஆனது 90% இற்கும் அதிகமான புரதத்தைக் கொண்டதுடன் புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஏனைய பாற்பொருட்களைப் போலன்றி கொலஸ்ரோல் அற்ற கொலஸ்ரோலைக் குறைப்பதற்கு உதவக்கூடிய, 72 கிராம் புரதம், பீற்றா கரோட்டின், 13 விற்றமின்கள், 11 கனியுப்புக்கள், 2 கிராமிற்குக் குறைவான கொழுப்பு என்பவற்றைக் கொண்டதுடன் முக்கியமாக Isoflavones இனையும் கொண்டுள்ளது. புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஆரோக்கியமான சுகவாழ்விற்கு அவசியமான 22 அமினோ அமிலங்களைக்கொண்ட ஒரேயொரு தாவரப் புரதம் என்பது மட்டுமன்றி ஏனைய அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

**Isoflavones என்பவை யாவை?**

இவை தாவரங்களில் காணப்படும் (phytochemical) என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒட்சியேற்றத்திற்கு எதிராகச்செயற்படக்கூடிய தன்மையைக் கொண்டவை. அன்டி ஒக்ஸிடன்ட் (Antioxident) என்பவை சூழல் மாசு, சூரிய ஒளி மற்றும் எமது உடல் செயற்பாட்டால் ஏற்படும் கலச் சேதத்தினைத் தடுக்க அல்லது மீள் உருவாக்க வல்லவை. மேற்குறிப்பிட்ட காரணிகளால் உடலில் ஒட்சியேற்றம் ஏற்படுவதால் அபாயகரமான இரசாயனப் பதார்த்தங்கள் (free radical) உருவாகின்றன. இவை அதிக தாக்குதிறன் கொண்டதால் DNA யினை சேதப்படுத்தி கல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதுவே புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணமாகும். இவ் இரசாயனப் பதார்த்தங்கள் உடலின் நோயெதிர்ப்புத் தன்மையை செயலிழக்க வல்லது. மேலும் இவை முதுமையடைதலின் போது ஏற்படும் மாற்றங்களுக்கும் காரணமாக விளங்குகின்றது.
புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது free radical உருவாகும் இரசாயனத் தாக்கத்தினை தடுப்பதுடன் உருவாகி உள்ளவற்றையும் அழிக்கவல்லது.

**புதிய புரோட்டினெக்ஸ் இன் மூலம் உடல் ஆரோக்கியத்திற்கான அனுகூலங்கள் யாவை?**

1. இழைய மற்றும் தசை வளர்ச்சி
சோயாப்புரதம் ஆனது குளூடமின், ஆர்ஜனின் லைசின் மற்றும் கிளை- சங்கிலி அமினோ அமிலங்கள் அடங்கலாக பல அமினோ அமிலங்களையும் விலங்குப் புரதத்தினையும் விட அதிகளவில் கொண்டிருப்பதால் இழைய வளர்ச்சிக்கு உன்னதமானது. ஆர்ஜனின் ஆனது தசை விருத்திக்கு மிக முக்கியமானதுடன் மேம்படுத்தப்பட்ட நோயெதிர்ப்புத் தன்மைக்கும் உதவுகின்றது.

2. பீற்றா கரோட்டின் அனுகூலங்கள்-
புரேட்டினெக்ஸ் பீற்றா கரோட்டினைக் கொண்டுள்ளது. இதன் முக்கிய அனுகூலம் அன்டி ஒக்சிடென்ட் (Antioxidant) ஆகத் தொழிற்படுவது. இது விற்றமின் A,E யினைப் போன்று நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யக்கூடியது. இது free radical இனை நடுநிலையாக்குவதன் மூலம் கலங்களைப் பாதுகாக்கவல்லது. Free radical ஆனது ஒட்சியேற்றம் என்னும் செயற்பாட்டின் மூலம் உடலைத் தாக்க வல்லது. இச் செயற்பாட்டை பீற்றா கரோட்டின் தடுப்பதன் மூலம் நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யும். ஆய்வுகளின் படி பீற்றா கரோட்டின் ஆனது புற்றுநோயைத் தடுக்கவல்லது. விற்றமின் A யானது நுரையீரல் இழையத்திற்கு போஷனையை வழங்குவதன் மூலம் புற்றுநோயை தடுக்கவல்லதுடன் தொற்று நோயிலிருந்தும் பாதுகாக்கும். பீற்றா கரோட்டினானது கொலஸ்ரோலின் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் நாடிகளில் கொலஸ்ரோல் படிவதைத் தடுக்கின்றது. அத்துடன் பீற்றா கரோட்டினானது உடலிலுள்ள T-கலங்களினை வலிமையாக்குவதன் மூலம் HIV தாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

3. இருதய நோய் அபாயத்தைக் குறைக்கின்றது-
புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது LDL இனைக் குறைப்பதினாலும் இரத்தம் உறைதலை குறைப்பதனாலும் மாரடைப்பு மற்றும் பாரிசவாத அபாயத்தைக் குறைக்கின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 25 கிராம் சோயாப் புரதம் 9 வாரங்களுக்கு உட்கொள்வதன் மூலம் சராசரி 5% LDL குறைவடைகின்றது. மேலும் அதிகளவு LDL உள்ளவர்களில் 11% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. (ஒவ்வொரு 10 % முதல் 15 % LDL வீழ்ச்சிக்கும் 20% முதல் 25% வரை மாரடைப்பு அபாயம் குறைவடைகின்றது)

1999ம் ஆண்டு FDA என்னும் அமைப்பு அனுமதியளித்ததன்படி கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் குறைவான உணவிற்கு மேலதிகமாக 25 கிராம் isoflavones அடங்கிய சோயாப் புரதத்தினை உட்கொள்வதால் மாரடைப்பு அபாயத்தினைக் குறைக்கின்றது.

4. புற்றுநோய்க்கெதிரான பாதுகாப்பு-
புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது மார்பகப் புற்றுநோய் கருப்பை புற்றுநோய் முன்னிலைச் சுரப்பி புற்றுநோய் போன்ற ஹோர்மோன் சம்பந்தப்பட்ட புற்றுநோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்கின்றது. isoflavones ஆனது புற்றுநோய்க்கெதிரான மருந்துகள் செயற்படும் அதே முறையில் செயற்படுகின்றது. சனத்தொகையை ஆதாரமாகக் கொண்ட ஆய்வுகளின்படி உட்கொள்ளப்படும் isoflavones ற்கும் மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைப் புற்றுநோய் அபாயம் குறைவடைவதற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. சோயாப்புரதம் மற்றும் isoflavones செறிவான ஏனைய உணவுகளை உட்கொள்ளும் பெண்களில் கர்ப்பப்பைப் புற்றுநோய் அபாயம் 54% குறைவடைகின்றது.

5. ஒஸ்டியோபொரோஸிஸ் இற்கு எதிரான பாதுகாப்பு-
புரோட்டினெக்ஸில் உள்ள (Soy Protein Isolate) ஆனது உடலில் கல்சியத்தை தக்க வைத்துக்கொள்ளும் தன்மையையும் எலும்புகள் கல்சியத்தை உள்ளெடுக்கும் தன்மையையும் மேம்படுத்துகின்றது. அத்துடன் isoflavones ஆனது எலும்பு இழப்பு எலும்பு முறிவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தி ஒஸ்டியோபொரோஸிஸ் ஏற்படுவதைத் தடுக்க உதவுகின்றது. அத்துடன் isoflavones புதிய எலும்புகள் உருவாகுவதற்கு உதவுவதற்கான சான்றுகளும் உள்ளன. ஆய்வுகளின் படி நாள் ஒன்றுக்கு 40g சோயா புரதம்உட்கொள்ளும் மாதவிடாய் நிரந்தரமாக நின்றுபோன (இறுதி மாதவிடாயின்பின்) பெண்களின் முதுகெலும்பு கனியுப்பு அடர்த்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதுவே ஒஸ்டியோபொரோஸிஸில் கூடுதலாக பாதிக்கப்படும் எலும்பு.

6. இறுதி மாதவிடாயின் பின்பும் அதற்கு முன்பும் ஏற்படும்-
அறிகுறிகளைக் கட்டுப்படுத்துகின்றது. புரோட்டினெக்ஸிலுள்ள isoflavones ஆனது உடலின் ஈஸ்ரஜன் குறைவடையும் அல்லது மாறுபடும் சந்தர்ப்பங்களில் அதனைக் கட்டுப்படுத்த உதவுவதன் மூலம் இறுதி மாதவிடாய் (நிரந்தரமாக நின்றுபோன) மற்றும் அதற்கு முன்பான அறிகுறிகளைக் குறைக்க உதவுகின்றது.

7. முன்னிலைச் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கெதிராகச் செயற்படுகின்றது-
புரோட்டினெக்ஸ் போன்ற சோயா செறிந்த உணவுகளை உட்கொள்வதால் ஆண்களில் முன்னிலைச் சுரப்பி பெரிதாவது தடுக்கப்படுகின்றது. ஆண்களில் வயது முதிரும்போது முன்னிலைச் சுரப்பியும்பருமனில் பெரிதாவதால் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிக்கும் போது சிரமம் போன்றவை ஏற்படக்கூடும்.

8. Endometriosis இற்கு எதிராகச் செயற்படுகின்றது-
Endometriosis என்பது அசாதாரணமாக கருப்பைச் சுவர் வெளிப்புறமாக தடிப்படையும் செயற்பாடு. இதன் போது வயிற்றில் வலி ஏற்படும். புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது ஈஸ்ரஜனின் தொழிற்பாட்டை மேம்படுத்துகின்றது.

**Manufactured by:**
**Astron Limited.,**
**688, Galle Road, Ratmalana, Srilanka.**
**Tel: 2636741, 5566741 Fax: 2636173**
**E-mail: astron@astron.lk**
**www.astron.lk**




ஆறு மணி பார்ட்டிக்கு ஐந்து மணிக்கே ஹரிபிரகாஷின் வீடு களை கட்டியது. தெரிந்தவர், அலுவலகத்தில் வேலை செய்பவர் ஒவ்வொருவராய் வரத் தொடங்கினர். அலுவலகத்தில் உயர் பதவி கிடைத்ததற்கு இந்த பார்டியை அவர், மனைவியின் வற்புறுத்தலுக்காக ஏற்பாடு செய்தார். அவர் மனைவி, வந்தவர்களை முகம் முழுவதும் புன்னகையாக உபசரித்தாள். அவருடைய அப்பாவும், அம்மாவும் சமையல் அறையில் நின்று தேவை யானதை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

ஹரிபிரகாஷின் கம்பெனி எம்.டி. வர, அவரை வாசல் வரை மனைவியுடன் சென்று வரவேற்றார். அவர் வந்ததும் பார்ட்டி களை கட்டியது. எம்.டி.க்கு மனைவி, தாய், தந்தை ஆகியோரை அறிமுகம் செய்தார்.

"உங்க பையனை பெற்றது நீங்க செய்த புண்ணியம். அவருடைய அக்கறை, ஒழுக்கம் இதெல்லாம் இருந்ததால் தான் அவருக்கு இவ்வளவு சின்ன வயசில இந்தப் பதவி கிடைச்சிருக்கு. உங்களோட வளர்ப்பினால் தான் இதெல்லாம் வந்திருக்கும்." என எம்.எடி. கூற,

"அதெல்லாம் இல்லை ஸேர்... அவனுடைய உழைப்புத்தான் இந்த உயர்வுக்கு காரணம்." என அப்பா கூற, ஹரிபிரகாஷ் நெகிழ்ச்சியுடன், "நம்ம கையில என்ன இருக்குதுங்க ஸேர்.... எல்லாம் ஆண்டவனோட புண்ணியம். நான்இந்த நிலைமைக்கு வரக் காரணமே என்னோட அப்பா, அம்மா கஷ்டமும்தான். அவங்க கஷ்டப்பட்டு படிக்க வைக்கலை என்றால் என்னால இந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது. என்னோட மேல் படிப்பு செலவுக்கு வீட்டை விற்று என்னை படிக்க வைச்சார்.அதனாலதான், என்னோட இந்த வீட்டுக்கு அவரோட பெயரையே வைச்சிருக்கேன்"

"உங்களோட இந்த நல்ல மனசுக்கு நீங்க இன்னும் மேல போவீங்க. கூடிய சீக்கிரம் அதற்கான ஏற்பாடு செய்கிறேன்" என எம்.டி. கூற,

"ரொம்ப சந்தோஷம் ஸேர்" ஹரிபிரகாஷின் அப்பா கூறினார்.

பார்ட்டி முடிந்து அனைவரும் கிளம்பிச் சென்றனர். அப்பொழுது ஹரிபிரகாஷ் அப்பாவிடம் வந்து, "இந்தாங்கப்பா இந்த மாசத்துக்கான பணம். நான் அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன். அம்மாவை பத்திரமா பார்த்துக் கொள்ளுங்கள், நேரமாகுது. பஸ் கிடைக்காமல் போயிடப் போகுது. கிளம்புங்க."என அவசரப்படுத்த மருமகளிடம் சொல்லிக் கொண்டு மனைவியுடன் முதியோர் இல்லம் நோக்கி நடந்தார்.

## பேனா நண்பர்கள்



பெயர் :வே.விஷ்ணுகரன்
வயது: 22
முகவரி: 'யாழ் உணவகம்' லண்டன் ஹோட்டல், யாழ்சாலை, கிளிநொச்சி.
பொழுதுபோக்கு: பத்திரிகை,பேனா நட்பு.



பெயர் : யூ.எல்.முஹம்மட்
வயது : 24
முகவரி: 'நிஸாம் ரைஸ்மில்', மத்திய வீதி, பொத்துவில்-07.
பொழுதுபோக்கு: பத்திரிகை, இணையம், இலக்கியம்.



பெயர் : கேதீஸ் கஜவரதன்
வயது: 21
முகவரி: 252/ஏ, கருக்காய் வீதி, பூநகரி.
பொழுதுபோக்கு: பத்திரிகை,வானொலி, கவிதை.



பெயர் : எம்.எஸ்.எம்.உவைஸ்
வயது : 20
முகவரி: 41, வட்ட விதானை வீதி, 4ஆம் வட்டாரம்,பொத்துவில் - 03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கவிதை,



பெயர் : ஜே.எம்.அக்ரம்
வயது : 24
முகவரி: ரோயல் ரேடர்ஸ், சிலாபம் வீதி, பண்டாரகொஸ்வத்தை.
பொழுதுபோக்கு: பத்திரிகை,பேனா நட்பு.

### பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.
கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.




### முன்கதைச் சுருக்கம்

அந்த நிறுவனத்தில் 1[illegible] வருடமாக மனேஜராக பணி புரிந்தவர் சங்கர். புதிதாக அவருக்கு நிகராக மனேஜர் போஸ்டில் நாராயணின் என்பவரை நியமித்து அறிமுகப்படுத்தி வைக்கிறார் எம்.டி. சங்கரின் பல பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டு நாராயணின் கை நாளடைவில் உயர்கிறது. இதனால் கடுப்படைகின்றார் சங்கர். வேலைக்கு வந்ததிலிருந்து அலுவலகத்தில் அதிரடி மாற்றங்களை ஏற்படுத்தி அனைவரின் கவன ஈர்ப்பையும், எம்.டி.யின் பாராட்டையும் நாராயண் பெற்றுக் கொள்கிறான் . பலர் சேர்ந்து பல நாட்கணக்கில் செய்ய வேண்டிய வேலைகளை அவன் தனியொருவனே தனி ஆளாக செய்ததால் அவன்மீது சந்தேகம் வருகிறது. எனவே, அவன் நடவடிக்கைகளை வேவு பார்க்கிறான் சங்கர். ஒருநாள் ரெஸ்ற்டோரண்டில் டைப்பிஸ்ட் கலாவும் நாராயணும் தம்மை மறந்து கதைத்துக் கொண்டிருப்பதையும், அதன் பின் கடற்கரையில் அமைந்திருக்கும் பங்களாவுக்கு காரில் செல்வதையும் சங்கர் பார்க்கிறான். அவர்களை பின் தொடர்கிறான் சங்கர். அங்கே கலா நிர்வாணமாகப் படுத்திருந்தாள்..

(சென்ற வார தொடர்ச்சி)

நாராயண் அவளைப் பல கோணங்களில் போட்டோ பிடித்துக்கொண்டிருந்தான்.

கலா படுத்திருந்த நிலையில் ஒருவித இயந்திரத் தனம் இருந்ததா? என்ன? ஏன் அறை காலியாக இருக்கிறது? எங்கே பேர்னிச்சர்? எங்கே அலுமாரிகள்? ஒரு மனிதன் தின வாழ்க்கைக்கு உரிய தேவைகள் எதுவுமே இல்லாத நிர்வாணமான அறை, கலாவைப் போல.

சற்று நேரம் யோசித்தேன். மௌனமான 'க்ளிக் க்ளிக்'குகள் கேட்டுக்கொண்டிருந்தன.



"கலா கொஞ்சம் பக்கவாட்டமா படுத்துக்க".

படுத்துக்கொண்டாள், 'க்ளிக்!'

"அப்படியே நிமிரு"

நிமிர்ந்தாள், 'க்ளிக்!'

"கையைத் தூக்கு"

எல்லா நிலைகளுக்கும் ஒவ்வொரு க்ளிக். இவன் என்ன மாதிரி மனிதன் என்பதைவிட என்ன மாதிரி வக்கிர புத்தி மனிதன் என்கிற கேள்வி என் மனதில் மிதந்தது. எம்.டி.க்குத் தெரிந்தால்?

"உள்ளே வாங்களேன் மிஸ்டர் சங்கர்?"

திடுக்கிட்டேன்.

"ஏன் ஜன்னலில் இருந்தே எட்டிப் பாக்கிறீங்க? கதவு திறந்துதான் இருக்கு, உள்ளே வரலாம்".

என்ன இவனுக்குப் பிடரியில் கண்ணா? நான் எட்டிப் பார்ப்பது எப்படித் தெரிந்தது?

திரும்பினான். கீழே படுத்திருந்த கலாவைக் காட்டினான். "மனித உடல், அதுவும் ஒரு பெண்ணின் உடல்! என்ன ஒரு கலையம்சமான படைப்பு! அவள் மார்பைப் பாருங்க, ஷாம்பேன் கோப்பை போல.அந்த தொப்புள் என்ன பேபெக்ட் பாருங்க. அப்புறம் அடிவயிற்றின் சரிவு...பின்னால் பெறப்போகும் பிள்ளைக்காக இப்போதே இடம்தந்த பெல்விக் வளைவு...அப்புறம்..."

"ஷட் அப் நாராயண். உனக்கு வெட்கமா இல்லை?"

"வெட்கமா? கலையை ரசிக்கிறதில எதுக்கு வெட்கம்? எத்தனை பெயிண்டர்ஸ் பார்த்து ரசித்து வடித்த வடிவம்! டெகாஸ் ரென்வார், ரெம்ப்ரண்ட்..."

"ஏய் கலா எழுந்திரு!"

அவள் எழுந்திருக்காமல் என் குரலையே மதிக்காமல் "நாராயண் ஸேர், இன்னும் என்ன பண்ணனும்?"

"சங்கருக்கு நீ உடையில்லாம இருக்கிறது பிடிக்கலை. உடை அணிந்துகொள் கலா"

அவள் எழுந்து தன் உள்ளுடைகளை என் முன் முழுக் காட்சியாக அணிந்து கொண்டு சட்டை அணிந்து, பாண்ட் அணிந்து, அதன் ஜிப்பை இயக்கிவிட்டுத் தலைமயிரைச் சேர்த்துக்கொண்டு ரப்பர் வளையத்தில் கட்டுப்படுத்திவிட்டு நின்றாள்.

'டிக்' என்று கையைச் சொடக்கினான்.

"அட சங்கர் ஸேர், நீங்க வந்திருக்கிறீர்களா?"

"நாராயண், நான் இதை எம்.டிகிட்ட சொல்லப் போறேன்".

"எதை?"

"சற்று முன்னாடி நடந்ததை. மை காட். யூ ஆர் எ பர்வர்ட் ஐ ஸே!"

"இந்த அறையில் நடந்ததுக்கும் ஆபீஸுக்கும் எப்படிச் சம்பந்தம்?"

"ஒழுக்கம் என்ற ஒண்ணு இருக்கில்ல?"

"அது திருக்குறளில் இருக்குது!...இது வந்து எனக்கும் கலாவுக்கும் உள்ள சொந்தப் பிரச்சினை. இண்டிவிஜுவல் வாலிஷன்! ஆபீஸைப் போட்டுக் குழப்பாதீங்க. நீங்க எம்.டி.கிட்ட இதைச் சொன்னா அவர் கேக்கிற கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத் தயார்".

"இப்ப என்ன சண்டை?" என்றாள் கலா.

"கலா! ஐம் அஷேம்ட் ஒப் யூ".

"என்ன நடந்தது?"

"நீ செய்யறது உனக்கே நல்ல இருக்கா? எவ்வளவு பணம் தாரான்?"

கலா, "கெட் அவுட்!" என்று சீறினாள்.

"உனக்கும் வேலை போகப்போறது!"

"ஐ டோன்ட் கேர்! என்ன நாராயண், நாம ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கத்தானே போறோம்?"

"வை நொட்! அதையும் பார்த்திடலாம்" என்று அவள் தோள்பட்டையில் கைகோர்த்துக் கண்ணடித்தான்.

"டார்லிங் யு ஆர் ப்யூட்டி புல்!"

கலா அவனை மூக்கால் நிரடி "டார்லிங், உங்கிட்ட ஸ்பெஷலா ஒரு வாசனை இருக்கு. அதுவே தூக்குது".

வெறுப்பில் விலகினேன்.

எத்தனை மோசமானவன் நாராயண்! ஆபீஸ் வேலையில் திறமை மட்டும்தான் முக்கியமா? ஒரு கௌரவம் வேண்டாமா? ஒரு பொறுப்புணர்ச்சி வேண்டாமா? மரியாதை? நிச்சயம் எம்.டி. இதைச் சகித்துக்கொள்ள மாட்டார்! அவரிடம் நான் இதைச் சொல்லித் தரப்போகிறேன்.

எம்.டி.யிடம் விஷயத்தைச் சொல்வதற்கு முன் நாராயணைப் பற்றி மற்றொரு தகவல் தற்செயலாகக் கண்டு பிடித்தேன். அவன் மகா மோசடிக்காரன் என்று.

ஐ.ஐ.டி.யில் எனக்குத் தெரிந்த ப்ரொபெஸர் இருக்கிறார். அவரைத் தற்செயலாக ஒரு பார்ட்டியில் பார்த்தேன். இண்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங் கற்றுத்தரும் மற்றொரு ப்ரோபெஸரும் அவருடன் வந்திருந்தார். அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார்.

"இண்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங் என்றால் உங்களுக்கு என்னுடன் வேலை செய்யும் நாராயணைத் தெரிந்திருக்குமே! முதல் 'ராங்க்' மாணவன்".

"எந்த வருஷம்?"

"1978 என்று நினைக்கிறேன்".

"பேர் என்ன சொன்னாய்?"

"நாராயண்".

"நான் ஐ.ஐ.டியில் சென்ற எட்டு வருஷமாக இண்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங் கற்றுத் தந்து கொண்டிருக்கிறேன். நாராயண் என்ற எந்த மாணவனும் என் வகுப்பில் படித்ததில்லை. அதுவும் ராங்க் ஸ்டூடண்ட் என்றா சொன்னாய்?"

"ஆமாம். முதல் ராங்க்! நான் அவன் சேர்ட்டிபிகேட்களைப் பார்த்தேன்".

"இருக்கவே முடியாது. முதல் ராங்க் மாணவர்கள் எல்லோருடைய பேரும் தெரியும். சென்ற எட்டு வருஷங்களாக அகர்வால், ஜோஷி, திருமலை, வெங்கட் நாராயண், பிஸ்வாஸ்..."

"நாராயண்?"

"தேயர் வோஸ் நோ நாராயண்".

(25ஆம் பக்கம் பார்க்க)

மெக்சிக்கோவின் டெபால்சிங்கே நகரம். அரசியல்வாதியான மெண்டோசாவும் திருமதி மெண்டோசாவும் அவர்களது மகளும் மியாமி ரெஸ்டோரண்டில் சேரிவாசிகளான சொசிமோ, பற்ரிஸ் இருவரினாலும், பொலிஸ் அதிகாரி மெக்டொனாலினால் பணம் கொடுக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். அச்சம்பவத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் பற்ரிஸ் காருடன் எரியுண்டு போகிறான். பின்னர் மெக்டொனால் சொசிமோவை கொல்ல முயல்கிறான். தப்பியோடிய சொசிமோ பற்ரிஸின் மனைவி டுமாச்சியுடன் மரங்களுக்கிடையெ பரண் அமைத்து ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தேடி பத்திரிகையாளரான ரீட்டா காட்டுக்குள் செல்கிறாள். அவர்களை சந்திக்கின்றாள். தகவல்களை காதலன் ஜோன்சனுக்கு அனுப்புகிறாள். அவர்கள் மூவரையும் பிடிக்க பொலிஸார் வலைவிரிக்கின்றனர். ரீட்டாவை பத்திரமாக நகருக்குள் அனுப்பி வைக்க சொசிமோ அழைத்துச் செல்கின்றான். பல கொலைகளை செய்த சொசிமோவுடன் செல்லும் ரீட்டா பயம் கொள்கின்றாள்.

இனி....




## தொடர்-7

சொசிமோ-

மின்னல் வேகத்தில் ரீட்டாவை எகிறிவிழச் செய்தான். அவள் 'தடா'லென தரையில் விழுந்தாள். இதில் அதிசயம் என்னவெனில் மரங்களின் அடிப்பாகம் எதிலும் 'படீ'லென மோதாமல் சிறு சிறு செடிகள் அடர்த்தியாக வளர்ந் துள்ள ஓர் இடத்தில் அவள் விழுந்ததுதான்.

ரீட்டா-

கெட்டிக்காரி. குங்பூ, கராட்டி இப்படி பல தற்பாதுகாப்புக் கலைகளை ஆர்வமுடன் கற்றுக்கொண்டிருப்பவள். திடீர்த் தாக்குதலின் போது தரையில் எப்படி விழுவது, 'சட்'டென நிமிர்ந்து எழுந்து ஆபத்தை, அல்லது எதிரியின் தாக்குதலை எப்படி எதிர் கொள்வது போன்ற நுட்பங்களில் பயிற்சி பெற்றிருந் தாள். 'எனக்கு என்ன நடக்கிறது. என்னை எகிறி விழச் செய்தவன் எதிரியா, நண்பனா....?'

அவள் சிந்தனை மின்னல்வேகத்தில் பொறிதட்டிப் பறந்தது. மிக மிக இலாவகமாக விழுந்து எழுந்து நின்றாள். அவளை எகிறி விழச் செய்த சொசிமோ ஒரு மிருகம் என சிலிர்த்து நின்றான்.

லேசான இருளில், அவன் விறைத்து நிற்கும் ஒரு மரக்கட்டையைப் போல தோன்றினான். அவன் முன்னே எட்டடி நீளமான நாகம். அது ஒரு குடையென படம் விரித்து ஆடுகிறது.

''சதக்!''

அவன் கையில் சுழன்ற வெட்டுக் கத்தி, 'சட்'டென பாம்பின் படம் எடுக்கும் தலையை துண்டாடி விட்டது.

''ஜீசஸ்!''

ரீட்டா அலறினாள்.

என்னதான் தற்பாதுகாப்புக் கலையை கற்றுக் கொண்டிருந்தாலும் அவள் மிக மிக இளம் பெண் அல்லவா! பாம்பென்றால் படையும் நடுங்கும் போது இளம் பிஞ்சான அவள் மட்டும் எந்த மூலைக்கு? வெல வெலத்துப் போய் நிற்கிறாள்.

பாம்பின் உடல் பாகம் 'சரசர'வென நெளிந்து சுருண்டு, துடிதுடித்தது. அடங்கியது.

அதன் அறுபட்ட தலை-அங்குமிங்கும் தாவியது. நீரிலிருந்து வெளியே விழுந்த மீனைப்போல சளக்! சளக்! கென மரம், செடி கொடிகளில் பட்டுத்தெறித்து விழுந்து பின்னர் நூலறுந்து நிலத்தில் விழுந்த காற்றாடியாக அசைவற்றுக் கிடந்தது.

சொசிமோ- தயார் நிலையிலே நின்று கொண்டிருந்தான். கையில் இறுகப் பிடித்துக் கொண்டிருந்த வெட்டுக் கத்தியுடன் அங்கு மிங்குமாக சுழன்ற அவன் உடலும் ஆபத்துக்கள் எதுவும் இருக்கின்றதா என்று தேடியது.

அவன் கொன்றது இராஜ நாகம் போல தெரிகிறது. இதனால் மேலும் சர்ப்பங்கள் கோபமடைந்து சீறலுடன் மின்னல் வேகத்துடன் வரலாம் என அவன் எதிர்பார்ப்பது போல் அவனுடைய வீறு கொண்ட பாய்ச்சலும் விறைப்பும் பார்வையும் இருந்தன. கானகத்துக்குள் வெளிச்சம் குறைந்துவிட்டது. மிகவும் மங்கலாகிவிட்ட நிலையில் அனைத்தும் இருள்மயமான நிழலாகிவிட்டன.

ரீட்டா-

வியர்வையில் குளித்து விட்டிருந்தாள். திகிலினால் விறைத்துப்போன உடல் வெட வெட வென நடுங்கி கொண்டிருந்தது. ஆபத்துக்களை அவள் எதிர்பார்த்தாள். ஆனால் இந்த மாதிரி பாம்புகளால் ஆபத்து வரும் என்பதை அவள் கொஞ்சமும் நினைத்தும் பார்க்கவில்லை. சேரி மக்களில் பெரும்பாலானோர் பொலிசாரின் சித்திரவதைக்குப் பயந்து போய் இந்த காட்டிற்குள் வந்து ஒளிந்து கொண்டிருக்கலாம். அவர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், வயோதிபர், ஏன் பிஞ்சுக் குழந்தைகள் கூட இருக்கலாம். அவர்கள் இந்த மாதிரியான பாம்புகளாலும், மிருகங்களாலும் எவ்வளவு பெரும் ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.!

ரீட்டாவின் மனத்தில் எண்ணங்கள் ஓடின. பாவம்! இவர்கள் உடனே இங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல உதவ வேண்டும் என்ற வேதனை மிகுந்த துடிதுடிப்பு அவள் மனதில் முகிழ்த்தது.

''ரீட்டா! என்ன யோசனை? உடனே கிளம்பு'' சொசிமோ கத்தினான். யோசனையில் திக்பிரமையுடன் நின்று கொண்டிருந்த ரீட்டா 'திடும்'மென விழித்துக்கொண்டாள். ஒரு கணத்தில் சொசிமோ பற்றி எவ்வளவு கேவலமான ஓர் எண்ணத்தை நெஞ்சில் பதித்துக் கொண்டோம் என்ற உணர்வு வந்த போது மனம் அருவருப்புடன் வெட்கமடைந்தது.

''சொசிமோ!''

சகோதர பாசத்துடன் அழைத்தாள். அவள் கண்களில் நீர் துளிர்த்தது. விரைந்து அவன் அருகில் ஓடினாள். அன்புடன் கைகளைப் பற்றிக் கொண்டாள். சொசிமோ புன்னகைத்தான்.

''கலங்காதே மகளே!'' என்று நாக்கு தளதளக்க ஆறுதல் மொழி சொன்னான். ''இது ஆபத்தான பாதை என்பது எனக்குத் தெரியும். ரயில்வே ஸ்டேசனுக்கு செல்லக்கூடிய கிட்டத்தூரவழி இதுதான். அதுதான் இவ்வழியாக வந்தேன். இந்த இடத்தை பாம்புக்காடு என்று சொல்வார்கள். அதனால் யாரும் வரமாட்டார்கள் ஏன் பொலிஸார் கூட இந்த எல்லையில் இல்லை....'' அவன் 'மளமள' வென சொல்லிக் கொண்டே போனான்.

அப்போது- ஓர் இசை ஒலித்தது. சொசிமோ உடல் சிலிர்ப்புடன் தலையைத்தூக்கினான். 'சட்' டென ரீட்டாவின் கையை உதறினான். முதுகின் பின்புறமாக இடுப்பில் சொருகி விட்டிருந்த கத்தியை 'சரேலென' உருவி எடுத்தான். பொலிஸாரிடமிருந்து பறித்தெடுத்த துப்பாக்கி கூட இடது கையின் இலாவகமான பிடியில் இறுகியது.

ஒரு கணத்தில் போருக்கு தயாராகிவிட்டான்.

'' என்ன சப்தம்?''

அவன் கண்கள் கூர்மையுடன் துளாவின. ஏனெனில் அது பொலிஸ் அவசரப்பிரிவின் வாகன இசை போல ஒலித்தது. அந்த இசை- ரீட்டா எகிறி விழுந்தாளே அந்த இடத்திலிருந்து ஒலித்தது. அவள் 'கலகல'வென நகைத்தாள்.

''சொசிமோ! நீ பெரும் போராளி. எவ்வளவோ சீக்கிரமாக தயாராகிவிட்டாய்.''

'என்ன சொல்கிறாய்?' என்பது போல அவன் கண்கள் கேள்விக்குறியுடன் அவளை இமைகள் அசையாது பார்த்தன.

''என்னுடைய மொபைல். ஜோன்சன் பேசுகிறான் என்று நினைக்கிறேன்'' என்றவாறே பாக்கெட்டில் கைவிட்டவள்




தேள் கொட்டியவளாக கையை வெளியில் எடுத்தாள். சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தாள். தான் விழுந்துவிட்ட இடத்தை பயத்துடன் பார்த்தாள். அந்த இசை-

மறுபடியும் அங்கிருந்து ஒலித்தது.

''ஜீசஸ்!'' என்றவாறே ஓடினாள்.

மொபைல்-

பொலிஸ் அவசரப்பிரிவின் இசையை மீட்டிக்கொண்டிருந்தது. எடுக்கக் குனிந்தாள். அதன் அருகில் அந்த பாம்பின் அறுபட்ட தலை கிடக்கிறது.

'வீலெ'ன அலறினாள்.

அந்த இடத்திற்கு ஒரே பாய்ச்சலில் சொசிமோ வந்துவிட்டான்.

புல் பூண்டுகளுக்கு மேலாகக் கிடந்த கையடக்கத்தொலைப்பேசி பாம்பின் துண்டாடப்பட்ட தலையருகில் எதுவித பயமும் இல்லாமல் இசையை எழுப்பிக்கொண்டிருந்தது.

அதை குனிந்து எடுத்த சொசிமோ ரீட்டாவிடம் கொடுத்தான்.

''ஹலோ''

''ரீட்டா!

''நீயா''

''நான் ஜோன்சன் பேசுகிறேன்''

''நான் சொசிமோவுடன் வந்து கொண்டிருக்கிறேன்.''

''பதிவுகள் எல்லாம் சரிதானே?''

''ஓகே!''

''வெல்டன் இப்ப எங்கே இருக்கிறாய். ரயில்வே ஸ்டேசன் வந்துவிட்டாயா? நான் சீக்கிரமாக அங்கே வந்துவிடுவேன். அங்கே நிலைமை எப்பிடி?''

''டேன்ஜரஸ். ஸ்டேசனுக்குள் பொலிஸ்காரர்கள் மோப்ப நாய்களுடன் திரிகிறார்கள். நான் பைக்கில் வந்தேன். ஆனால் ஸ்டேசன் பக்கம் போகவிடவில்லை. ரயில், ஸ்டேசனில் நிறுத்தப்பட மாட்டாது என்று சொல்லி என்னை போக விடாமல் தடுத்து விட்டார்கள்''

''அப்படியானால்?''

இங்கிருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் இன்னொரு சிறிய ஸ்டேசன் இருக்கிறது. எங்கே தான் நிறுத்துவார்களாம்?''

''ஜீசஸ்! அப்ப என்ன செய்வது?''

''சொசிமோவிடம் விசயத்தைச் சொல் . ஏதாவது வழி உண்டா என்று கேள்.''

''சரி, நீ இப்பொழுது எங்கிருந்து பேசுகிறாய்.?''

''ஹோட்டல் மியாமியிலிருந்து''

''மை கோர்ட். அது டேன்ஜரஸ்ஸான இடம்.''

''ஏன்?''

''நாம் நினைத்தது போல பொலிஸ் அதிகாரியான மெக்டோனால் பொல்லாத வன். அந்த மியாமி ரெஸ்டோரண்டில் அவனுக்கு பங்கு உண்டு. அவனுடைய கையாட்கள் ஏராளமான பேர் அங்கிருக் கிறார்கள் அவர்களால் உனக்கு ஆபத்து வரலாம்.''

''ஐய்யய்யோ!''

''கோழைமாதிரி கத்தாதே. உன்னை ஒரு பத்திரிகையாளன் என்று சொல்லவே வெட்கமாக இருக்கு.''

''ரீட்டா நான் என்ன செய்யட்டும்?''

''உடனே மியாமியை விட்டுப்போ. போகும் முன்னர் உன்னை யாரும் கவனித்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்''

''ஐயோ! ஒருவன் ரொம்ப நேரமாக பார்த்துக்கொண்டிருக்கிறான்.''

''அடப்பாவி! தெரிந்துமா போன் பண்ணினாய்?''

''பின்னே! உனக்கு ஸ்டேசன் நிலைமையைச் சொல்லவேண்டுமே.''

(27ஆம் பக்கம் பார்க்க)




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் 10ஆவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வாரப் பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல்முறையாக ஆரம்பித்து வெற்றிநடைபோடுகின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள் களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் (படிமுறைப் பரீட்சை -10 (Steping Exam - 10) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

ஆசிரியர்,
கல்விச்சுடர்,
சுடர் ஒளி பணிமனை,
இல. 85,
ஜயந்தமல்லிமராச்சிமாவத்த,
கொழும்பு-14.

யாழ் மாணவர்களுக்கு மட்டும்..
ஆசிரியர்,
கல்விச்சுடர்,
உதயன் பணிமனை,
இல. 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

**மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!**

**எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.**

### பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்

படிமுறைப் பரீட்சை - 08 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


M.ஆஷிக்
185 (கம்பளை)


டன்ஸ்டன் ஹென்றிக்
182 (கல்முனை-01)


S.அஸ்தர் அலி
182 (உ ஆக்கரப்பள்ளர்)


M.சர்ஜூன்
171 (மாவனல்ல)


N.கிருசாகரி
175 (கல்முனை)


F.சஞ்ஜிதா
153 (நிந்தவூர் -03)


R.தர்மேஸ்
171 (மன்னார்)


F.சமீஹா
168 (நிந்தவூர் -14)


H.நுஹா
164 (நிந்தவூர் -16)

| | | | |
|---|---|---|---|
| J.ஜனுஸ்ரன் சொய்சா 186 (மன்னார்) | K.ஸமானி 179 (கம்பளை) | S.றிப்தாஸ் 179 (நிந்தவூர் -19) | |
| T.றிஃபக் இஜாஸ் 175 (ஓட்டமாவடி) | M.மின்னத் ஹசீமா 175 (நிந்தவூர் -19) | J.திவாகர் 171 (பெல்மதுளை) | S.தனுஷா 161 (நுவர எலிய) |
| M.சந்தோஷ் 161 (நிலாவெளி) | F.சிப்னி 157 (நிந்தவூர் -02) | ஷிம்ஹத் இபாஸா 157 (நிந்தவூர் -12) | |
| S.சஸ்னி 154 (நிந்தவூர்) | நிஸ்மி அகமட் 153 (நிந்தவூர்) | U.அமானி 153 (நிந்தவூர் -14) | |

-கல்விச்சுடர் ஆசிரியர்-



சுடர் சிந்தனை:- "கற்றது கையளவு கல்லாதது உலகளவு"

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

"சாஸ்திரம்! சாஸ்திரம்! சாஸ்திரம்!
ஐயா, அம்மா, சாஸ்திரம் பார்க்கலையா?
ஐயா வாங்க! அம்மா வாங்க! உங்களிற்கு நல்ல காலம்
வருகுது. ஐயாவிற்கு நல்ல அதிஸ்டம் வரப்போகுது.
கையைக் காட்டுங்க ஐயா.
கையை காட்டுங்க."

1) இவ் உரைப்பகுதியில் காணப்படும் ஆண்பால் உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.

..............................................................

2) அதிஷ்டம் என்பதன் எதிர்ச்சொல் யாது?

..............................................................

3) "வருகுது" என்ற பேச்சு மொழிச்சொல்லை எழுத்து மொழிக்கு திருத்தி எழுதுக.

..............................................................

4) இவ் உரைப்பகுதியில் உள்ள சினைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.

..............................................................

5) முன்னிலைச் சொல் ஒன்று தருக.

..............................................................

**02.** பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தைத் தருக.

1) தோள் கொடுத்தல் - ..............................................................

2) நாக்கு நீளுதல் - ..............................................................

**03.** பின்வரும் ஒருமைச் சொற்களை பன்மைச் சொற்களாக மாற்றி எழுதுக.


1) அது - ..............

2) அவர் - ..............

3) நான் - ..............

**04.** பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து கோடிடுக.


1) மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி,

A  B  C 

2) மயிர் கொட்டிகளை உண்ணும் பறவை,

A  B  C 

3) மிக வேகமாக ஓடும் விலங்கு,

A  B  C 

4) மேசன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று,

A  B  C 

**05.** இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

1) சூரிய ...................... கண்ணைப் பறித்தது. (ஒளி, ஒலி, ஒழி)

2) அரசனின் ........................ தவறி விழுந்தது. (வாள், வால், வாழ்)



## போதை

போதைப் பொருட்கள் அதிகமாக விற்கப்படும் இடம் சிறைச் சாலைகள் தான். வெளியில் 50 ரூபாய்க்குக் கிடைக்கும் ஒரு கஞ்சாப் பொட்டலம் சிறையில் 500 ரூபாய். சிறையில் தனிமையைப் போக்க போதைப் பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். சென்னை மத்திய சிறையில் ஜலதோஷத்துக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் இருமல் சிரப் தான் மலிவான போதைப் பொருள். குடும்பப் பெண்கள் பலர் இதில் போதை இருப்பது தெரியாமலேயே அளவுக்கு அதிகமாகக் குடித்துவருகிறார்கள். சிறுவர்களைப் பொறுத்தவரையில் சைக்கிள் டியூப் ஒட்டப் பயன்படும் சொல்யூஷன், டைப்ரைட்டர் மெஷின் துடைக்கப் பயன் படும் சொல்யூஷன், பெவிக்கால் போன்றவற்றையும் மலிவான போதைப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள்.



# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



## 'காண்டாக்ட் லென்ஸ்' அணிவதில் நடைமுறை என்ன?

மூக்கில் சரியாகப் பொருந்தாத கண்ணாடி அணிவதால் ஆபத்து இல்லை. ஆனால், கண்ணுக்குப் பொருந்தாத 'காண்டாக்ட் லென்ஸ்' அணிவதுதான் ஆபத்து. பொருந்தாத 'லென்ஸ்' கண்மணியைப் பாதிக்கும். இதனால், தெளிவான பார்வையே கிடைக்காமல் போகும். 'காண்டாக்ட் லென்ஸ்' போட்டுக்கொள்வதற்கு முன் கண்சிகிச்சை நிபுணரிடம் பரிசோதித்துக்கொள்ள வேண்டும். இதற்கென பிரத்தியேகமாக உள்ள திரவத்தைத் தூய்மையாகப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டியது மிகமிக முக்கியம்.





"கல்யாணமான பிறகு அந்தப் பாடகர் பாடுகிறதையே நிறுத்திட்டாரே?"

"பெண்டாட்டி சமையலைச் சாப்பிட்டு, நாக்கு செத்துப் போயிடுச்சாம்".

## கண்பார்வைக்கு கறிவேப்பிலை

கறிவேப்பிலையை வெறும் மணத்துக்காக மட்டும் உணவில் பயன்படுத்துகிறோம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. கறிவேப்பிலையின் பயன் முழுமையாகத் தெரிந்தால் அதைத் தூக்கி எறியமாட்டோம்.

100கிராம் கறிவேப்பிலையில் 6.1கிராம் புரதமும், 093 மில்லிகிராம் இரும்புச்சத்தும் உள்ளன. உயிர்ச்சத்து 'ஏ' உயிர்ச்சத்து 'சி'யும் உண்டு.

கறிவேப்பிலை கண்பார்வைக்கு நல்லது. முடி உதிர்வதை கட்டுப்படுத்துவதுடன், இளநரையைப் போக்கவும் உதவும். தேவையற்ற அமிலங்கள் உடலில் சுரப்பதைத் தடுத்து, திசுக்களை நன்கு பாதுகாக்கும்.

பச்சையாகவோ, காயவைத்து பொடிசெய்தோ பயன்படுத்தலாம். காரணம், இதன் சத்து எளிதில் வீணாகாது. கறிவேப்பிலையைத் துவையலாக அரைத்தும், சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ளலாம்.

"ரொம்ப தாங்ஸ் மேடம்...!"

"நீ யாருன்னே தெரியலையே...எனக்கு எதுக்குப்பா தேங்ஸ் சொல்லறே...?"



"வீட்டில் இருந்து வரும்போது எங்கம்மா பூசணி வாங்கிட்டு வரச் சொன்னதை மறந்திட்டேன். உங்களைப் பார்த்தவுடனே ஞாபகம் வந்திச்சு. அதுக்காகத் தான் தாங்ஸ் சொன்னேன்..!"

## சிந்தனைக்கு



பழகிய மனைவி, பழகிய நாய், தயாராக இருக்கும் பணம் ஆகியவை தான் நம்பிக்கைக்குரிய நண்பர்கள்.





## நூறாண்டு வாழவேண்டுமா?


கவலை இல்லாத மனிதர்கள் நூறாண்டு வாழமுடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இதுபற்றி 1962 ஆம் ஆண்டு 550 பேரிடம் கருத்துக்கணிப்பு நடத்தினார்கள். அவர்களின் இன்பதுன்பம் பற்றிக் கேட்டார்கள். அவர்களில் 52பேர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் எதைப்பற்றியுமே கவலைப்படாதவர்கள்" என்று கூறுகிறார்கள் இவர்கள்.

கவலையால் மனஇறுக்கம் ஏற்படுகிறது. மன இறுக்கத்தால், இரத்தக்குழாய் சுருங்குகிறது. இது மனிதனைச் விரைவில் கொல்லுகிறது.

கவலைப்படும்போது குருதிக்கொழுப்பு (கொலஸ்ரோல்) அதிகமாகச் சுரக்கிறது. இதனால், மாரடைப்பு ஏற்படும்.

"எல்லாம் நன்மைக்கே" என்று கவலைப்படாமல் இருப்பவர்கள், நீண்டநாள் வாழ்கிறார்கள்.



"தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போனியே ...என்ன சீர்கொடுத்தாங்க?"

"சிக்குன் குனியா கொடுத் தாங்க!"



பெண்களின் வயிறு, பிரசவத்துக்குப் பிறகு பெருத்துத் தளர்ந்துவிடும். ஏலக்காய்களை நீரில் போட்டு நன்கு கொதிக்கவைத்து தினமும் குடித்துவர 'சிக்' என்ற இடையழகு கிடைக்கும்.



"இந்தச் செருப்பு அதன் சொந்தக்காரருக்கு ரொம்ப நன்றி உடையதாய் இருக்கு!"

"எப்படி?"

"போனவாரம் ஒரு கல்யாண மண்டபத்தில் எடுத்தேன், நேற்று என் காலை கடிச்சிருச்சு!"



"ஏண்டி உன் மூக்கு இப்படி வீங்கி இருக்கு?"

"பக்கத்து வீட்டு சண்டை யில போயி நான் மூக்கை நுழைச்சுட்டேன். அதான் வீங்கிடுச்சு!"



# மதுவுக்கு அடிமையாகும் பெண்கள்

கல்லூரிப் பெண்கள், இல்லத்தரசிகள், உயர் பதவி வகிப்பவர்கள் என இந்தியாவில் வயது வித்தியாசமின்றி பல மட்டங்களிலும் மதுப்பழக்கம் பரவிவருகிறது. கேளிக்கை விருந்துகள், திருமணநாள் விசேஷங்கள், 'எக்ஸிக்யூட்டிவ் டின்னர்' ஆகியவற்றின் போது மதுவை எந்தத் தயக்கமுமின்றி பெண்கள் ருசிக்கின்றனர்.

இந்தியாவில் குடிப்பழக்கம் உள்ள பெண்களை, குடிசைப் பகுதிகளில் விபசாரம் செய்பவர்கள் மற்றும் மேற்கத்திய கலாசாரத்தை பின்பற்றும் 'எக்ஸிக்யூட்டிவ் க்ளாஸ்' என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

இதுகுறித்து, பிரபல இந்திய உளவியல் நிபுணரான டாக்டர் லீனா கூறுகையில்,

"உயர்தட்டு வர்க்க மக்களைப் பொறுத்தவரை குடிப்பது, 'அந்தஸ்தின் அடையாளம்'. குடிப்பதன் மூலம் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்று கருதுகிற பெண்களும் உண்டு. 'சுகத்துக்காக ஆண்கள் குடிக்கும்போது நாமும் ஏன் குடிக்கக்கூடாது?' என்ற புதிய சிந்தனையே அவர்களை குடிப்பழக்கத்துக்கு அறிமுகப்படுத்துகிறது..." என்கிறார்.

ஐ.நா.வின் சுகாதார அமைப்பின் சார்பில் சமீபத்தில் நடந்த, 'பெண்களும் போதையும்' என்ற கருத்துக் கணிப்பில் வெளிவந்துள்ள, போதைப் பழக்கத்துக்கு அடிமையான பெண்களின் விவரங்கள் பலரையும் ஆச்சரியப்படுத்துவனவாக உள்ளன. 21இலிருந்து 35வயதிற்குட்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட இக்கருத்துக் கணிப்பில், வேலைக்குச் செல்வோர் 67சதவீதம், தனிமையில் வாடுவோர் 31சதவீதம், விவாகரத்துப் பெற்றவர்கள் 32சதவீதம் மற்றும் விபசாரிகள் 45சதவீதம் இதில் அடங்குவர். இவர்களில் 90சதவீதத்தினர் மதுவுடன் ஹெராயின், பிரவுன் சுகர் போன்ற போதைப் பொருள்களையும் ருசிக்கும் பழக்கம் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தெரிந்தோ தெரியாமலோ, இத்தனை வெவ்வேறு வர்க்கப் பெண்கள் மதுவுக்கு அடிமையாகக் காரணம் என்ன என்ற கேள்வி எழுவது இங்கு தவிர்க்கமுடியாததாகி விடுகிறது.

பொருளாதாரப் பாதுகாப்பின்மை, அன்றாடம் காய்ச்சிகளாய் இருப்பதில் உள்ள பலவித கஷ்டங்கள், விபசாரம், கடின உழைப்பு போன்றவையே குடிசைப்பகுதி மக்களை மதுவை நாடச் செய்கிறது. பணவசதி இல்லாததால், இவர்கள் மலிவுவிலை கள்ளச் சாராயத்தையே குடிக்கின்றனர். மறுநாளை எப்படி ஓட்டுவது என்ற கவலையை மறக்கவே குடிக்கிறோம் என்பவர்கள் நிறையவே இருக்கிறார்கள்.

கணவனின் புறக்கணிப்பு, வேறு பெண்களுடன் சகவாசம் அல்லது விவாகரத்துக்குப் பிறகு வாட்டும் தனிமை ஆகியவற்றால் வாழ்க்கையே அர்த்தமற்றதாகி விட்டதாக எண்ணிக் கலங்குபவர்கள் அதற்கான ஆறுதலாகத் தேர்ந்தெடுப்பதும் மதுவைத் தான்.

"செக்ஸில் அதிக நாட்டமில்லாத பெண்கள், கணவனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஓரிரு 'பெக்'குகள் அடித்து விட்டு உடலுறவில் ஈடுபடுகிறார்கள். இது தங்களது காம உணர்வுகளைத் தூண்டுவதாகவும், தன்னம்பிக்கையை அதிகப்படுத்துவதாகவும் அவர்கள் கருதுகின்றனர். செக்ஸுக்குப் பிறகு ஆழ்ந்த உறக்கத்துக்கும் மது உதவுவ தாகச் சொல்பவர்களும் உண்டு" என்கிறார் மற்றொரு இந்திய உளவியல் நிபுணர் வெங்கட் ராகவன்.





'இராமேஸ்வரம்'
ஜீவா - பாவனா.

# வருகிறது இராமே

ஜீவா - பாவனா நடிப்பில் உருவாகியுள்ள 'ராமேஸ்வரம்' படத்தின் பாடல்கள் வெ
(இலங்கை) அகதிகளின் கதையைப் பின்னணியாகக் கொண்ட படம் 'ராமேஸ்
நிரு. இவரும் எமது நாட்டில் இருந்து அகதியாகச் சென்றவர்தான். அதனாலே
வலியை அப்படியே துல்லியமாக பிரதிபலித்திருக்கிறார். தீபாவளிக்குத் தி
ராமேஸ்வரத்தில் முகாமிட்டு படப்பிடிப்பு நடைபெற்றது. எமது நாட்டு அ
கும் கதை இது. அகதி முகாமில் வசிக்கும் ஒரு வாலிபனுக்கும், தமிழ்ப்
களின் துயர நிலையின் பின்னணியில் சொல்லியுள்ளார் புதுமுக இயக்
அண்மையில் சென்னையில் நடந்தது. அதுவும் வித்தியாசமாக. இந்
மூலம் இணைந்து பல்வேறு கேள்விகளைக் கேட்டனர். ஜீவா உள்
டனர். புதுமுகமான நிரு இப்படத்திற்கு முதல் முறையாக இசைய
டார். மேலும், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பாடகர் காலிக
நேரடியாக பாடிக் காண்பித்தது வித்தியாசமாக இருந்த
என்று ஒரு இலங்கை தமிழ்ச் சிறுமி பாடும் பாடலை
அவ்வளவு எளிதாய் இருக்காது. பாட்டில் அவ்வள

# அசினின்

'தசாவதாரம்' படத்தில் தொடக்கத்திலிரு
நடிக்கும் படங்களில் தானே டப்பிங் பே
மலையாளம் ஆகிய மொழிப் படங்கள
இந்தியிலும் சொந்தக் குரலில் பேசி
அசின் இணைந்துள்ள 'தசாவதார
இப்படத்தில் தஞ்ச[illegible]
அசினின் இந்த வே[illegible]க்கவும்
பேசுவதற்கு 3 நாட்கள் ஒதுக்
ஒரே நாளில் வசனங்களைப்
துப் பெண்களின் உச்சரிப்
பேசிய அழகையும், வேக
பாராட்டித்தள்ளிவிட்டா
இருந்தால் குறைந்தது 5
பிங்கை முடித்த அசினி
னராம். இது ஒரு சாதன
நாள் முழுவதும் அங்
யான நடிகை. இந்த
கே.எஸ்.ரவிக்குமாரு



'1977' சரத்குமார் - பர்ஸானா

# திருமண பந்தத்தில் இணைகிறார் ஜீவா

நடிகர் ஜீவாவுக்கும், பள்ளிக்காலத்துத் தோழியும் - காதலியுமான சுப்பிரியாவுக்கும் டெல்லியில் திருமண நிச்சயதார்த்தம் முடிந்துள்ளது. நவம்பர் 21ஆம் திகதி இருவரது திருமணமும் நடைபெறவுள்ளது. இளம் சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான ஜீவாவுக்கும், அவருடன் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவரான சுப்பிரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக காதல் நிலவி வந்தது. இரு வீட்டாரும் இதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டனர். தி.நகரில் உள்ள பாடசாலையில் ஜீவா படித்துக் கொண்டிருந்தபோதுதான் சுப்ரியா அவருக்கு அறிமுகமானாராம். அப்போதிருந்து 13 வருடங்களாக நண்பர்களாக இருந்து வந்த இருவரும், அதில் கடைசி 7 வருடங்களாக காதலர்களாக மாறியிருந்தனர். இந்தக் காதலுக்கு இருவீட்டாரும் ஆசி வழங்கவே, திருமணம் சுபமாக முடியவுள்ளது. இவர்களின் திருமண நிச்சயதார்த்தம் சமீபத்தில் முடிந்துள்ளது. வருகின்ற 21ஆம் திகதி திருமணம் டெல்லியில் நடைபெறுகிறது. அதன் பின்னர் டிசம்பர் முதலாம் திகதி சென்னை மேயர் ராமநாதன் மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. திருமணத்திற்குப் பின்னர் ஆஸ்திரேலியாவில் தேனிலவைக் கொண்டாட திட்டமிட்டுள்ளார் ஜீவா. வாழ்த்துக்கள் ஜீவா!

# காத

சப[illegible]ல்[illegible]
வந்தது. அதைப்
கம் அல்ல, இரு
ஆங்கிலத்தில் எ
வளவு ஆழமான
பற்றி அசின் இ
தொழில். அதை
வேண்டும். தன்
கவனித்துக்கெ
தள முகவரி ஒ
எனக்கு காதல்
உடனேயே மார்

# 'குருவி'யில் பிரகாஷ்ரா

விஜய் நடிக்கும் 'குருவி' படத்திலிருந்து பிரகாஷ்ராஜ் விலகிவிட்டார். அ
'சிவாஜி' பட வில்லன் சுமன் நடிக்கிறார். அமைச்சர் ஸ்டாலினின் மகன்
தயாரிக்க, தரணி இயக்க, விஜய் - த்ரிஷா நடிக்க உருவாகும் பிரமா
'குருவி'. முதலில் படத்தின் நாயகி குறித்து பெரும் குழப்பம் நில
த்ரிஷா இல்லை என்று கூறப்பட்டது. கடைசியில் எப்படியோ
வாய்ப்பை தக்க வைத்துக்கொண்டார் த்ரிஷா. இந்த நிலை
படத்தில் முதலில் நடிப்பதாக இருந்த பிரகாஷ்ராஜ் இப்பே
இல்லையாம். த்ரிஷாவின் அண்ணன் வேடத்தில் பிரகா
ராஜ் நடிப்பதாக இருந்தது. அவர் தமிழில் நான்கு படங்
களில் நடித்துக்கொண்டிருப்பதால் வேறு படத்திற்கு
நேரம் ஒதுக்க முடியாத நிலையில் உள்ளார். இந்த
இடத்தை நிரப்புவதற்கு 'சிவாஜி' பட வில்லன்
சுமனை நடிக்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.
அதற்கு அவரும் சம்மதித்துள்ளார்.

## ...மேஸ்வரம்...

...ல்கள் வெளியீட்டு விழா வித்தியாசமாக நடந்தது. எமது நாட்டு
'ராமேஸ்வரம். செல்வம் இயக்கியுள்ள இந்தப்படத்திற்கு இசை
...தனாலோ என்னவோ இப்படத்தில் புலம் பெயர்ந்த மக்களின்
...ரிக்குத் திரைக்கு வரும் இப்படத்திற்காக 3 மாதத்திற்கு மேல்
...நாட்டு அகதிகள் தமிழகத்தில் படும் அவஸ்தைகளை சித்தரிக்
..., தமிழ்ப் பெண்ணுக்கும் இடையே மலரும் காதலை, ஈழத் தமிழர்
...முக இயக்குநர் செல்வம். இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா
...மாக. இந்த நிகழ்ச்சியின் போது நேயர்கள் பலரும் தொலைபேசி
...ஜீவா உள்ளிட்டோர் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்
...ாக இசையமைத்த அனுபவத்தை நேயர்களிடம் பகிர்ந்துகொண்
...கர் காலிக்கானும் இப்படத்தில் இடம்பெறும் ஒரு பாடலை
...க இருந்தது. ''எல்லோரையும் கூட்டிச் செல்ல கப்பல் வருமா....''
...ம் பாடலை கேட்கும் யாராலும் கண்ணீரைக் கட்டுப்படுத்துவது
...ல் அவ்வளவு வலி... குரலில் அப்படி ஒரு ஏக்கம்.

## ...ன் திறமை

...க்கத்திலிருந்தே அசின் சொந்தக் குரலில் பேசி வருகிறார். தான்
... டப்பிங் பேசுவது என்பதில் உறுதியாக உள்ளார். தமிழ், தெலுங்கு,
...ப் படங்களில் சொந்தக் குரலில் பேசி வரும் அசின் இப்போது
...ரலில் பேசி நடித்துக்கொண்டிருக்கிறார். தற்போது கமல்ஹாசனுடன்
'தசாவதாரம்' படத்தின் டப்பிங் வேலைகள் நடந்து வருகின்றன.
... அய்யராத்துப் பெண் வேடத்தில் நடிக்கிறார் அசின். படத்தில்
...கவும் முக்கியமானது என்பதால், இந்தக் வேடத்துக்கான டப்பிங்
...கள் ஒதுக்கியிருந்தனர். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில்
...னங்களைப் பேசித் தள்ளிவிட்டாராம் அசின். தஞ்சைப் பகுதி அய்யராத்
...ன் உச்சரிப்புடன் மிக அழகாக் பேசியுள்ளாராம் அசின். அவர் டப்பிங்
...யும், வேகத்தையும் பார்த்து கமல்ஹாசனும், கே.எஸ்.ரவிக்குமாரும்
...ளிவிட்டார்களாம். வழக்கமாக ஒரு நாயகி டப்பிங் பேசுவதாக
...குறைந்தது 5 நாட்களுக்கு மேல் செல்லும். ஆனால், ஒரே நாளில் டப்
...டித்த அசினின் வேகத்தைப் பார்த்து திரையுலகினர் அதிசயித்துள்ள
... ஒரு சாதனை என்றும் பாராட்டியுள்ளனராம். அசின் டப்பிங் பேசியதை
...வதும் அங்கேயே இருந்து பார்த்தாராம் கமல். அசின் ஒரு முழுமை
.... இந்த படத்திற்கு அவரும் ஒரு பெரும் பலம் என இயக்குநர்
ரவிக்குமாரும் கமல்ஹாசனும் மனம் திறந்து பாராட்டியுள்ளனர்.


பூஜா

## ...காதல் கடிதம்

...ல் ...னையில் அசின் வீட்டு முகவரிக்கு பெரிய பார்சல்
...து. அதைப் பார்த்த அவரது தந்தை அதிர்ந்துபோனார். ஒரு பக்
...அல்ல, இரு பக்கம் அல்ல, மொத்தம் 74 பக்க காதல் கடிதம்!
...கிலத்தில் எழுதியிருந்த அந்த ரசிகருக்கு அசின் மீது அவ்
...வு ஆழமான காதல். இப்படியான கடிதங்கள் வருவதைப்
...றி அசின் இவ்வாறு கூறினார்:- ''சினிமாவில் நடிப்பது என்
...ாழில். அதைப் பார்த்து ரசிப்பதோடு நிறுத்திக்கொள்ள
...ண்டும். தன்னையும், குடும்பத்தையும் நல்ல முறையில்
...வனித்துக்கொள்பவர்தான் நல்ல ரசிகர். நான் இணையத்
... முகவரி ஒன்று வைத்திருந்தேன். அதில் நிறையப்பேர்
...எக்கு காதல் கடிதம் அனுப்பினார்கள் இதனால் அதை
...டனேயே மாற்றிவிட்டேன்'' - என்றார் அசின்.

## ...ஷ்ராஜ் இல்லை!

...கிவிட்டார். அவருக்குப் பதில்,
...லினின் மகன் உதயநிதி
...ாகும் பிரமாண்டமான படம்
...குழப்பம் நிலவியது.
...ல் எப்படியோ தனது
.... இந்த நிலையில்
...ஷ்ராஜ் இப்போது
...டத்தில் பிரகாஷ்
... நான்கு படங்
... படத்திற்கு
...ார். இந்த
...லன்
...து.



# கவிதைப் புனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

# உணர்வுகள் 32

ஏ.ழநிலா

## நாளைய விடியல்கள்

உலகம் எங்குமே போர்ச் சூழல்!- கூடவே
உலவிடும் அமைப்பினில் பெரும் ஊழல்!
கலகம் மிகைத்திடும் நாட்டினிலே- காணக்
கூடுமோ வளத்துறைப் பாட்டினையே!

வல்லர சாதிக்கக் குதிப்புகளும்- சுரண்டும்
வர்க்க நடைமுறைக் கதிப்புகளும்
மெல்லவே பரந்து மூளுதடா!- நாட்டில்
மானிட தர்மம் வீழுதடா!

மானிடர் வாழ்வோ அகதிநிலை!- அவர்தம்
முடக்கமோ பாடாம் சகதியிலே!
ஊனுடல் நொந்தே அழிகின்றார்!- போரால்
உறவெலாம் இடிந்தே அழுகின்றார்!

மானியப் பொருட்கள் வழங்கிடுவார்!- சில பேர்
மறைவாய்க் கரந்திடப் புழங்கிடுவார்!
சூனிய வெளியாய்ப் போச்சுதடா!- எல்லாம்
சூத்திரர் வசமாய் ஆச்சுதடா!

வெள்ளை 'வானிலே' எமதூ தன் - தெருவில்
வந்துடன் காவுவான் எமைக் காதன்!
கொள்ளை கொலைகளே மலிவாச்சு!- இங்கு
கொடியவரின் வாழ்வு தான் பொழிவாச்சு!

சந்தையில் பண்டம் விலைப்படும்பார்! கூடவே
சார்ந்து மிகைத்திடும் கலப்படமே!
விந்தையோ இதிலே துமேயில்லை!- நாளை
விடியலோ வஞ்சகர் புறக்கொல்லை!

■ ஏறாவூர் அனலக்தர்

## உடைந்த இதயம்

நட்புடன்
உறவாடினார்கள்
பல நண்பர்கள்...
ஆனால்
சிலர் இதயத்தை
உடைத்தேவிட்டார்கள்...
அவ்வாறு
உடைந்த இதயத்தை
இனிய நண்பனாக வந்து
நீ ஒட்டி வைத்தாய்...
ஒட்டும்போது
நான்
உணரவில்லை
என்றாவது
நீயும் உடைப்பாயென்று!!

■ வெலிகம ரிம்ஸா முகம்மத்

அன்பே
நீ.....
முத்தமிட்ட
கன்னங்களில்
நீர்கோலம்
உன்னால்
கருக்கட்டப்பட்ட நம் காதலை
நீ
ஏன் கருக்கலைத்தாய்.
மீண்டும்
எனது உள்ளம்
தேடுவது உன்
காதலுக்காக அல்ல
கற்புக்காகத்தான்!

■ பாலத்தடிச்சேனை பாரதி

## இரவில் திரியும் முகமில்லாத மனிதனின் புன்னகை

முகமில்லாத மனிதனின்
புன்னகை
அந்த இரவுக்குள்
தொலைந்துகொண்டிருந்தது.

இதுவேறு ஒரு செயற்கை இரவு.
முதலில் இரவை சிறைவைத்தார்கள்
பிறகு இரவாய் நாளை சிறைவைத்தார்கள்
பிறகு நாட்டை சிறை வைத்தார்கள்
இந்த செயற்கை இரவு
காலத்தை படர்ந்து
விழுங்கிக்கொண்டிருந்தது.

இனந்தெரியாத துப்பாக்கிகளும்
வெள்ளை வான்களும்
இராணுவ முகாம்களும்
மனிதர்களை இந்த இரவில்
தேடித்தின்ன தொடங்கியன.
இரவில் முகங்கள் புதைந்தன.

மரணத்தை ஊதி பெருப்பித்து
அழுகைகளை நிரப்பி
இரவால் நாடு செய்தார்கள்.

இரவின் தெருவில்
நிதானமற்று எல்லோரும்
அலையத் தொடங்கினோம்
அடங்கிப்போய்
இருட்டில் அடைந்தோம்.
இரவு இன்னும் ஆக்கிரமித்தது.

இருட்டில் எழுதி
இருட்டில் கேட்டு
இருட்டில் திருகி
இருட்டாகி போகிறது
முகங்களும் புன்னகையும்.
இரவுக்காக ஒருவன்
அழுதுகொண்டிருந்தான்
இரவும் அழுதுகொண்டிருந்தது.

■ தீபச்செல்வன்

## சிவனும் புத்தரும் யேசுவும் அல்லாவும்

சிவனே....
சீரழியும்- எம்
துயரவாழ்வு கண்டும்
இன்னமும்- உன்
நெற்றிக்கண்
திறக்கவில்லையே??

இயேசுவே.... எம்
இன்னல்களை போக்கிட
நீர் சமாதான தூதராய்
எப்போது வருவீர்??

கௌதம புத்தனே....
பிணங்களும்....
கொலைகளும்....
இரத்தமும் தசைகளுந்தான்....
நீர் போதித்த தர்மமோ.....??

அல்லாவே.....
அல்லல் படும்
எங்களுக்காய் - ஒரு
இறைதூதரை- நீ
அனுப்புவது எப்போது??

■ புலோலியூர் இந்தி

## நெடுஞ்சாலை

நித்தமும் ஊர்ந்திடும்
ஊர்திகள் நடத்தும்
சப்த பூஜைகள்

இரவு நேரங்களில்
அவை உமிழும்
ஒளி நடாத்தும்
தீப ஆராதனைகள்

நீண்டு நீண்டு போவதனால்
பெருமை சேர்க்க
மேனியில் சூட்டப்படும்
குப்பை கூள மாலைகள்

பாதசாரி பக்தர்கள்
சில நேரங்களில் செய்யும்
சிறுநீர் அபிஷேகங்கள்

இப்படி இப்படி எமக்கு
ஆயிரமாயிரம் பெருமைகள்
அதனால்தான்
நாடாளும் தலைவர்கள் கூட
தமது திருப் பெயர்களை
எமக்கு சூட்டி மகிழ்கிறார்கள்.

■ மாவனல்லை உ.நிசார்

கவிதைகளை கண்ணீரால் கழுவுவது
வனிதையர்கள் பெற்று வந்த வரமா?
கலைஞர்கள் காரணங்களை கதறி எழுதியும்
இளைஞர்கள் இளகாதது வெறுமனே பணமா?
எங்கு பார்த்தாலும் ஒரே அந்த பொதுவான
சிக்கல்- பெற்றோருக்கும் அதை எண்ணிய
சதாவும் விக்கல்!
சீ...தனத்தை வேண்டி அலையும்
இவர்கள் ... ஒரு மாத....
வேதனத்தை தானும் காணாத கயவர்கள்!
பணக்கார நிரோஷாவை "நீ ரோசா"
என்று விட்டு....
ஏழைக்குமரி தேவயானியை
"தேவையா நீ?" என்கின்றனரே...!
வாழத்துடிக்கும் இந்த
அபலைகளின் அபிலாஷைகள்
இந்த கழுகுகளுக்கு புரியப்
போவது எப்போது தானோ?

■ தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா

## குமுறல்



புட்டிப் பால்
மாட்டுப் பால்
புழுங்கரிசி
பொன்னி, சம்பா
பச்சையரிசிக்கும்
கட்டவிழ்த்து
விடப்பட்ட விலை!

பாணுக்கும், சீனி
பருப்புக்கும், தீன்
பண்டங்களுக்கும்
மீனுக்கும், இன்று
விண்ணை
முட்டும் விலை!
எரிபொருளுக்கும்
ஏனிப்படி
ஏறிப்பாயும் விலை?
விறகுக்குக் கூட விதிவிலக்கல்ல
மே லெழுந்த விலை!

மரக்கறி வகை என்ன
மலிவா இன்று? அதுவும் விலை!
மக்கள் வாயிலிருந்து
வெளிவரும் வார்த்தை- இனி
வாழமுடியாது- இந்த
மனித அவலம் நிறைந்த
நாட்டில்
என்று
சொல்லும் சோகக்கதை!

■ மூதூர் கிழக்கு சேனையூரான்

## இன்று மட்டும்

எழுவான் திசையெங்கும்
இருளின் ஆர்ப்பரிப்பு
விடியும் எனும் எதிர்பார்ப்பில்
இதயங்கள்
நாளைய எதிர்பார்ப்பில்
இன்று முடிகிறது...
துப்பாக்கி வாய்களில்
சிவப்புக் கோடுகள்
மண்தரையும் செந்தரையாய்
மாறும் மாற்றங்கள்.
கனவுகள் மெய்ப்பட
கால்கள் நடக்கின்றன.
காலை விடியும் போதினில்
நேற்று வாழ்ந்துவிட்டதாய்
நிம்மதி. மீண்டும்.
இன்று?

■ மா.சிவசோதி யாழ். பல்கலைக்கழகம்


## நீ என் காதலி

நீ
நேற்று உன் அம்மாவின் மகள்
இன்று உன் கணவனின் மனைவி
நாளை உன் பிள்ளையின் தாய்
ஆனால்
நேற்றும் இன்றும்
என்றும் என்றென்றும்
என்னுடல் மண்ணுள்
புதைந்து புழுக்களும்
பூச்சிகளும் உண்டு
அவைகளின் பரம்பரை
வாழ மட்டும்
நீ என் காதலி!

கிளிவெட்டி
வெற்றிவேல் சதீஷ்

## கற்கண்டாய் இனிக்குமிவர் எழுத்து! - இந்த கற்பனைக்கா(ய்) இருக்குதின்று பழுத்து!!

■ கவிஞர் நிந்ததாசன் (ஏ.சி.ராஹில்)



தேனில் ஊறிய தேவசுவை; தேசத்துப் பூக்களையெல்லாம் தேடியலைய வைக்கும் வர்ணிக்க முடியாத வாசம்; வானவில்லின் வர்ணக் கயத்தில் குளித்தெழும்பும் வசீகர வார்த்தை தேவதைகளின் புரிந்துகொள்ள முடியாத புன்னகை; உவமை அழகிகளின் உச்சிமாநாட்டில் உருவகப் பல்லக்குகளில் உணர்ச்சி வேந்தர்களின் ஊர்வலம்; இலக்கிய இராமர்களின் இதய சிம்மாசனத்தில் காதல் சீதையாய் அமரத் தக்க காண்போர் வியக்கும் கட்டழகும், கற்பொழுக்கமும்; கயமையை கண்டால் அம்பாக எழும் எழுத்து; காதலைப் பேசினால் காயே விழும் பழுத்து!; போரைப் பாடினாலும் 'போரடிக்காத' ஓட்டம் இவை யாவும் எழுத்துக் கவிஞர் நிந்ததாசனின் ஆக்கங்களை ஆக்கிரமித்து அலங்கரிக்கும் ஆணிமுத்துக்கள்.

கற்கண்டு சொற்கொண்டு கவிவாசம் பரப்பும் இந்தக் காற்றின் கவிதைச் சிறகுகளில் உரைநடை இருக்கிறதோ இல்லையோ உரை நடையில் கவிதை உட்கார்ந்திருக்கிறது உண்மைதான். இவை எல்லாவற்றுக்கும் இரண்டு காரணங்கள் உண்டு. 'இரண்டும்' காரணமாய் உண்டு. ஒன்று; காற்சட்டை பருவம் தொட்டு கவிதைக் காரிகையோடு இருந்த காதலும், புத்தகப் பூவையோடு இருந்த புணர்ச்சியும்; இரண்டு, கற்பனை மன்னர்களான, கவிதை விண்ணர்களான பாரதியார், பாரதிதாசனுக்கு இருப்பது போன்று இவர் பிறந்த எண்ணிலும் இலக்கம் இரண்டு அமைந்திருப்பது ஆகும்.[ நம்பினால் நம்புங்கள்]

இவரது கற்பனைச்சோலை தனித்துவம் வீசும் தத்துவ பூக்களையும்; கருத்துக் கனிகளையும் பாட்டுத் தமிழுக்கு படையல் செய்திருக்கிறது. பல குறட்டை ஒலிகளை குப்புற வீழ்த்திய இந்தக் குயிலின் கூவலுக்கு தமிழகத்திலும் தனியிடம் இருக்கிறது என்பதை இவரது புத்தகங்களுக்குள் புதைந்து பூப்பறித்த போது புரிந்து கொண்டேன். இவரது 'நடை' வண்டியை பி(ப)டித்து நடை பழகியதால்தான் என்னாலும் நடை போட முடிகிறது என்றால் நம்புவீர்களா?

அம்பாறை மாவட்டம், பொத்துவில் தேர்தல் தொகுதி, நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கவிஞர் நிந்ததாசன் ஏ.சி.ராஹில் எனும் இயற்பெயர் கொண்டவர். அப்துல் கரீம் - ஆசியத்தும்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வராக 1962-04-20இல் பிறந்தவர். நிந்தவூர் அல்- அஷ்ரஃக் தேசிய பாடசாலையின் பழையமாணவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடப் பட்டதாரி. கொழும்பு ஹமீட் அல்- ஹுசைனி தேசிய பாடசாலை உட்பட நாட்டின் பல இடங்களிலும் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். 1975இல் கவிதை மூலம் எழுத்துலகுக்குள் நுழைந்த இவர் கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், பாடலாசிரியர், நடிகர், அறிவிப்பாளர் என பன்முகம் கொண்டவர். இதுவரைக்கும் சுமார் 2000 கவிதைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், 50க்கு மேற்பட்ட வானொலி நாடகங்கள், மெல்லிசைப்பாடல்களும் எழுதியுள்ளார். 1500 நவீன குறள்கள் 100 தலைப்புக்களில் ஒரு அதிகாரத்துக்கு 15 குறள்கள் வீதம் எழுதியுள்ளார். இவரது 'தூய்மை தெய்வமாகிறது', 'நித்யா அவள் வித் தியாசமா?' ஆகிய நாவல்கள் தினகரனில் தொடராக வெளிவந்துள்ளன. 'கலாசாலைக் கிளிகள்', 'ஒரு காலை புலர்கிறது', 'தேன் கூடு', 'வானமெல்லாம் நிலா', 'காதல் கல் வெட்டு' ஆகிய தொடர்கதைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'தேன் கூடு' நாவல் மிக விரைவில் நூலாக வெளிவர உள்ளது. இந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் அவர்களின் 'அல்பத்தில்' இவரது 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. 'காதல் கமரா','கரிகாலன்', 'காதல் கற்கண்டு' ஆகிய மூன்று திரைப்படங்களுக்கான கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். இவற்றை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் பொறுப்பெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

'கற்பனைத் தீயின் கற்கண்டுத் தகிப்பில்', 'இதயத்தில் வழியும் தேன்', 'சூரிய விடியல்கள்'[தொடர்கவிதை] ஆகிய தத்துவத் தொடர்களை 'செந்தூரத்தில்'எழுதியுள்ளார். இவை வாசகர்கள் மத்தியில் மிகுந்த பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. 'புதிய நடைத் தத்துவத் தொடர்', மின்சாரக் கதைகள்' போன்ற வித்தியாசமான படைப்பிலக்கியங்களையும், 'மின்னல் வயதும் புயல் மனதும்' [தொடர்கவிதை], 'நீ மகா சக்தி' [தத்துவத் தொடர்], 'வேர் பூ பூக்கும் உன் பெயர் சொன்னால்', 'காதல் பற்றிக் காதல்' [தொடர் கவிதை] போன்ற படைப்புக்களையும் 'நவமணி' உட்பட பல பத்திரிகைகளில் எழுதி பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளார். இவரது படைப்புக்கள் இந்திய, இலங்கை தேசிய நாளிதழ்களில் களம் கண்டுள்ளன. இவரது 100 குறுங் கதைகள் 'மித்திரன் வார மலரில்' பிரசாரம் பெற்றுள்ளன. இவர் எழுதிய 50 ஆங்கிலக் கவிதைகளும் நூலுருப்பெற இருக்கின்றது.

'தோழன்' கலையிலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராகவும், 'இடி' வாரப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் 'அல் - இன்ஷிராஹ் [பேராதனைப் பல்கலைக்கழக கலை,இலக்கிய சஞ்சிகை] ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன 'தென்றல்' சேவையின் அறிவிப்பாளராக இருக்கும் இவர் தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரி.ஹஸன் அலி அவர்களின் பிரத்தியேக செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். இதுவரை இவரது நான்கு நூல்கள் தமிழ்நாடு 'மணிமேகலை' பிரசுரங்களாக வெளிவந்துள்ளன. 'உன்னிடம் விரல்கள் கேட்கிறேன்' [கவிதைத் தொகுதி] அணிந்துரை - வல்லிக்கண்ணன், 'கண்ணால் உன்னைத் தொடுகிறேன்' [கவிதைத் தொகுதி] அணிந்துரை- மு.மேத்தா, 'என் உயிரும் உன் முகவரியும்', 'இன்னுமொரு சுவாசம்' [சிறுகதைத் தொகுதி] அணிந்துரை - கலாநிதி துரை மனோகரன் அவர்கள், இச்சிறுகதைத் தொகுதி இலங்கை அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் ஊடகத் துறைக்கான விருது பெற்றுள்ளது.

'சந்தப்பா வேந்தர்' இலக்கிய விருது - தமிழ்நாடு [1996], பல்துறைக் கலைஞருக்கான 'ரத்ன தீப' விருது - 1997, ஊடகத் துறைக்கான விருது - 2001, 'சாமஸ்ரீ கவிவாணன்' விருது - 2002, 'ப்ரதீப பிரணாமய' விருது- [பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பவுண்டேசன்] 2003,கலை, இலக்கிய நிகழ்வுகள் பலவற்றில் கௌரவிக்கப்பட்டுள்ள இவர் கலை, இலக்கிய பயணத்தில் கரங்கொடுத்து உரம்கொடுத்த பி.எச்.அப்துல் ஹமீட், எஸ்.எழில் வேந் தன், நடராஜசிவம், புவனலோஜினி, எஸ்.விஸ்வநாதன், என்.மதியழகன், எஸ்.இராமச்சந்திரன், மருதூர் ஏ.மஜீத், எம்.ரி.ஹஸன் அலி [எம்.பி.], பேராசிரியர்களான எஸ்.தில்லைநாதன், பூலோக சிங்கம், அருணாசலம், துரை மனோகரன் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூருகின்றார்.

இயக்குநர் பாரதிராஜா, கவிப் பேரரசு வைரமுத்து, கவிஞர் மு.மேத்தா ஆகியோரின் அன்புக்குரிய,

இவரின் தொலைபேசி இலக்கம்: 067 2250813,077 9564590.

06. 1) மீனை மிக நீண்டகாலமாகப் பழுதடையாமல் பாதுகாக்கும் முறைகளில் ஒன்று,
1. உப்பிட்டுக் காயவைத்தல்.
2. சூடாக்குதல். 3. குளிரூட்டல்

2) கடையில் பொதிசெய்யப்பட்ட பொருள் ஒன்றை வாங்கும்போது கவனிக்க வேண்டியது,
1. நிறை 2. விலை
3. காலாவதியாகும் திகதி

3) இலங்கை ஒரு,
1. குடா 2. தீவு 3. முனை

4) இலங்கையின் அரச இலட்சனையில் இல்லாதது,
1. நிறை குடம் 2. நெற்கதிர் 3. காட்டுக்கோழி

5) நீரைச் சுத்திகரிக்கப் பயன்படுவது,
1. அயடீன் 2. பொசுபரசு 3. குளோரின்

6) சந்திகளில் காணப்படும் வீதி சமிக்ஞையில் உள்ள மின்குமிழ்களின் ஒழுங்கு,
1. சிவப்பு, செம்மஞ்சள், பச்சை
2. பச்சை, சிவப்பு, செம்மஞ்சள்
3. சிவப்பு, பச்சை, செம்மஞ்சள்

7) தாவரங்கள் முளைப்பதற்கு ஏற்ற மண்,
1. மணல் மண் 2. செம்மண் 3. களிமண்

8) 
இவ் உபகரணத்தின் பயன்,
1. திருகாணியை இறுக்குதல்.
2. ஆணி அறைதல்.
3. சோடாமூடி திறத்தல்.

07. பின்வரும் வாக்கியங்களில் உள்ள அடைமொழிச் சொல்லைத் தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
1. வெள்ளைக்கொக்கு குளக்கரையில் நின்றது.
..........................................................................
2. பலாமரம் சரிந்து விழுந்தது.
..........................................................................

08. 1) விடையைக் காண்க.
999 + 111 = ..................

2) அடுத்துவரும் எண் யாது?
1) 1, 4, 9, 16, ......, ......
2) 11, 14, 17, 20, ......., ......
3) நிறம் தீட்டப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக.
..................

4) இவ் உருவில் உள்ள,
1. சதுரங்கள் எத்தனை? ................
2. முக்கோணிகள் எத்தனை? ................

5) 1kg சீனியின் விலை ரூபா 55.00 ஆகும் எனின், 100gசீனியின் விலை யாது? ...................

6) பாலன் வீட்டிலிருந்து காலை 6.55க்குப் புறப்பட்டு 20 நிமிட பயணத்தின் பின் பாடசாலையை அடைவான். அவன் பாடசாலையை அடைந்த நேரம் யாது? ...................


7) சாந்தியிடம் 1m 250cm துணி இருக்கின்றது. அவள் சட்டை தைப்பதற்கு 2m துணி தேவை ஆயின், அவளிற்கு இன்னும் எத்தனை cm துணி தேவை? ...................

8) ஒரு மாம்பழத்தின் விலை ரூபா 8.50 எனின், அவ்வாறான ஏழு மாம்பழங்களின் விலை யாது? ...................

09. பின்வரும் உருக்களின் பெயர்களைத் தமிழில் எழுதுக.


A
...............


B
...............


C
...............


D
...............

10. தரப்பட்டுள்ள விலைப்பட்டியலைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.


| பொருள் | அளவு(kg) | விலை(ரூ) |
|---|---|---|
| மா | 1kg | 48 |
| சீனி | 100g | 17 |
| பருப்பு | 5kg | 750 |
| அங்கர் | 400g | 240 |


1) 4kg மாவின் விலை யாது? ...............
2) 2.5kg சீனியின் விலை யாது? ...............
3) 500g பருப்பின் விலை யாது? ...............
4) 1600g அங்கர் மாவின் விலை யாது? ...............

11. கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தருக.

1) 
த : ..................................
ஆ: ..................................

2) 
த : ..................................
ஆ: ..................................

3) 
த : ..................................
ஆ: ..................................

4) 
த : ..................................
ஆ: ..................................

12. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
1) மாம்பழம் - ..................................
2) தேங்காய் - ..................................

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) Telephone - ..................................
2) Fax - ..................................

14. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) க(ப்)பு(ட்)டா - ..................................
2) மொணரா - ..................................

15. தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் கருத்துள்ள பொருத்தமான வசனப்பிழைகள் அற்ற ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



1) ..........................................................................
2) ..........................................................................
3) ..........................................................................
4) ..........................................................................
5) ..........................................................................

முற்றும்


தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு
தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்
படிமுறைப் பரீட்சை 10 - 2007
ஆசிரியர்:- திரு.து. திலீப்குமார்
(விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு. தொ.பே.இல:(072-4085001 )



# புதுமண உறவில் விரிசலா? உறவைக் காக்க சிலவழிகள்

ரசனைகளைப் பொறுத்தவரை, மனிதனுக்கு மனிதன் மாறுபடவே செய்கிறான். இதில் கணவன் - மனைவி மட்டும் விதிவிலக்கல்ல. சொந்த விருப்பு - வெறுப்புகளை மற்றவர்கள் மீது திணிக்காத வரையில், எவருக்கும் பிரச்சினை எழ வாய்ப்பில்லை. அப்படிச் செய்யத் தவறுவதால், ஒரு சிலருக்கு திருமணமான 6 மாதங்களுக்குள்ளேயே, 'இந்தத் திருமணம் நீடிக்குமா?' என்ற பயம் தோன்றிவிடும். பொருளாதாரம் மற்றும் அந்தஸ்து சமமாக உள்ள துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்.

ஆனால், ஒரே மாதிரி ரசனையைக் கொண்ட துணையைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமா?

ஒருவரின் விருப்பம் மற்றும் லட்சியம் பெரும்பாலும் அவரது துணைவரோடு ஒத்துப்போவதே இல்லை. அப்படிப்பட்ட திருமணத்தைக் காப்பாற்றிக்கொள்வது எப்படி?

இதுகுறித்து தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமண ஆலோசகரும், பிரபல உளவியல் நிபுணருமான டாக்டர் சமீர் கூறுகிறார்...

''புதுமணத் தம்பதிகளிடையே ஆரம்பத்தில் முக்கிய விஷயங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் பெரிதாக்கப்படுவதில்லை. ஆரம்பத்தில் அமைதியாக இருக்கும் ஈகோ, கொஞ்சம் கொஞ்சமாக தலைதூக்க பிரச்சினைகள் வெடிக்கத் தொடங்குகின்றன. எனவே, திருமண வாழ்க்கையின் ஆரம்பகால ஊடல்களை, நிரந்தரப் பழக்கமாக்கி விடாதீர்கள்.

நல்லவிதமாக ஆரம்பிக்கும் திருமண வாழ்க்கைகூட, இடையில் முறிந்து விடுவதுண்டு. திருமணமான சில மாதங்களிலேயே, 'இவர் நமக்குப் பொருத்தமானவராக இல்லையே' என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. உலகில் எவருமே 100சதவீதம் பொருத்தமான ஜோடி என்று சொல்லிவிடமுடியாது.

### கச்சிதமான ஜோடி

100சதவீதம் சிறந்த கச்சிதமான துணைவர் பற்றிய கனவுகளை கொஞ்சம் மூட்டை கட்டி வையுங்கள். உங்கள் துணைவருடன் எந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து வாழ்க்கைப் பயணத்தை கடக்கமுடியும் என்பதைச் சிந்திக்கவும்.

திருமணமாகிவிட்ட பிறகு அதை அவசரமாக முறித்துக்கொள்வதில் எந்த லாபமும் இல்லை. இன்னொரு திருமணம் செய்துகொள்ளலாம் என்று நினைப்பது சுலபம். ஆனால், அதிலும் முன்னைய திருமணத்தின் கசப்புகள் தலைதூக்காமல் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கணவன் - மனைவி என்ற உறவில் ஒருவரையொருவர் அதிகபட்சமாக புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். பல வீடுகளில், 'குழந்தை பிறந்துவிட்டால் பிரச்சினைகள் எல்லாம் சரியாகிவிடும்' என்று நினைக்கிறார்கள். இது தவறு. தம்பதியருக்கிடையிலான பிரச்சினைகள் களையப்படும் வரை குழந்தை பிறப்பைத் தள்ளிப்போடுவது நல்லது.

### சகிப்புத்தன்மை

கணவன் - மனைவி இருவரில் எவராவது பொய்கூறி அது திருமணத்திற்குப் பிறகு தெரியவந்தால், அந்த ஏமாற்றுவேலைக்காக துணைவரைக் கேள்விகேட்க முடியும். பொய் தெரிய வந்த பிறகு, துணைவருக்கு கால அவகாசம் கொடுக்க விரும்புவீர்களானால், முதலில் உங்கள் சகிப்புத்தன்மையை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள். இந்தச் சூழ்நிலையில், திருமண வாழ்க்கையில் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்க முடியும் என்பதை தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

புதுமணத்தம்பதிகளைப் பொறுத்தவரை அவர்களின் தாம்பத்திய வாழ்க்கையில் என்ன தவறு என்பதை அடையாளம் காணமுயலுவது அவசியம். உளவியலாளர்கள் கருத்தும் இப்படித்தான் இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளின் ஆணிவேரைப் பார்க்க முடிவதில்லை. ஆனால், இதயபூர்வமாக கணவன் - மனைவி உறவில் குறைபாடுகள் இருப்பதை உணருகிறார்கள். 'விவாகரத்தானவர் என்ற முத்திரை குத்தப்பட்டு விடுமோ' என்ற பயத்தால் அதை மனதுக்குள்ளேயே பூட்டி வைத்துக்கொள்கின்றனர்.

வாழ்க்கையில் தோற்றுவிட்டதன் அடையாளம் அல்ல விவாகரத்து, வாழ்க்கைத் துணையை புரிந்துகொள்ள

பெண்

முற்பட்டதால், கிடைத்த தண்டனை என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால், இந்தத் தண்டனைக்குப் பயந்து பொருந்தாத துணையுடன் வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட்டுக் கொண்டே இருப்பதைவிட, இப்படியொரு தண்டனையை அனுபவித்துவிடுவது நல்லது.



# அம்மாவான பின் ஆரோக்கியம்தான் முக்கியம்

கர்ப்பிணிப் பெண்களுக்கு எப்படிச் சத்தான சமச்சீர் உணவு தேவைப் படுகிறதோ அதேபோல் குழந்தை பிறந்த பிறகும் தேவைப்படு கிறது. பிரசவத்தின்போது அதிகப்படியான இரத்தப்போக்கு ஏற்படுவதாலும் மற்றும் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்ப தன் காரணமாகவும் பெண்களின் உடம்பில் ஊட்டச்சத் துக் குறைபாடு ஏற் படுகிறது. இத்தகைய தாய்மார் களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு அல்லது மருந்து வாயிலாக இந்தக் குறைபாட்டை சமன்படுத்தமுடியும். ஆனால், உடல் பலவீனம் தொடர்வது தவிர்க்கமுடி யாமல் போகிறது. இதனால் தான் பிரசவித்த பெண்களின் உடல் பருமனாகிக் கொண்டே போகிறது.

இதனால், தாய்ப்பால் சுரப்பின் அளவும் குறைந்துபோகும் வாய்ப்புள்ளது. பிறந்த குழந்தை முற்றிலும் தாய்ப் பாலையே சார்ந்திருக்கிறது. முழுமையான அளவு பால் கிடைக்காததால் குழந்தை பசியோடு இருக்கும். அத்ன் வளர்ச்சியும் தடைப்படும். கர்ப்பகாலத்தில் எடுத்துக்கொள்ளும் உணவு - அதாவது சாதாரண அளவைவிட 300-400 கலோரி அதிகம் - புரோட்டீன், இரும்பு, கல்சியம் மற்றும் விட்ட மின்கள் நிறைந்த உணவாகும். குழந்தை பிறந்தபிறகும் இதே உணவை உட்கொள்வது நல்லது. ஊட்டச்சத்துகளும் விட்டமின்களும் பால்வழியாக குழந்தைக்குச் செல்கிறது. எனவே, தாய்ப்பால் கொடுப்பதை அதிகப்படுத்தவேண்டும். சத்து இல்லாத உணவு பலவீனத்தைக் கொடுக்கும்.

தாய்ப்பால் மூலம் அதிகப்படியான கல்சியம் குழந்தைக்குச் செல்கின்றன. குழந்தையின் எலும்புகள் வலுப்பெறுவதற்கு தாயின் பாலில் உ்ள்ள கல்சியம் உதவுகிறது. இந்தச் சத்து தாயின் எலும்புப் பகுதியில் இருந்து தான் உறிஞ்சப்படுகிறது. இதனால், தாயின் எலும்புகள் பலவீனமாகின் றன. இதைச் சரிக்கட்ட தாய்மார்கள் முடிந்தவரை அதிகமாகப் பால் அருந்தவேண்டும். தவிர தயிர், பனீர், பாலினால் ஆன இதர தயாரிப்புகள், எள், பச்சைக்காய்கறிகள், முருங்கைக்காய், காலிப்ளவர் போன்றவை மூலமாகவும் தாய்மார்கள் கல்சியம் சத்தைப் பெறலாம். குழந்தை பிறக்கும்போது ஏற்படும் இரத்தப்போக்கு காரணமாக பெண்ணின் உடம்பில் இரும்பு மற்றும் போலிக அமிலத்தின் அளவு குறையவும் செய்கிறது. இதனால், பெண்கள் இரும்பு அல்லது இரும்புச்சத்துள்ள உணவை அதிகம் சேர்த்துக்கொள்வது அவசியம். கம்பு, அரிசி, கொண்டைக்கடலை, வெல்லம், உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, சோயா பீன்ஸ், பச்சைக்காய்கறிகள், ஆப்பிள், வாழைப்பழம், சப்போட்டா போன்ற பழங்களில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. அசைவம் உண்ணும் பெண்களுக்கு மீன் மற்றும் முட்டையில் போதுமான அளவு கிடைக்கிறது. தானியம் மற்றும் பருப்பு வகைகளை முழுமையான அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவை பி.12 விட்டமின் பற்றாக்குறையைப் பூர்த்திசெய்யும்.

# டிப்ஸ்

★ தேங்காய் மூடி உலர்ந்து போயிருந்தால், சிறிது பால் தெளித்து வைத்து, பத்து நிமிடங்கள் கழித்துத் துருவினால் மிருதுவான துருவல் கிடைக்கும்.(அவியல், சட்னி, மோர்க்குழம்பு முதலியன தயாரிக்க மிருதுவான தேங்காய்தான் தேவைப்படும் என்பதால், தேங்காயைத் துருவிய பிறகும் கூட, அதில் பாலைத் தெளித்து வைத்து, மிருதுவாக்கலா[illegible]

## அளவோடு குடியுங்கள்

வெயில் காலத்தில் தண்ணீர் குடிப்பது மிகவும் நல்லது. அதற்காக சும்மா கிடைக்கிறதே என்பதற்காக அதிகமாகக் குடிக்கக்கூடாது. அப்படிக் குடித்தால் சிலருக்கு சோடியம் அணு இரத்தத் தில் குறைந்து கோமா வரலாம். ஆகவே, நிறையக் குடியுங்கள். ஆனால், அளவோடு குடியுங்கள்.

கிட்னியில் கல் உள்ளவர்கள் அளவுக்கு அதிகமாக தண்ணீர் குடிக்கக்கூடாது. சிலர் கூறுவார்கள், கிட்னி சார்ந்த பிரச்சினைகளுக்கு தண்ணீர் குடிப்பது மிக நல்லது என்று. ஆனால், அதேசமயம் கிட்னி பிரச்சினைகளில் 100மாதிரிகள் இருக்கின்றன. ஆகவே கவனம். அதிக தண்ணீர் குடித்தால் இரத்தத்தில் உப்பு குறைந்து கோமா வர வாய்ப்பு உண்டு. டாக்டரின் ஆலோசனையைப் பெற்று வெயில் காலத்தில் அதிக தண்ணீர் குடிப்பது நல்லது.

## இதனால் ஆபத்து

பெண்கள் கைகளில் அலங்காரம் செய்துகொள்வது நம்நாட்டில் மட்டுமல்ல பல அரபு நாடுகளிலும் வழக்கத்தில் உள்ளது. குறிப்பாக அல்ஜீரியா, துருக்கி, எகிப்து ஆகிய நாடு களில் இன்னமும் இந்த வழக்கம் உள்ளது. ஆனால் முன்பெல்லாம் இயற்கை பச்சிலைகளில் இருந்து இதற்கான (மருதாணி போல) மூலப்பொருட்களை எடுத்தனர். ஆனால், இப்போது காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் மூலிகைகள், இல்லாமல்போய் செயற்கையான ரசாயனக் கலவைகளில் அலங்காரம் செய்யப்படுவதால் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் வருகின்றன என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## லங்கன் ப்ரைட் ரைஸ்




### தேவையான பொருட்கள்


அரிசி - 2கப்
வெண்ணெய்/ மாஜரின் - 2 பெரிய தே.க.
குங்குமப்பூ - சிறிது
பட்டாணி - ஒரு கப்
சிறிய இறால் - 250 கிராம்
முந்திரி - 100கிராம்
உலர் திராட்சை - 50 கிராம்
கராம்பு - 2

**செய்முறை:**

அரிசியை வேகவைத்துக் கொள்ளவும். பிறகு அதோடு குங்குமப்பூ சேர்த்து சாதத்தை இறக்கி வைக்கவும். மாஜரினைச் சூடாக்கி அதில் மசாலாவைப் போட்டு ஒரு நிமிடம் வரை கொதிக்கவிடவும். பிறகு இறாலைச் சேர்க்கவும். இத்தோடுஉப்பையும் சேர்த்து சாதத்தில் போட்டுக் கிளறவும். கடைசியில் முந்திரி மற்றும் உலர் திராட்சையைக் கொண்டு அலங்கரித்துப் பரிமாறவும்.



# காத்திருப்பு



சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் நான் அணிந்திருந்த ஆடை, அன்றைய தினம் என் வசம் இருந்த பை, அத்துடன் என்னிடமிருந்த இன்னோரன்ன பொருட்களுடன் அந்தச் சிறைச்சாலையின் வாசலில் நான்!

ஆம்! இன்று எனக்கு விடுதலை! எதற்காக விடுதலை? குற்றங்கள் எதையும் புரியாத என்னை இதுவரை காலமும் சிறையிலடைத்து வைத்திருந்தவர்களின் மனச் சாட்சிக்கா விடுதலை? 25 வயது இளைஞனாக சிறைக்கு வந்தேன். இன்று 45 வயதுடைய ஒரு மனிதனாக, வாழ்வில் பெரும் பகுதியை செலவழித்து விட்டவனாக இப்போது வெளியேறுகின்றேன்.

இருபது வருட சிறைவாழ்க்கை எப்படியிருக்கும் என்று அனுபவித்த எனக்குத்தான் தெரியும். ஒவ்வொரு இரவும் ஓராயிரம் யுகங்களாகவே கழிந்தன. என் இளமை உணர்வுகள், வாழ்வியல் இச்சைகள் அனைத்தும் கம்பி வேலியிட்ட சுவர்க்கூண்டுக்குள் சிந்தப்பட்டு விட்டன. செய்யாத குற்றத்துக்காக என் செம்மையான வாழ்வு சிதைந்து விட்டது.

வடபுலத்தைச் சொந்த இடமாகக் கொண்ட நான் வெளிநாடு செல்லும் கனவுகளோடு, ஊரிலுள்ள நிலபுலங்கள் எல்லாவற்றையும் விற்றுத் திரட்டி, அம்மா மற்றும் தங்கைகளின் பாரிய எதிர்பார்ப்போடும் கையில் பெருந்தொகைப் பணத்தோடும் கொழும்பு வந்தேன்.

ஏஜென்சிக்காரனுடன் பல மாதங்கள் இழுபட்டேன். பணம்தான் கரைந்தது! பலன் எதுவும் இல்லை. கேட்டால் இன்று - நாளை என்பான். கடைசியாக ஒரு நள்ளிரவில் நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்த காக்கிச் சட்டைக் காரர்கள் 'புலி' என்று கூறி எனக்கு விலங்கிட்டனர். (இது ஏஜன்சிக்காரனின் வேலை) அன்று போட்ட விலங்கு இன்றுதான் உடைந்திருக்கிறது.

எங்கே போவது? இனிமேல் என்ன செய்வது என்று எனக்கு எதுவுமே புரியவில்லை. 'புலி' என்ற முத்திரையுடன் தென்பகுதியில் தங்கியிருக்க முடியாது. சொந்த ஊருக்கே போய்விடுவதென்று தீர்மானித்தேன்.

ஊரிலும் எனக்கென்று இப்போது யாருமேயில்லை. நான் சிறைக்கு வந்து ஐந்தாறு வருடங்களின் பின்னர் எனது அம்மா நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். அவரின் மறைவுக்கு என்னைப் பற்றிய கவலையே பிரதான காரணம். அதைக் கேள்விப் பட்ட நான் துடிதுடித்துப் போனேன். ஆயிரம் உறவுகள் வந்தாலும் அவரது அன்புக்கு ஈடாகுமா? என்ன செய்வது இழப்புக்களையும் தாங்கத்தானே வேண்டும்.

அதன் பின்னர் எனது தங்கைகளும் அவரவர் விருப்பத்துக்கு மண முடித்துக் கொண்டு 'அகதி' என்ற பெயருடன் இந்தியாவுக்குச் சென்று விட்டனர். அவர்கள் போகும்போது எனக்கொரு கடிதம் போட்டார்கள். அவ்வளவுதான். பின்னர் அவர்களைப் பற்றிய தகவல்கள் எவையும் வரவில்லை.

இருந்தும் ஊருக்குப் போக என் மனம் விரும்பியது. அதற்கு ஒரே ஒரு காரணம் அருந்ததி! ஆம்! நான் மனதார விரும்பியவள். என் வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொள்ள ஆசைப்பட்டவள்.

அவள் பற்றிய எண்ணங்களையும், இனிமையான நினைவுகளையும் இந்த இருபது வருட காலமாக இதயக் கூட்டில் பொத்திப் பாதுகாத்து வருகிறேன்.

கிட்டத்தட்ட ஒரு வருடமாக பழகி வந்தோம். அவளின் வீட்டாருக்கு தெரியாது. அவள் பாடசாலைக்கு வரும் வழியிலேயே என் வீடு இருந்தது. அவளும் நானும் பார்வைகளாலேயே ஒருவரை ஒருவர் ஸ்பரிசித்துக் கொண்டோம்.

பேசிப் பழகத் தொடங்கிய ஒரு மாதத்துக்குள்ளேயே எனக்கு இத்தகைய நிலைமை ஏற்பட்டு விட்டது.

அந்த ஒரு மாத இடைவெளியில் நாமிருவரும் பரஸ்பரம் புரிந்து கொண்டோம்.

''நான் வெளிநாடு போகிறேன்'' என்று சொன்னதும்,

''எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உங்களைத் தவிர யாரையும் மணமுடிக்க மாட்டேன். நீங்கள் திரும்பி வர எத்தனை வருடங்கள் ஆனாலும் உங்களுக்காகவே காத்திருப்பேன். ஏமாற்றி விடாதீர்கள்'' என்றாள்.

அந்த ஒரு வார்த்தைக்காகத்தான் நான் ஊருக்குச்செல்ல ஆசைப்படுகிறேன். அவள் காத்திருப்பாளா? என்னை நினைத்தால் எனக்கே சிரிப்பு வருகின்றது.

அதாவது இந்தக் காலத்தில் காதல் என்று கூறி யாராவது இருபது வருடங்கள் காத்திருப்பார்களா? அதுவும் அருந்ததி போன்ற அழகிகளை எத்தனை பேர் கொத்திக் கொண்டு போகக் காத்திருந்தார்கள்.

அவள் காத்திருப்பாள் என்ற நம்பிக்கை துளியளவேனும் எனக்கு இல்லாதபோதும் அவளை ஒரு தடவை பார்க்க மனம் விரும்பியது.

ஒருவேளை அவள் திருமணம் செய்து குடும்பத்தோடு இருந்தால் வாழ்த்திவிட்டு வருவது என்று நினைத்துக் கொண்டேன்.

அத்துடன் 'உன்னை நான் 20வருடமாக நினைத்துக் கொண்டிருந்தேன்' என்பதையும் அவளுக்கு உணர்த்த வேண்டும்.

நான் சிறையில் இருந்த காலங்களில் அங்கு வேலை செய்தமைக்கான கொடுப்பனவு கணிசமானளவு கையில் இருந்தது. முதலில் சலூனுக்குச் சென்று தலைமயிர் வெட்டி, தாடி வழித்துக் கொண்டு வவுனியா பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன். பஸ் பயணித்தது. நீண்ட .... காலத்தின் பின்னர் சொந்த மண்ணை மிதிக்கப் போகும் ஆனந்தத்தில் மனம் ஆனந்தக் கூத்தாடியது.

வவுனியா வந்து பல சோதனைக் கெடுபிடிகளைக் கடந்து, கிளிநொச்சி செல்லும் பஸ்ஸில் ஏறினேன்.

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் எனது உறவினர்கள் சிலர் இருந்தனர். என்னைக் கண்டதும் அதிசயித்தார்கள். அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். கடந்தகாலக் கதைகள் எல்லாவற்றையும் விவரித்தார்கள். முக்கியமாக, எனது அம்மா பட்ட வேதனைகளைச் சொன்னார்கள். என்ன செய்ய.... இன்றைய நிலையில் அம்மா இருந்திருந்தால் ஆனந்தக் கூத்தாடி இருப்பாள். ம்....என்ன செய்ய... நாம்எதிர்பார்க்காமலே எல்லாமே நடந்து முடிந்து விடுகின்றன.

மறுநாள் காலை விடிந்தவுடன் சைககிளை எடுத்துக் கொண்டு அருந்ததி வாழ்ந்து வந்த ஊருக்குச் சென்றேன். கிட்டத்தட்ட ஒரு மணி நேரப் பயணம். அந்த வீதிகளில் செல்லும் போது அருந்ததியுடன் கூடிக் கழித்த பொழுதுகளின் எண்ணச் செழுமைகள் இதயத்தை நிறைத்தன. இப்போது அவள் எப்படியிருப்பாள்? இளமையைத்

**சுடர் ஒளி**
**சிறுகதை**

தொலைத்து விட்டு ஏங்கிக் கொண்டிருப்பாளா?

நேரடியாக அவளது வீட்டுக்குப் போகக் கூடாது. அவளைப் பற்றி யாரிடமாவது சற்று விசாரித்து பார்ப்போம். நான் திடீரென்று போய் என்னை வெளிப்படுத்தினால் அது அவளுக்கு சிலவேளைகளில் சங்கடத்தை தரக்கூடும்.

எனவே அவளைப் பற்றி அறியும் ஆவலில் அந்த ஊரின் நுழைவாயிலில் அமைந்திருக்கும் கடைத் தொகுதியடிக்குப் போனேன். அங்குள்ள கடையில் தேநீர் அருந்தியபடி வீதியால் போவோர் வருவோரை நோட்டமிட்டேன்.

அப்போது கிறீச்சிட்டு வந்து நின்றது ஒரு மோட்டார் சைக்கிள். அதிலிருந்து ஒரு குடும்பம் இறங்கியது. அது....

**கிளிநொச்சி**
**வசி**

அது.... அருந்ததி. மற்றது யாராக இருக்கக் கூடும்? அவளது கணவன், எட்டு வயது மதிக்கத்தக்க சிறுவன், அத்துடன் நிறைமாதக் கர்ப்பிணியாக அவள்!

இது நான் எதிர்பார்த்ததுதான். இருப்பினும் இதயம் சுக்கு நூறாகியது. அவர்கள் வந்து கடையில் சிலபொருட்கள் வாங்கினார்கள். அருந்ததி இன்னும் அழகாகவே இருந்தாள். இந்த இருபது வருடங்கள் அவளை மாற்றவில்லை.

அவள் அருகில் இருந்த என்னை அறியவும் இல்லை. அடையாளம் காணவும் இல்லை! மனதை இறுக்கிக் கொண்டேன். நல்லவேளை நான்அவளது வீட்டுக்குச் செல்லாமல் விட்டது. ஏனென்றால் எனக்கும் அருந்ததிக்கும் இருந்த பழக்கம் அவள் வீட்டாருக்குத் தெரியாது. என்னையும் தெரியாது. எனக்குக் கூடஅவள் வீட்டு மனிதர்களை சரியாகத் தெரியாது.

சரி அவள் போய்விட்டாள். இனி நான் அங்கே போகக் கூடாது. அவள்சந்தோஷமாக வாழட்டும். இருந்தாலும் என்னை அவளுக்கு உணர்த்த வேண்டும். எனது இருபது வருடகால நேசத்தை அவள் அறிய வேண்டும். பக்கத்துக்கடையில் ஒரு பேனாவும் பேப்பரும் வாங்கி எழுதினேன், ஒரு கடிதம் அவளுக்கு,

'அன்புள்ள அருந்ததி,

உனக்கு என்னை நினைவிருக்க வாய்ப்பில்லை. இருப்பினும் இருபது வருடங்களுக்கு முன்னரான நாட்களை எண்ணிப்பார். நான் யார் என்பது ஞாபகத்துக்கு வரும். உன்னையே எண்ணி 20வருடங்களுக்குப் பின் சிறை மீண்டு வந்துள்ளேன். ஏனென்றால் உன் ஒரேஒரு வார்த்தைக்காக. 'வெளிநாடு போனால் நீங்கள் மறந்து விடுவீர்கள்' என்றாயே! இப்போது என்ன சொல்லப் போகிறாய். வாழ்த்துக்கள்!

இப்படிக்கு மனோ'

எழுதிமுடித்த கடிதத்தை ஒட்டி கடைக்காரரிடம் கொடுத்து அவளிடம் சேர்க்கச் சொன்னேன். கனத்த இதயத்துடன் வீடு சேர்ந்தேன்.

இப்படியே நாட்கள் ஓடின. மூன்று மாதங்கள் கடந்த பின்னர் எனது உறவினர்களால் பார்த்துப் பேசி நிச்சயிக்கப்பட்ட பெண்ணொருத்தியை மணக்கும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது.

நிர்ப்பந்தம் என்றாலும் அது நியாயமானதாகவே எனக்குப் பட்டது. எத்தனை காலம்தான் ஒட்டுறவின்றி தனியாக வாழ்வது. வாழ்வில் ஒரு பிடிப்பு வேண்டுமே! எனது மனைவிகூட ஆழிப் பேரலையால் உறவுகளைப் பறி கொடுத்தவள்தான். அவள் என்னை விரும்பி ஏற்றுக்கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன. எனது மனைவியின் உறவினரின் உதவியால் நாங்கள் கொழும்புக்கு குடிபெயர்ந்தோம். சொந்தமாக தொழில் தொடங்கினேன். வாழ்க்கை நன்றாக போய்க் கொண்டிருந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை வாரப்பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்த எனது கண்ணில் பட்டது அந்தத் தலைப்பு. 'சிறைமீண்ட என்னவனுக்கு' தொடர்ந்து வாசித்தேன்.

'அன்புள்ள மனோவுக்கு அருந்ததி எழுதுவது, நீ எங்கே இருக்கிறாய்? உனக்காக நான் இருபது வருடங்களாக தவமிருக்கிறேன். நீ சிறை சென்று விட்டாய்என்று கேட்ட நாள் முதல் நான் உன்னை - உன் நினைவுகளை மட்டுமே சுமந்து வாழ்கிறேன். இந்தக் கால இடைவெளியில் எனக்கு எத்தனையோ திருமணப் பேச்சுக்கள். எல்லாவற்றையும் உதறிவிட்டேன். நீ சிறைப்பட்டபோது உன்னைத் தேடி நான் கொழும்புக்கு வந்து சந்தேகத்தில் பிடிபட்டு 3 வருடம் சிறைவாசம் அனுபவித்தேன். அது மட்டுமா? சிறைக்கம்பி அறையில் நான் சின்னாபின்னமாகி விட்டேன். மீண்டும் விடுதலை பெற்று வீடு வந்தேன். வாழ்க்கை பிடிக்கவில்லை.

ஆனாலும் விதி உள்ள மட்டும் வாழத்தானே வேண்டும். இப்போதும் நான் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறேன். உனக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் காத்து 'நிற்க' எனக்கு கால்கள் இல்லை. ஆம் யுத்தம் எனது கால்களை பறித்துவிட்டது.

நீ ஊரில் வந்து பார்த்தது நானல்ல. எனது தங்கை. அவசரப்பட்டு விட்டாய். எனது காதலை போலியாக நினைத்து விட்டாய். உன் கடிதம் அதைத்தான் உணர்த்தியது. நான் இந்தக் கடிதத்தை எழுதுவதன் காரணம் மீண்டும் நீ என்னைத் தேடி வரவேண்டும் என்பதற்கல்ல. என்னை உணர்த்த வேண்டும் என்பதற்காக. ஒருவேளை நீ சிறையில் இருந்ததால்தான் என்னை நினைத்திருந்தாயோ தெரியவில்லை. இதே நீ வெளியில் இருந்திருந்தால் காத்திருந்திருப்பாயா?

இப்படிக்கு அருந்ததி'

அவளது கடிதம் என் நெஞ்சத்தை ஈட்டியால் தைத்தது. என் கண்மணி எனக்காகவே காத்திருக்கிறாள். என்ன செய்ய... எல்லாம் கைமீறி விட்டது. இனியும் நான் போய் அவளிடம், 'என்னை மறந்து விடு' என்று கூற முடியாது. அவளைக் காரணம் காட்டி என்னை நம்பியவளை கண்ணீரில் தவிக்க விடவும் முடியாது. நினைவுகளே சுபம்.




# “யார் இவர் தெரிகிறதா?” 17



**இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?**

இவர் இந்தியாவின் சட்ட வகுப் பாளர். இவர் பெயரின் ஈற்றில் கார் வருகிறது. இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட் டை யில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின்

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
“யார் இவர் தெரியுமா?”
85/ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ “யார் இவர் தெரிகிறதா?” இல.14 இற்கான சரியான விடை: நோர்வேயின் சமாதானத் தூதுவராக செயற்பட்ட எரிக்சொல்கெய்ம். சரியான விடைகளை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. ஆ.திலீபன், வவுனியா. 2.ஏ.பாத்திமா ரிபாஸா, பொத்துவில்-02. 3. வை.ஜோதிகா, திருகோணமலை. 4. ஏ.றுகையா, மூதூர் -02. 5. எஸ்.எம்.சாமிலா, தென்கிழக்குப்பல்கலைக்கழகம்..

# விளம்பரம் வேணுமுங்க!




நாளுக்கொன்றாக முளைக்கும் காளான் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் விளம்பரத்துக்காக ஒவ்வொரு கம்பெனியாக ஏறி இறங்குவார். விளம்பரம் கொடுத்தால் அவர்களைப் பற்றிப் புகழ்ந்து எழுதுவார். தராவிட்டால் தாறுமாறாக எழுதுவார்.

தொடர்ந்து விளம்பரம் கொடுத்து வந்த குளிர்பானக் கம்பெனி ஒன்று அந்தப் பத்திரிகை விற்பதே இல்லை என்பதை அறிந்து விளம்பரம் கொடுப்பதை நிறுத்திவிட்டது. கோபமடைந்த ஆசிரியர் அடுத்த இதழில், அந்த பானத்தை அருந்திய பல பேருக்கு ஆண்மையே போய் விட்டது என்றும் பலவிதமான நோய்கள் வருகின்றன என்றும் கட்டுரை எழுதி வெளியிட்டார். சுவரொட்டிகளையும் அச்சிட்டு ஊர் முழுவதும் ஒட்டச் செய்தார்.

அவர் மீது வழக்குப் போடுவதால் வீண் செலவுதான் ஏற்படும் என்பதை உணர்ந்த அக்கம்பெனி அதிபர் தன் மனேஜரிடம் அவரைக் கவனிக்கும்படி கூறிவிட்டு வெளியூர் சென்று விட்டார்.

மனேஜர் அன்பாக ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதி தம்மை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். விளம்பரம் கிடைக்கப் போகிறது என்ற மகிழ்ச்சியுடன் மறுநாள் ஆசிரியர் வந்தார். அவரை ஒரு அறைக்குக் கூட்டிச் சென்று நையப் புடைத்தார்கள். அதே சமயம் அத்துமீறி ஆபீஸுக்குள் நுழைந்து கலாட்டா செய்து ஆபீஸில் உள்ளவர்களை அடித்ததாக அவர் மீது பொலிஸில் முறைப்பாடும் செய்துவிட்டார்கள். அடிவாங்கிய தோடல்லாமல் ஆசிரியர் சிறைக்கும் போக வேண்டியதாயிற்று.










...மனியாவில் நடைபெற்ற விழாவில், பாரம்பரிய மணமகள் அலங்காரத்தில் வலம் வந்த பெண்.

# தத்துவம்


ஞானம் : கண் கெட்டால் உடலடையும் ஊனம்
கற்று விட்டால் நீ அடைவாய் ஞானம்.

சாதி : வீட்டில் எரிகிறது ஜோதி
வீட்டை எரிக்கிறது சாதி.

கை : பற்றி எரிகிறது இலங்கை - அதை
பாதுகாக்க திரள வேண்டும் இளங்கை.

மை : எம்மவர்கள் இழக்கின்றார் உரிமை - அதை
எத்திக்கும் சொல்ல வேண்டும் உன் பேனா மை.

தை : உண்டால்தான் மயக்கம் தரும் போதை -ஆனால்
உண்ணாமலே மயங்க வைககும் பேதை.



கண்ணே! நீ கிள்ளினாலும் சுகமாத்தான் இருக்குது!




தெற்கு மணிலாவில் நடைபெற்ற 'மிஸ் எர்த்' அழகிப் போட்டியில் கலந்து கொண்ட பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜெண்ணி ஹாரு.



# சிங்காரச் சீமையிலே சீரழியும் இளம் பெண்கள்

அழகு, இளமை, வறுமை இவை மூன்றும் நேபாளத்தில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. செல்வச் செழிப்புடன் சிங்காரமாக வாழ வேண்டிய இளம் பெண்கள் சீரழிக்கப்படுகின்றனர்.

நடைபாதை விற்பனை அங்கு எண்பது வீதம் பெண்களின் ஆக்கிரமிப்பில் உள்ளது. சாதாரண சட்டைத் துணிகள், கடிகாரம், தொலைக் காட்சி மற்றும் அங்காடிப் பொருட்கள் அனைத்தும் நடைபாதையில் கிடைக்கின்றன.

அதிகாலை முதல் நள்ளிரவுவரை இளம் பெண்கள் நடைபாதையில் கடை பரப்பி வியாபாரம் நடத்துகின்றனர். விற்பனையில் மும்முரமாக ஈடுபட்டுள்ள பெண்கள் தமது ஆடைகளைப்பற்றி கவலைப்படுவதாக தெரியவில்லை. எப்படிக் கிடந்தால் என்ன என்று அப்படியே விட்டு விடுகின்றனர். இந்தக் கவர்ச்சியால் கூட்டம் நிறைகின்றது. வியாபாரம் களை கட்டுகின்றது.

ஆனால், கடுமையாக உழைத்தால்தான் சாப்பாடு என்ற நிலை. 12, 14 வயதுச் சிறுவர்களும், இளம் பெண்களும் கூட 'டெம்போ' எனப்படும் டுக்.. டுக்.. என்ற மூன்று சக்கர ஆட்டோக்களை லாவகமாக ஓட்டிச் செல்கின்றனர். நம்நாட்டில் நான்கு பேர்களுக்கு மேல் ஏற்றிச் செல்ல முடியாது. ஆனால், அங்கு 10க்கும் குறையாதவர்களை அரிசி முடைகள் போல் அடுக்கிச் செல்கின் றனர். அதற்கேற்ற வகையில் வண்டிகளை வடிவமைத்துள்ளனர்.

இன்றும்கூட அங்கு வண்டிகளையும் சைக்கிள் ரிக்ஷாக்களையும் காணக் கூடியதாக இருக்கிறது. சட்டம், வீதி ஒழுங்கு என்பன மருந்துக்கும் கிடையாது.

தெருவோரப் பிச்சைக் காரர்கள் நிறைந்துள்



ளார்கள். தெருப் பிச்சைக்காரர்கள் அதே இடத்தில் செத்துக் கிடப்பதையும் காண முடிகிறது.

இன்னாருடைய கலாசாரம் இதுதான் என்றும் இவர்களை அடையாளம் காட்டும் ஆடைகள் இப்படித்தான் என்றும் பிரித்து அறிந்து கொள்ள முடியாது.

பிராமணர்கள் என்று பூணூல் போட்டுக் கொண்டிருப்பவர்கள் வெளிப்படையாக மாமிச வகைகளை ருசித்துச் சாப்பிடுகின்றனர். இங்கு நம்மவர்கள் 'எட்டப்போ, தொட்டுவிடாதே' என்று ஒதுங்கிச் செல்கின்றனர் பிராமணப் பெண்களும் ஆண்களும். ஆனால், நேபாளத்தில் பெண்கள் கவர்ச்சிகரமான டீசேர்ட், ஜீன்ஸுகளுடன் சர்வசாதாரணமாக நடமாடுகின்றனர்.

முட்டிமோதிக் கொண்டால் Sorry என்று எவரும் கூறுவதில்லை. ஒரு சிரிப்புடன் சமாளித்து விடுகின்றனர். பலருக்கு இது வாய்ப்பாகிவிடுகிறது.

எங்களுடன் உரையாடிய 'ஷப்னா' என்ற இளம் பெண் சட்டத்தரணி சில விடயங்களைக் கூறினார். இவர் நேபாள பெண்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் இயக்கத்தை சேர்ந்தவர்.

''எமது பெண்கள் காலம் காலமாக உதாசீனப் படுத்தப்பட்டு ஓரம்கட்டப்படுவதால் ஆயுதம் ஏந்தும் போராளிகளாக மாறிவிட்டனர். யுத்தக் கொடுமை யால் பெற்றோரை, சகோதரரை, குடும்பத்தை இழந்த பெண்களும், வெளிப்படையாகவே விப சாரத்தில் ஈடுபடுகின்றனர். களியாட்ட விடுதி களில் ஆபாச நடனம் ஆடுகின்றனர், பாடிப் பிழைக் கின்றனர்'' என்று வேதனையுடன் கூறினார்.

ஆரம்பத்தில் இவர் மிகைப்படுத்திக் கூறுகின்றாரோ என்று நினைக்கத் தோன்றியது. பின்னர் இல்லை இல்லை அத்தனையும் உண்மை என்பதை அறிய முடிந்தது.

செல்லும் இடங்களில் எல்லாம் வீதிக்கு வீதி நடனக் கிளப்புகள்; களியாட்ட விடுதிகள். அங்கே அழகும் இளமையும் விலை போகின்றன.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டம், புறக்கணிப்பு என்பவைதான். அதேவேளை, இவற்றை அங்கு உருவாக்கியது யார்? இயற்கை வனப்புடன் சிங்கார பூமியாக இருந்த நேபாளத்தை இடுகாடாகவும், சாம்பல் மேடாகவும் மாற்றியது எது?

இவற்றுக்கெல்லாம் கிடைத்த ஒரே பதில் உள்நாட்டு யுத்தம். அரச இராணுவமும் மாவோயிஸ்ட் போராளிகளும் நடத்திய மனித வேட்டைகள் என்பன அப்பூமியை சீரழித்து விட்டன என்பதே!

இதற்குக் காரணமானவர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களிடமே நிலைமைகளை கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

மன்னரின் கட்டுப்பாட்டில் இருந்த நேபாள அரசின் றோயல் ஆமி, மாவோயிஸ்ட்டுகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் விடுதலை இராணுவம் என்பவற்றின் தளபதிகளை அவர்களின் முகாம்களிலேயே சந்தித்தோம்.

பல வருடங்களாக ஆயுதங்களுடனேயே வாழ்ந்து பழக்கப் பட்டவர்கள் இப்பொழுது சாதாரண வாழ்க்கை வாழ ஆரம்பித்துள்ளனர்.

காட்டுக்குள் மாவோயிஸ்ட்டுகளும் நாட்டுக்குள் அரச இராணுவத்தினரும் முகாம்களுக்குள் முடங்கி இருக்கின்றனர்.

தலைநகர் காத்மண்டுவில் இருந்து சுமார் 245 கிலோமீற்றர் தொலைவில் வனப் பிராந்தியத்தில் அமைந்துள்ள மாவோயிஸ்ட்டுகளின் முகாமில் முகாம் பொறுப்பாளர்களையும் லெப்டினன்களையும் கண்டோம். முகாமுக்கு செல்வதற்கு முன் அரசியல் துறையினரின் விசாரணைகள், சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகள் என்பவற்றைக் கடந்தே மாவோயிஸ்ட்டுகளின் முகாமை அடைய முடிந்தது.

நம் நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கேந்திர நிலையங்களுக்கு இலகுவில் எவரும் செல்ல முடிவதில்லை. உயர்மட்ட சர்வதேச சந்திப்புக்கள் அரசியல் பணிமனையில் தான் நடக்கின்றன. ஆனால், மாவோயிஸ்ட்டுகள் தமது படை முகாமுக்கு எம்மை அழைத்துச் சென்றனர்.

நாம் சென்ற இராணுவ முகாம் பொறுப்பாளர் பிரிகேடியர் கேணல் பிரதிக்ஷா, பிரதி பிரிகேடியர் மாகம் ஆகியோர் எமக்கு விளக்கம் அளித்தனர்.

இவர்கள் முரட்டுத்தனமாகக் காணப்படவில்லை. அழகான அதேவேளை திடகாத்திரமானவர்கள். முகாம் பொறுப்பாளர் பிரிகேடியரும் அவரது மனைவியும் போராளிகள். அரச இராணுவத்துடன் இடம் பெற்ற மோதலில் அவருடைய மனைவி கொல்லப்பட்டுள்ளார்.

இதே போன்று பல கதைகள் உண்டு. திருமணம் முடித்த பெண்களும், விதவைகளாக்கப்பட்டவர்களும் போராளிகளாக முகாம்களில் இருக்கின்றனர். யுத்தத்தால் அநாதைகளாக்கப்பட்ட மற்றும் போராளிகளின் குழந்தைகள் உட்பட 160 குழந்தைகள் இந்த முகாமில் பராமரிக்கப்படுகின்றனர்.

இராணுவ சீருடையில் ஒரு போராளித்தாய் தன் குழந்தைக்குப் பால் ஊட்டிக் கொண்டிருந்த காட்சி மனதை உருகச் செய்தது.

''முற்றுமுழுதாக மாவோயிஸ்ட்களினால் பராமரிக்கப்படும் இக்குழந்தைகளும் ஆயுதக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?'' என்று கேட்டோம்.

''இல்லை, இல்லை நகரில் உள்ள பிள்ளைகளைப் போலவே வளர்க்கிறோம். அருகில் உள்ள கிராமப் பாடசாலைகளுக்கு செல்கின்றனர். அவர்கள் வளர்ந்த பின் அவர்கள் சாதாரண வாழ்க்கையை சுயமாக ஆரம்பிக்கலாம். உயர்கல்வியை கற்கலாம். சகல உதவிகளையும் செய்கிறோம். எங்களுடைய அமைப்பில் டாக்டர்கள், பொறியலாளர்கள், சட்டத்தரணிகள் என பலரும் சுய விருப்பத்தின் பேரில் இணைந்து செயற்படுகின்றனர். அவர்களின் தொழிலையும் செய்கின்றனர்'' என்று சுட்டிக் காட்டினார் பிரிகேடியர் கேணல் பிரதிக்ஷா.

'''இம் முகாமில் உள்ள அனைவரும் நன்கு பயிற்சி பெற்றவர்கள். எமது பெண்கள் குண்டு தயாரிப்பில் நிபுணத்துவம் பெற்றவர்கள். எதற்கும் முகம் கொடுக்க தயாரானவர்கள். இதே போன்று 17 முகாம்கள் இருக்கின்றன. வசதிக்கேற்ப 1500 முதல் 3000 பேர்வரை இருக்கின்றனர். இது தலைமை முகாம். இங்கு 5000 பேர் இருக்கிறோம்'' என விளக்கினார்.



''எல்லாமாக 30,000 பேர் எங்களுடைய இராணுவப் பிரிவில் இருக்கிறோம். சமாதான ஒப்பந்தத்தின் பின் அரசாங்கமே எங்களுக்கு உணவுக்கான அலவன்ஸை வழங்குகின்றது'' என்றும் குறிப்பிட்டார்.

''உங்களுடைய ஆயுத பலமும் ஆள் பலமும் குறைந்து விட்டது என்பதால்தான் சமாதான ஒப்பந்தத்துக்கு வந்தீர்களா?''

''இது தவறு அனைத்துப் பலமும் எம்மிடம் இருக்கிறது. இப்பொழுதும் நேபாளத்தில் 72 வீதமான பகுதி எங்களுடைய கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. மக்கள் செல்வாக்கும் உண்டு. அதனால்தான் நாடாளுமன்றத்தில் எமக்கு 83 ஆசனங்களை வழங்கி உள்ளனர்.

நாட்டில் தொடர்ந்தும் இரத்தம் சிந்தக் கூடாது. பொதுமக்கள் துன்பமடையக் கூடாது என்பதாலும், மன்னரின் சர்வாதிகார ஆட்சியை ஒழிக்க இணக்கம் காணப்பட்டதாலுமே நாம் சமாதான உடன்பாட்டுக்கு முன் வந்தோம். நாம் செல்வாக்கிழந்து வருகின்றோம் என்பது தவறு.

ஆனால், மன்னருக்கு ஜனநாயக ஆட்சி மலர்வதில் விருப்பம் இல்லை. அவர் ஒரு சர்வாதிகாரி. அரசாளும் திறமை கைநேந்திராவுக்கு இல்லை. அவர் ஒரு வர்த்தகர் மட்டுமே. மாவோயிஸ்ட்டுகளை இரண்டாகப் பிரித்தவர். தாயின்ட்டுகளை உருவாக்கியவர். இப்படிப் பிரிந்தவர்கள் 18 பிரிவுகளாகப் பிளவு பட்டுள்ளனர். ஒரு பிரிவுக்கு மன்னரின் நெருங்கிய உறவினரே தலைமை தாங்குகின்றார். இப்பிரிவினருக்கு மன்னரே நிதி உதவி செய்கின்றார்.

**இரா.புத்திரசிகாமணி**

மன்னரின் தூண்டுதலினாலேயே இன்று மீண்டும் கலவரங்கள் ஆரம்பித்துள்ளன. குழுக்களுக்கிடையில் மோதல், கொலைகள் இடம் பெறுகின்றன. எப்படியாவது நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி தான் தொடர்ந்தும் ஆட்சியை நடத்த வேண்டும் என்பதே அவரது நோக்கம். தேர்தல் நடக்கக் கூடாது; உறுதியான நாடாளுமன்றம் அமையக் கூடாது என்பது அவரது திட்டம்.

இதனால்தான் மன்னரின் அதிகாரங்கள் அனைத்தும் பறிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் பிடிவாதமாக இருக்கின்றோம். இதை ஏற்காவிட்டால் நாம் மீண்டும் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ளப்படுவோம். ஆனால், நாம் அதனை தவிர்த்தே வருகின்றோம்.

தேசிய இராணுவம் மன்னரின் கட்டுப்பாட்டில் இருந்தது. உயர்பதவிகளில் இருப்பவர்கள் அனைவரும் மன்னரின் இனத்தவர்கள். ஒரு பகுதியினர் இன்னும் மன்னருக்கு ஆதரவாகவே இருக்கின்றனர். உடன்படிக்கையையும் மீறி ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர்'' என்றும் குற்றம் சுமத்தினார் மாவோயிஸ்ட் பிரிகேடியர்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்து கொண்டு தேசிய இராணுவத் தலைமையகத்துக்கு சென்று இராணுவத் தளபதியையும், இரண்டாவது படை நிலை அதிகாரியாகவும் இராணுவ பேச்சாளராகவும் கடமையாற்றுபவரையும் சந்தித்தோம்.

நேபாள அரசியல் கட்சிகளாலும் மாவோயிஸ்ட் போராளிகளினாலும் மன்னர் மீதும் அவரது கட்டுப்பாட்டில் இருந்த அரச இராணுவம் மீதும் சுமத்தப்பட்ட இந்த சாட்சிகள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவர்களிடமே நேரடியாகக் கேட்டறிந்தோம். அதன் விவரங்களை அடுத்த வாரம் அறிந்து கொள்வோம்.

(அடுத்த வாரம் தொடரும்)


## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபகமறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல்,பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும்நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம். நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின்போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்**
அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**
2007 டிசம்பர் 08, 09, 10 வரை
Vanni Inn,
2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**கொழும்பில்...**
2007 நவம்பர் 18 முதல் 24 வரை
New Ahmed Tourist Inn,
BangBang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
Hot Line: 0777 569205

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவு செய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஓடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019,
Hot Line: 0777 569205.

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 288

சொற்சிலம்பம் 288 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் நவம்பர் 17ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 02 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.286 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 286

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கை | 2 யா | லா | 3 க | 4 த | 5 வ | ன் | ■ |
| 6 தூ | சி | ■ | 7 மு | ட் | டை | ■ | 8 த |
| க் | ■ | 9 ச | க | டை | ■ | 10 பா | வி |
| 11 கு | ம | 12 ர | ன் | ■ | 13 ம | ல | டு |
| ■ | 14 க | ண் | ■ | 15 பி | ண | ம் | ■ |
| 16 த | ர | ■ | 17 பா | ர | ம் | ■ | 18 வ |
| 19 ச | ம் | 20 ம | த | ம் | ■ | ம | ண் |
| மி | ■ | 22 து | ம் | பு | த் | த | டி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 286

1. நெல்சன் ஜெபத்துரை, இல:94 பிரதான வீதி, பண்டாரவளை.
2. வே.சி.சிகோஜிதன், மத்திய வீதி, பெரிய கல்லாறு-02
3. செ. விநாயகதாஸ், 15. அகத்தியார் வீதி, தோணிக்கல் வவுனியா.

## பாராட்டுப் பெறுவோர்

1. **திருமதி ராஜினி புண்ணிய மூர்த்தி,** திருகோணமலை
2. **செல்வி எம்.எஸ் பாத்திமாசிபானா,** ஏறாவூர்-03.
3. **ஏ.சி.எம் அனீக்,** பொலன்னறுவை..
4. **செல்வி தர்ஷினி கந்தசாமி,** மல்வத்தை 02.
5. **செல்வி பாத்திமா ஐஷா அப்துல் ரஹ்மான்,** பேருவளை.
6. **அ. பத்மலோசனா,** கொழும்பு 13.
7. **கே.பவனுசா,** முள்ளியவளை.
8. **திருமதி. வி. நவராணி,** தெகிவளை.
9. **திருமதி சீனத் உதுமான்,** கொழும்பு 02.
10. **வாமதேவன் அனுஷன்,** வவுனியா.
11. **க. கமால்தீன்,** ஏறாவூர் 03.
12. **திருமதி டீ. பரமேஸ்வரன்,** கொழும்பு 06.
13. **பாத்திமா முஹ9சாஸ்,** புத்தளம்.
14. **க.கமலேஸ்வரன்,** கிளிநொச்சி.
15. **எஸ் மகாலிங்கம்,** துறைநீலாவணை 07.

## சொற்சிலம்பம் போட்டி இல. 288

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | ■ | |
| 11 | | | | | ■ | 12 | |
| | ■ | 13 | | ■ | 14 | | ■ |
| ■ | 15 | | ■ | 16 | | ■ | 17 |
| 18 | | | 19 | ■ | 20 | 21 | |
| 22 | | ■ | 23 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.288

**இடமிருந்து வலம்**

1. (நூல்)பதிப்பிப்பது இங்கே.
4. அரைவாசி.
6 நீர் பாயும் மதகு.
7. மேளம் .
8. நரகம் அல்ல.
11. எரிதல்/தேள் கொட்டினால் ஏற்படும் நோவு.
12. நித்திரையில் வரும்.
13. விழி.
14. சிரசு மயிர்.
15. உள்ளது.
16. கடையேழு வள்ளலில் ஒருவன் .
18. சரீரம்.
20. அஞ்சல்.
22. இது இல்லாவிட்டால் பொக்குவாய்தான்.
23. கைகூப்பு.

**மேலிருந்து கீழ்**

1. கிளி.
2. யுத்தம் நடைபெறும் இடம்.
3. ஓர விழி(ப்)பார்வை.
4. பாவம் செய்தவன்.
5. ஒரு சந்தக் குறிப்பு/ ஆடல் வகை.
7. தங்களது.
9. காயத்தின் அடையாளம்/ மறு.
10. படி/ மண்ணுக்கு முந்தியது.
12. வியாபாரம் செய்யும் இடம்/ வர்த்தக நிலையம்.
14. வரலாறு/ சரித்திரம்.
15. தேகம்.
17 படிப்பறிவு தரும் கலை.
18. துணை/உறுதி.
19. ஊடு செல்ல/ உள்ளே செல்ல.
21 திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை

# குழந்தைகள்...

(06ஆம் பக்கத்தொடர்ச்சி)

எதிர் சினிமா என்னும் கலைவடிவம் கண்டெடுக்கப்பட்டது. அதன் முக்கிய பிரிவாக ஆவணப்பட உலகம் பரிணமிக்கத் தொடங்கியது.

கவனித்துப் பார்த்தால் வெளிப்படையாகவே தெரியும் பெயரிலேயே எதிர் சினிமா என்ற அடையாளம். வெகுஜன சினிமா கட்டமைத்து வைத்திருக்கும் பொய்களையும் போலிமைகளையும் கட்டுடைக்கும் வேலையையே இந்த ஆவணப்படங்கள் செய்யமுற்படுகின்றன.

உதாரணத்திற்கு கொலிவூட் திரைப்படங்கள் விமானத்தாக்குதல்களை (ஒரு சாரார் மீது பிறிதொரு சாரார் நடத்தும்) ஆராய்வதில்லை. அதன் வேர்களை தேடுவதில்லை. மாறாகக் கிளர்ச்சியூட்டும் வகையில் அதை மிகத் துல்லியமான காட்சிப் பதிவுகளுடன் ஒரு பரவசமாக முன்வைக்கிறது. அதைக் கொண்டாடுகிறது. இப்பரவசத்திற்குட்படும் ஒரு பார்வையாளன் அத்தாக்குதலின் நோக்கம், அதன் பின்னுள்ள அவலம், துயரம் வன்முறை குறிப்பாக அதன் அரசியல் என்பவற்றை மறந்து - மன்னிக்கவும் மறக்கடிக்கப்பட்டு - ஒரு மந்தையைப் போல் திரையரங்கிலிருந்து வெளியேறுகிறான். ஆனால், ஆவணப்படங்கள் இதற்கு மாறாக அத்தாக்குதலின் அரசியலை அக்குண்டுவீச்சிற்கு இலககாகும் மக்கள் கூட்டத்தின் அவலததை, துயரத்தை அவர்களின் மொழியிலேயே பேச எத்தனிக்கிறது. பார்வையாளனுடன் அந்த நிகழ்வைப் பகிர்ந்துகொள்ள முற்படுகிறது.

இதை வேறு ஒருமொழியில் சொன்னால் ஹொலிவூட் திரைப்படங்களில் மேற்படி காட்சியை கமெரா வானத்தில் அந்தரத்தில் பறந்தபடி கீழ்நோக்கி நிலத்தை படம் பிடிக்கிறது. ஆவணப்படங்களில் கமெரா அழிவுக்குள் நின்றபடி வானத்தை நோக்கி கீழிருந்து மேலாக படம்பிடிக்கிறது. இன்னும் நுட்பமாகப் பதிவுசெய்வதென்றால் கமெராவை, ஒருகட்டத்திற்கு பிறகு பார்வையாளனின் கைகளில் ஒப்படைத்து விடுகின்றன ஆவணப்படங்கள்.

'It is a Kfir' முடிவில் கமெரா என் கையில் கிடந்ததை உணரக்கூடியதாக இருந்தது. இப்படத்தில் மேலிருந்து எடுக்கப்பட்ட காட சிகள் ஏதும் தொகுக்கப்பட்டிருந்தால் இதன் நோக்கம் முழுவதுமாகச் சிதைந்திருக்கும். ஆவணப்படங்கள் குறித்த ஆழமான புரிதல் உள்ளவர்களைக் கொண்டே இப்படம் சமாதா னச் செயலகத்தினால் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

ஆவணப்படங்கள் (எதிர் சினிமா) ஒடுக்கப்பட்ட மக்களை வெறும் பார்வையாளர்களாக, சடப்பொருள்களாகக் கருதாமல் தன்னிலைகளாக அங்கீகரிக்கிறது. இவ்வாறான காத்திரமான கலைப்படைப்பில் பார்வையாளர்களென யாரும் தனியே கிடையாது. அங்கு முனைப்பான அவதானிகள் மட்டுமே உண்டு. தமிழீழ சமாதானச் செயலகம் இத்தகைய ஒரு காத்திரமான செயற்பாட்டை ஆரம்பித்து வைத்து தனது பணியின் ஆழத்தை எல்லோருக்கும் உணரவைத்தது மட்டுமல்ல உலக அரஙகை நோக்கி நகரும் விடுதலைப் போராட்ட வடிவம் ஒன்றையும் அறிமுகம் செய்தமைக்காக அதனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஏனெனில், எமது விடுதலையின் அடுத்தகட்டம் ஆயுதப் போராட்டத்திற்கு அப்பாலும் விரிந்து செல்ல வேண்டிய தேவையை காலம் நமககு அறிவுறுத்துகிறது.

கனடாவைச் சேர்ந்த 'ராபர்ட் பிளகர்டி' என்பவர் எஸ்கிமோக்களின் வாழ்க்கைச் சூழலை வைத்து எடுத்த 'nanook of the north' என்ற ஆவணப்படம் தான் முதலாவது ஆவணப் பட வரலாறாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதன் நீட்சி இன்று கடந்த 2004 ஆம் ஆண்டு பெரும் விஸ்வரூபம் எடுத்திருந்தது. பிரபல ஆவணப் பட இயககுநரான மைககேல் மூர் தயாரித்த Farenheit 9:11 என்ற படம் அமெரிக்காவின் அதிகாரத்தையும் உணமை முகத்தையும் தோலுரித்திருக்கிறது. அந்தவகையில், 'It is a Kfir' உம் சிங்களததின் கோரமுகத்தைக் கிழித்து உலகிற்கு அமபலப்படுததியிருக்கிறது. இதன் வழி உலக மனச்சாட்சிகளில் பல கேளவிகளாக தங்கியும் விட்டது.

அண்மையில் தங்கர்பச்சானின் இயக்கத்தில் வெளிவந்துள்ள பள்ளிக்கூடம் என்ற திரைப் படத்தை பார்க்கும் வாய்ப்புக்கிட்டியது. அது தந்த மனவெழுச்சியுனூடாக எல்லையற்று கிளாந்த நினைவுகளையும் அதன்வழி கட்டற்றுப் பெருகிய உணர்வுகளையும் ஒருநிலைப்படுத்த முடியாமல் அன்றைய இரவு விபரீதமானதாக என்னைக் கடந்து சென்றது. இந்தப் புதிரான மன நிலையை பாடசாலை நாட்கள், பழைய நண்பர்கள், எனது மனைவி - அவள் மீதான எனது தீராத காதல் என்று சுமார் 50 பக்கங்களுக்கு குறையாமல பள்ளிககூடத்தை மையப் படுத்தி எழுதித் தான் கடக்கமுடிந்தது. அதன் முடிவில் மனதின் ஆழத்தில் சுரீரென முள்ளாய் ஒரு கேள்வி வந்து சிடுக்கானது. ஈழத்தில் பள்ளிககூடம் குறித்த எமது சிறாாகளின் புரிதல் எத்தகையது என்பது தான அந்தக் கேள்வி. பதில் தெரியாத இந்தக் கேள்வி தந்த தீராத வலி அந்த 50பக்கங்களையும் திரும்பவும் வெற்றுப்பக்கங்களாக்கியது.

இன்று 'It is a Kfir' அக்கேள்விக்கான பதிலை ஒரு பேராவலமாக நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. அரச பயங்கரவாதத்தினாலும் தொடர் இடப்பெயர்வினாலும் 'பள்ளிக்கூடம்' என்பது அசைந்துகொண்டிருக்கும் ஒரு படிமமாகவும் வகுப்பறை என்பது மரத்தடி நிழலாகவும் சிறாாகளின் மனத்தில் விழுநத சித்திரத்தை இனி நாம் என்ன பூசி அழிக்கமுடியும்.

ஒருநாள் சம்பூரிலும் பிறிதொரு நாள் வாகரையிலும் தறபோது இடைத்தங்கல் முகாம் ஒன்றிலும் அவாகளது பள்ளிக்கூடம் முடிவுக்கு வந்திருககிறது. அதனைககூட, அரசபயங்கரவாதம் பதம் பாாத்த-பார்க்கிற கதையை ஒருவித இயலாமையுடனும் பரிதவிப்புடனும் நம் கண்முன் வைக்கிறது 'It is a Kfir'.

உலகில் எல்லோருக்கும் பள்ளிக்கூடம் என்பது என்றுமே இனிமையான மீள்நினைவுக் குரியதாக இருக்க இந்த சிறார்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? பள்ளிக்கூடம் என்பது அவர்களைப் பொறுத்தவரை பொருளற்ற ஒரு சூனியமாகவும் குறிப்பான அடையாளம் எதுவுமற்ற ஒரு புரிதலாகவும் ஆகியிருக்கிறது. இந்த அடையாளமின்மையே அவர்களது உளவுறன பாதிப்பின் தொடக்கப்புள்ளியாக இருக்கிறது.

(அடுத்த வாரம் தொ[illegible]ம்)

# சமஷ்டி...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''நீர் எப்படி உம்மட ஆசிரிய தலையங்கங்களுக்குக் கருத்துக்களைத் தேடி எடுக்கின்றீர் என்று நான் யோசிப்பதுண்டு. இப்போதுதான் விடயம் விளங்குகிறது. ஒருநாள் விரிவுரையிலேயே ஒன்பது ஆசிரிய தலையங்கங்களுக்குக் கருக்கள் கிடைத்துவிட்டன போல இருக்கின்றது. அப்படியென்றால் அடிக்கடி பாலா அண்ணனுடன் தொலை பேசித் தொடுசல் வைத்திருக்கிற உமக்கு தினசரி ஆசிரிய தலையங்கத்துக்குக் கருத்துக்குக் கரு தேடுவது ஒரு சின்ன விடயம்'' - என்று என் தொழில் இரகசியத்திலேயே - அடிமடியிலேயே - கைவைத்தார் நண்பர்.

சரி. இந்த விடயத்தை ஏன் நான் இங்கு குறிப்பிடுகிறேன் என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம். இந்தக் கட்டுரைத் தொடரை வாசித்துக் கொண்டிருக்கும் எனது அந்தப் பத்திரிகைத்துறை நண்பருக்கும் கூட இந்தச் சந்தர்ப்பத்தில் இதை நான் நினைவூட்டுவது ஏன் என்ற கேள்வி மனதில் பிறக்கலாம்.

ஜனாதிபதி சந்திரிகா எனக்கு அளித்த பேட்டியை வாசித்ததும் பாலா அண்ணன் அப்படி ஒரு 'லெக்சரைத்' தான் எனக்கு அளித்தார்.

அந்த விரிவுரையில் 'உள்ளக சுயநிர்ணய உரிமை' பற்றியும், சர்வதேசமட்டத்தில் கடந்த மூன்று தசாப்த காலத்தில் அது பெற்றிருக்கும் முக்கியத்துவம் குறித்தும் பாலா அண்ணன் விரிவாக விளங்கப்படுத்தினார். 'சமஷ்டி' பற் றிய இக்கட்டுரைத் தொடரில் அந்த விரிவுரைக் கருத்துகள் மிக முக்கியமானவை. அவற்றை இத்தொடரின் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

அந்தக் கருத்துகளைக் கூறி முடித்த பாலா அண்ணன், ''உள்ளக சுயநிர்ணய உரிமை என்று ஒன்று இல்லை என்று கூறிய சந்திரிகா அம்மையாருக்கு ஒரு தடவை அதைப் பற்றிப் படிப்பிக்க வேண்டும். வகுப்பு எடுத்து, விரிவுரை அளித்து, அவருக்கு விளங்கப்படுத்த நான் தயார். அவா தயாரா என்று கேட்டுச் சொல்லு!'' - என்று லண்டனில் இருந்தபடியே கொழும்பில் இருந்த எனக்கு அன்புக்கட்டளை போட்டார்.

''உவருக்கு (சந்திரிகாவுக்கு) நாங்கள் பதில்கொடுத்து, பகிரங்க அறிக்கை விடுவது அர்த்தமற்றது. அரச அறிவியலில் அவருக்கு என்ன அறிவு இருக்கிறது என்பதை நான் நேரடியாகவே அவருக்கு விளக்கி எடுத்துக் காட்டுவேன். ஐ.நா.பிரகடனங்கள், பட்டயங்கள், சர்வதேச நீதிச்சட்டங்கள், நியமங்கள் ஆகியவை புரியாமல் - படிக்காமல் - சந்திரிகா அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசியிருக்கிறார். அவற்றின் அடிப்படையில் இன்று சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக்கும் 'உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை' நான் விளக்கினால் தாம் எவ்வளவு முட்டாள்தனமாகக் கருத்துக்கூறியிருக்கின்றார் என்பதை அவரே புரிந்து கொள்வார். இப்படி அறிவிலித்தனமாக அவர் பேசுவதால்தான் அவரது படிப்பறிவு, பட்டம் ஆகியவை குறித்து இப்போது சந்தேகம் கிளப்பப்பட்டு வருகிறது போலும்'' - என்றார் பாலா அண்ணன்.

பாலா அண்ணனோடு இவ்விடயம் குறித்து நான் உரையாடி சில வாரங்களில் ஜனாதிபதி குமாரதுங்கவை நான் நேரில் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.

பாலா அண்ணன் என்னிடம் குறிப்பிட்ட மேற்படி விடயங்களை ஜனாதிபதி சந்திரிகா விடம் என்னால் கூறமுடிந்ததா? அதற்கு அவர் (சந்திரிகா) என்ன பதில் கூறினார்?

அவற்றை அடுத்தவாரம் பார்ப்போமா?


(தொடரும்)

## தவறு

கடந்தவாரம் வெளிவந்த 'பார்வைக[illegible] கோணங்கள்' சிறுகதையை எழுதியவர் பெ[illegible] தவறுதலாக விடுபட்டுவிட்டது. அத[illegible] எழுதியவர் ச.முருகானந்தம் என்பதை வ[illegible]கர்களுக்கு அறியத் தருகிறோம்.

ஆ-ர்






# ஆஸ்துமா பரம்பரை நோயா?

கேள்வி: எனது மாமா ஒருத்தர் சமீபத்தில்- இந்தியா சென்று வந்திருந்தார். முன்னர் அவருக்கு பல நோய்கள் இருந்தன. அடிக்கடி வைத்தியரிடம் சென்று கொண்டே இருப்பார். ஆனால், கடந்த மோதங்களாக எதுவித நோயும் தனக்கு இல்லை என்று சொல்கின்றார். இதற்கு தான் செய்யும், எண்ணெய் கொப்பளிப்பு மருத்துவம்தான் காரணம் என்கின்றார். காலையில் எழுந்ததும் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெயை வாயில் வைத்து கொப்பளிக்கின்றார். இதுதான் அந்த வைத்தியம். இப்படி செய்வதால் நோய்கள் வராது இருக்கும், நோய்களும் மெல்ல மெல்ல போய்விடும் என்று கூறுகின்றார். இது என்ன வைத்தியம்? இதனால் உ[illegible]யிலேயே பயன் அடையலாமா? விவரம் தருக?

பதில்: இந்த எண்ணெய் கொப்பளிப்பு மருத்துவம் என்பது Alternative medicine என்கின்ற துறையைச் சார்ந்த சிகிச்சை முறைகளில் ஒன்று. விஞ்ஞானத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக- விஞ்ஞான விளக்கம் உள்ளதாக- அறியப்படுகின்ற ஆங்கிலேய- மேலைத்தேய மருத்துவ முறை- மற்றைய வைத்திய முறைகளை சரியான வைத்திய முறையாக ஏற்றுக்கொள்வதில்லை. மற்றைய வைத்திய முறைகளான- ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம், அக்குபஞ்சர் சீனமருத்துவம் போன்றவற்றை ஆரம்ப காலத்தில், எதுவித அடிப்படையோ- விஞ்ஞான விளக்கமோ இல்லாதது என்று கண்டித்தும், அலட்சியப்படுத்தியும், எதிர்த்தும் வந்த மேலைத்தேய மருத்துவம், இந்த மருத்துவமுறைகள் மேலைத்தேய மருத்துவத்தால் குணப்படுத்தமுடியாமல் கைவிட்ட நோயாளர்களை குணப்படுத்தியது கண்டு 'மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல்' ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டது. எனவே, 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத' விதத்தில் இந்த மருத்துவ முறைகளில் ஏதோ ஒரு உண்மை இருக்கின்றது என்று ஏற்றுக்கொண்டு- Alternate medical therpy என்று ஒரு பிரிவில் மாற்று மருந்து துறையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த மருத்துவத் துறையில் நிறைய மேலைத்தேய மக்கள் இன்று நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இப்படியான மருத்துவத் துறைகளில் சில சிகிச்சைமுறைகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் உங்கள் எண்ணெய் மருத்துவம். இந்த சிகிச்சைமுறையில் காலையில் எழுந்தவுடன் பல் விளக்கி- வெறும் வயிற்றில் தூய்மையான நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பவற்றில் ஒன்றை ஏறக்குறைய 10 மில்லிலீட்டர்- இரண்டு தேக் கரண்டி வாயினுள் ஊற்றி- விழுங் காமல் எண்ணெய் வாய் முழுவதும் செல்லும் விதமாக வாய்க்குள் கொப்பளித்த வண்ணம் 20 நிமிடங்கள் வைத்திருந்து வெளியே துப்பவேண்டும்.

முதன் முதலில் வழவழப்பாக இருக்கும் எண்ணெய், உமிழும் போது மெல்லிய திரவமாகி - கிட்டதட்ட பால் போல் ஆகிவிடும். அதன் பின்னர் வாயை கொப்பளித்து ஒரு கிளாஸ் நீர் அருந்த வேண்டும்.இந்த சிகிச்சை எப்படி வேலை செய்கின்றது என்று இதனை பின்பற்றுவோர் கூறும் செய்தியைப் பார்ப்போம்.

"வாய்க்குள் எண்ணெய் இருக்கும்போது, அதனை எதிர்க்க- வாயினுள் உள்ள பக்டீரியாக்கள், நுண்ணுயிர்கள், தொற்றுகள் திரள ஆரம்பிக்கும், கழிவுப் பொருட்களும் வெளியேவரும். சிறிது நேரத்தின் பின்னர் வாயை கொப்புளித்த பின்னர், கிருமிகள் வெளியேற்றப்படுவதால்- metabolism என்கின்ற உடல் சக்தி புத்துணர்வு பெறுகின்றது. உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி கூடுகின்றது. இரத்தோட்டம் சீராகின்றது" இப்படி எண்ணெய் கொப்புளிப்பு ஆதரவாளர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், இதனை தனித்தனி ஒவ்வொருவரும் பெற்ற பலன்களை கொண்டுதான் கணிப்பீடு நடைப்பெறுகின்றதே ஒழிய, விஞ்ஞான பூர்வமாக இந்த கருத்துகள் நிரூபிக்கப்படவில்லை என்ற மாற்றுக் கருத்தாளர்களின் விமர்சனமும் இருக்கின்றது . என்னைப் பொறுத்தவரையில் இந்த சிகிச்சையால் எதுவித அபாயமோ, ஆபத்தோ இல்லை.

முதலில் இந்த வைத்தியப் பெருமை பற்றி- பல ஆண்டுகளுக்கு முன்னர் உக்ரெய்னில் நடந்த மருத்துவ மாநாட்டில் சோவியத் ஒன்றியத்தை சேர்ந்த மருத்துவர் மத்கராஷ் ஆதாரங்களோடு விளக்கினார். தற்பொழுது இந்தியாவில் ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் பிரபலமாக உள்ள இந்த சிகிச்சைமுறை சமீபகாலமாக தமிழ் நாட்டிலும் பிரபலமாகி வருவதாக அறிகின்றேன்.

கேள்வி: எனது இளைய மகன் வயது4. அவருக்கு ஆஸ்துமா நோயுண்டு. மழைக்காலத்தில் இந்த நோய் கட்டாயம் வரும். எனது தங்கையின் மகள் 8 வயது. அவருக்கும் ஆஸ்துமா வியாதி உள்ளது. இவருக்கும் மழைக்காலத்தில் பிரச்சினை இல்லை. ஆனால், குளிரான ஐஸ்கிரீம், குளிர் பானம் அருந்தினால் நிச்சயம் வரும். ஆஸ்துமா வருவதற்கு வேறு காரணங்கள் உண்டா? ஆஸ்துமா ஒரு பரம்பரை வியாதியா? விபரம் தருக:

பதில்: ஆஸ்துமா பரம்பரை வியாதி என்று இதுவரை மருத்துவ ரீதியில் நிறுவப் படவில்லை. என்றாலும், பரம்பரை சந்ததிகளில் அடிக்கடி காணப்படுவது அறிப்பட்டுள்ளது. இதற்கு ஆஸ்துமா ஏற்படக்கூடிய உடல்நிலை பரம்பரை பரம்பரையாக வந்திருக்கலாம். அப்படியான வர்களின் சக்தி குறையும் வேளைகளில்- ஆஸ்துமா ஏற்படக்கூடிய ஒவ்வாநிலை தரும் - பொருட்கள்,தூசி, உணவு, சுவாத்தியம் என்பவற்றால் ஆஸ்துமா தூண்டி விடப்படலாம். இன்று கொழும்பு போன்ற சனசந்தடி மிக்க சூழல் நச்சுத் தன்மையாகும் நிலை அதிகமாகவுள்ள இடங்களில் பரம்பரை ஆஸ்துமா நோயாளிகளை விட- குழந்தை பருவத்திலேயே ஆஸ்துமா நோயால் அவதிப்படுபவர்கள் அதிகரித்துக் கொண்டு போவது அறியப்பட்டுள்ளது. மாசடைந்த சூழலில் உள்ள பெற்றோலிய கழிவுப்பொருட்கள், தூசி துணிக்கைகள் தான் இதற்கு காரணம் என்றும் மருத்துவர்கள் நம்புகின்றார்கள். இதுதவிர கதலி, புளி வாழைப்பழங்கள், செவ்விளநீர், தக்காளி, கத்தரிக்காய், அன்னாசி, குளிர்பானங்கள் என்பவைகளால் ஆஸ்துமா ஏற்படுவதாக நம்மவர்கள் நம்புகின்றார்கள்.

இலவச மருத்துவ
ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை,கொழும்பு-14.

இதற்கு விஞ்ஞானக் சான்றுகள் இல்லாவிடினும்- நம்புவதற்கு இடமிருக்கின்றது. இதே போல் சில தானியங்கள் - உதாரணமாக கச்சான் அல்லது வேர்க்கடலை, பருப்புகள், சில மீன் வகைகள், இறால், முட்டை கூட ஆஸ்துமாவை ஏற்படுத்துவதாக நம்ப இடமுண்டு.

சில உணவுப் பாதார்த்தங்களில் நிறத்திற்காக சேர்க்கும் tartranzine மஞ்சள் வர்ணம், உணவு பழுதாகாமல் இருக்க சேர்க்கப்படும் இரசாயனம், ருசிக்கு சேர்க்கப்படும் metavisulphite அஜினிமோட்டோ என்ற MSG என்பவை சிறு குழந்தைகளுக்கு இளைப்பு உண்டாக்கி ஆஸ்துமாவை வரவழைப்பதாக அறியப்படுகின்றது. இதுபோல் சுவாத்தியத்தில் ஏற்படும் மாற்றங்கள் சுவாச குழாய்களை சுருங்கச் செய்து சிலருக்கு ஆஸ்துமாவை தருகின்றது.

பால் ஆஸ்துமாவை தராது. பாலில் உள்ள ஒவ்வாமை- தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளையும், வயிற்றோட்டம் சம்பந்தமான பிரச்சினைகளையுமே தருவதாக வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

கேள்வி: பெண் வயது 28. திருமணமாகி ஒரு வருடமாகின்றது. ஓரிரு வருடங்களுக்கு குழந்தை பெறுவதை தவிர்க்க எண்ணி- கருத்தடை மாத்திரைகளை உபயோகித்து வருகின்றேன்- சில வேளைகளில் ஓரிரு தினங்கள் மாத்திரை எடுக்க மறந்துவிடுவேன். இதனால், கர்ப்பமாகி விடுவேனோ என்கின்ற பயத்தில் அடுத்த மாதவிலக்கு வரும்வரை- உடலுறவு கொள்ளாமல் இருப்போம். இப்படி மாத்திரைகளை தவற விட்டால் - கர்ப்பம் தரிக்காமல் இருக்க கையாள வேண்டிய முறைகள் என்ன?

பதில்:கருத்தடை மாத்திரைகள், 28 மாத்திரைகள் ஒருங்கே அடக்கியதாக ஒரு அட்டையில் வருகின்றன. கடைசியாக- சிகப்பு நிறத்திலோ அல்லது வெள்ளை தவிர்ந்த வேறு நிறத்திலோ இருக்கும் மாத்திரைகள்- எதுவித ஹோர்மோன்களையும் கொண்டிருப்பதில்லை. கிரமமாக, விடாமல் மாத்திரைகளைஉபயோகிப்பதற்கு வசதியாக இவை சாதாரண placebo- எனப்படும் சர்க்கரை மா- என்பவற்றால் செய்யப்பட்ட மாத்திரைகளாகவோ அல்லது இரும்புச்சத்து மாத்திரைகளாகவோ தான் உள்ளடக்கபட்டுள்ளன. இந்த ஏழுமாத்திரைகளை எடுக்கும் காலப்பகுதியில்- ஏதாவது ஒரு மாத்திரையை எடுக்க மறந்தீர்களானால் மறக்கப்பட்ட மாத்திரையை தூர வீசி எறிந்து விட்டு மிகுதியாக உள்ள மாத்திரைகளை கிரமமாக எடுத்து வந்தால் போதும். அநேகமாக தற்பொழுது வழக்கத்திலுள்ள கருத்தடை மாத்திரைகள் combined Pills எனப்படும் இரண்டு ஹோர்மோன்களின் கூட்டு மாத்திரைகளாகும். முதலிரு வாரங்களுக்கு ஒரு வித ஹோர்மோன்களையும், மூன்றாவது வாரத்தில் பிறிதொரு ஹோர்மோனையும் இந்த மாத்திரைகள் உள்ளடக்கியுள்ளன. ஒரு மாத்திரையை எடுக்க தவற விட்டீர்களானால் தவறு நினைப்புக்கு வந்தவுடன் - அதனை எடுத்து அடுத்த நாள் வழக்கம் போல் மற்றைய மாத்திரைகளை கிரமமாக தொடர்ந்து எடுத்து வரவும். தொடர்ந்து இரண்டு நாட்கள் மாத்திரைகளை மறந்து விட்டால் - இது முதல் 14 நாட்கள் மாத்திரை உபயோகத்தின் போது நடந்தால்- மறந்த மாத்திரையை உடனே- எடுத்து- தொடர்ந்து கிரமமாக மற்றைய மாத்திரைகளை உபயோகிக்கவும். உடலுறவின் போது- அடுத்த ஏழு நாட்களும்- ஆணுறை உபயோகிக்கவும். மூன்றாவது வாரத்துக்குரிய வரிசையில் இரண்டு நாள் மாத்திரைகளை தவறவிட்டால்- ஒருமாத்திரையை உடனே எடுத்து பின்னர் வழமைபோல் மற்றைய மாத்திரைகளை எடுக்கவும். கடைசி வரிசையில் உள்ள- நிற மாத்திரைகளை எடுக்காமல் - புதிய கருத்தடை அட்டையை உபயோகிக்கவும். உடலுறவின் போது அடுத்த ஏழு நாட்களும் ஆணுறையை உபயோகிக்கவும்.

அதுசரி- உங்களுக்கு இப்பொழுது 28 வயதாகின்றது. ஏன் இன்றும் குழந்தை பெறுவதை தள்ளிப் போடுகின்றீர்கள் 30வயதிற்குப் பின்னர் கருத்தரிக்கும் வாய்ப்புகள் குறைவு மட்டுமல்லாமல் கருத்தரிக்கும் குழந்தைகளுக்கு பிறவிக் குறைபாடு கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# 'மனோலயம்' பாதிவழி சென்ற படைப்பாளி மனோரஞ்சிதன் பற்றிய நினைவு மலர்



**ஓர் இளம் ஓவியன் மனோரஞ்சிதன் தமிழின்பம் பெப்ரவரி1962**

ஓவியமணி எங்கள் மனோ என்று பெருமையோடு தம்முடைய சகமாணவர்களால் அழைக்கப்படுபவர் மனோரஞ்சிதன். சரியான பாதையில் வழி நடத்தப்பட்டால் ஈழத்தின் தலைசிறந்த ஓவியக் கலைஞர்களில் ஒருவராக மனோ விளங்குவார் என்பது இவருடைய ஆரம்ப முயற்சிகளிருந்தே தெரிகிறது.

**'மனோலயம்'** நூலின் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 3.11.2007 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது. விடாது பெய்துகொண்டிருந்த அடை மழையின் நடுவிலும் மண்டபம் நிறைய ஊடகவியலாளர்களும், இலக்கிய ஆர்வலர்களும் நிறைந்திருந்தனர்.

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலர் எஸ். தில்லை நடராஜா அவர்களின் தலைமையில் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதம அதிதியாக அழைக்கப் பட்டிருந்த மூதறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி உடல்நலம் குறைவின் காரணமாக சமூகமளிக்கவில்லை. சிறப்பு அதிதிகளாக இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர், மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் பொன் வல்லிபுரம் ஜே.பி. ஆகியோர் கலந்து கொண் டனர். தொலைக்காட்சி ஊடகத்தைச் சேர்ந்த அருணா செல்லத் துரை, கம்பன் கழக கம்ப வாரிதி ஜெயராஜ், எழுத்தாளர், உளவியலாளர் கோகிலா மகேந் திரன் ஆகியோர் முறையே 'நெஞ்சம் மறப்பதில்லை', 'மனோலய மகிமை', 'மனோ லயம் பற்றி மனோரீதியாக' ஆகிய தலைப்புகளில் உரை நிகழ்த்தினர்.




மனோலயம் வீ.ஏ. மனோரஞ்சிதன் பற்றிய ஒரு நினைவு மலராகும். 1970 ஜூன் முதலாம் திகதி இறைவனடி சேர்ந்த மனோரஞ்சிதன் அப்போது இருபத்தைந்து வயது கூட நிறைவடை யாத இளம் பருவத்தில் இருந்தார். அவரை ஓர் இளம் ஓவியனாக தமி ழின்பம் 62- இல் அறிமுகம் செய்வதை இம்மலரில் அமரர் மனோரஞ்சிதன் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி 'அழியா இளமை' எனும் தலைப்பில் நூலில் வழங்கியுள்ள குறிப்பு நெஞ்சில் ஈரக்கசிவை ஏற்படுத்துகின்றது.

''காலம் தாழ்த்தி வந்தாலும் கலைத் துறை முக்கியத்துவம் கொண்ட ஒரு நூலாக விளங்கப்போகும் இந்நினைவு மலரை புரட்டிப்பார்க்கும் பொழுது ஈழத்து தமிழ் கலையுலகம் எத்துணை ஆற்றல் மிக்க இளங்கலைஞன் ஒரு வனை அவனது கலை பூரணத்துவம் அறியப்படுவதன் முன்னரே இழந் துள்ளது என்பது வெள்ளிடைமலை யாகத் தெரிகின்றது. உண்மையில் இந்நூலை பார்க்கும் போது மனோரஞ்சிதன் பற்றி இதற்கு முன்னர் எப்படி அறியத்தவறினேன் என்ற சோகம் கலந்த ஆதங்கமே மேலோங்கி நிற்கின்றது.

பேராசியரின் மனோராஞ்சிதன் பற்றிய கணிப்பீடு கனதியானது என்பதை இவ்வரிகள் எடுத்தியம்புகின்றன.

''உன்னை தெரிந்தவர்களுக்கும், தெரியாதவர்களுக்கும் உன் நினைவாக மனோலயம்'' என்கிறார் அமரரின் அண்ணரும் நூலின் தொகுப்பாசிரியருமான வீ.ஏ. திரு ஞான சுந்தரம். பாதியிலே போய்விட்ட ஓர் இளம் பிரம்மனின் ஆக்கங்களை அருமையாக பதிவு செய்துள்ளார். மனதிற்கு இனிய மனோரஞ்சிதன், மனோரம்மியமான மனோவின் நினைவுகள். மனோ என் மாணவன்- மறைந்த மனோவும் ரஞ்சிதனாக- காலத்தால் அழியாத (ஓவியம்) கலைஞனானான்- எழுதப்பட்ட வரலாறு. Mano a young Compaigner - Mano a friend of all- மனோரஞ்சித மலராக மணம் வீச வேண்டியவர், முற்றுப் பெறாத முடிவினை கொண்டையோ- மானிடத்தின் பாடு வெளிப்பாடு- உன் நட்பை மறவோமே- எனும் ஆக்கங்கள் முறையே ஊடகவியலாளர் எஸ்.ஜே. ஜெயக்குமார், கலாபூசணம் அம்பிகா தாமோதரம், பன்மொழிப் புலவர் த.கனகரத்தினம், கவிஞர் சக்தி பாலையா, அக்காச்சி ராஜேஸ்வரி சண்முகம், எம்.ஜே. எம். அஸ்ரப், எம். எஸ்.ஜே. டீன், எழுத்தாளர் அந்தனி ஜீவா, ஜின்னாஹ் ஸரிபுத்தீன், கம்பவாரிதி ஜெயராஜ், அமரர் சி. அழகுப் பிள்ளை ஆகியோர் வழங்கியுள்ளமை உள்ளடக்கமாகியுள்ளன. மனோரஞ்சிதனின் ஆக்கங்களும் 'பாதிவழி சென்ற படைப்பாளி' எனும் தலைப்பில் நூலில் அடங்கியுள்ளன.

பத்திரிகை, சஞ்சிகைகளில் பிரசுரமான கார்ட்டூன்கள், சித்திரங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

'காதலிக்கத் தெரிந்தவன்' எனும் அமரரின் சிறுகதையொன்றும் இணைப்புக் கொண்டுள்ளது.

'காற்றை கருவி கொண்டு கலை படைத்த வித்த கர்கள்' எனும் தலைப் பில் வானொலிக் கலைஞர்கள் 48 பேர் பற்றிய குறிப்புகளும், நிழல் படங்களும், மனோரஞ்சீதனின் இந்த நினைவுமல ரின் இறுதிப் பகுதியில் இடம்பிடித்து அரி யதோர் ஆவணப் பதிவு உருவாகியுள்ளது.

'மனோலய மகிமை' பற்றி உரை நிகழ்த்திய.கம்பவாரிதி ஜெயராஜ் தமதுரையில், ''யாழ்பாணச்சமூகம் உறவுப்பாசம் மிக்கது. கட்டுக்கோப்பான குடும்ப உறவுகளை பேணுவது, முதியவர்களை கனம் பண்ணுவது என்ற உண்மையை திருஞானசுந்தரம் அவர்களின் செயற்பாட்டில் காணலாம். 37-ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுலகம் நீத்துவிட்ட அருமை உறவின் நினைவுகளை இன்றும் உணர்வில் பதித்து அதனை ஆவணப்படுத்தியுள் ளார். இத்தகைய அரிய பண்பு யாழ்ப் பாண சமூகத்திடம் யதார்த்தமாக ஊறி யுள்ள ஒன்று. அத்தகைய அரிய பண்பு இன்று அழிந்து வரும் ஒன்றாகி விட்டது. தமது வயது முதிர்ந்த பெற்றோரையே பந்தாடும் பல குடும்பங்களை காணலாம். அறிவும் உணர்வும் ஒரே சம அளவில் வளர்ச்சி பெறாமையுமே இதற்கு அடிப்படைக் காரணமாகும். அறிவு வளர வளர சுயநலம் பெருகுவதாகவே தோன்றுகிறது. ஆனால் அறிவு சார்ந்த உயர் தொழில்கள் பலவற் றில் பணியாற் றிய திருஞான சுந்தரம் அவர்கள் இன்னும் யாழ்ப்பாண மண்ணின் கட்டுக் கோப்பான குடும்ப பாச பண்புக ளோடு திகழ்கிறார். சொந்த சகோதரங்கள் குறித்த உணர்வுகளை நினைவுகளை சிவ லயம், மனோலயம் என தொடர்ச்சியாக ஆவ ணப்படுத்தும் பண்பினை கொண் டுள்ளார். ஆயிரம் குத்துவெட்டு களோடு பணிபுரிந் தாலும் வானொலிக் கலைஞர் களையெல்லாம் குடும்ப பந்த உணர் வோடு இங்கு வந்து சமூகமளிக்கச் செய் துள்ள அவர் குண இயல்பு மேலானது.




இத்தகைய ஒருவரின் அடுத்த வெளியீடு 'ஞானலயம்' என்ற மகுடமுடன் வரவேண்டும்'' என்றார்.

''எனக்கு அது பொருத்தமானதாகப் படவில்லை. லயம் என்றால் ஒடுக்கம் என்ற பொருள்படும். அது திருஞான பிரகாசமாக இருக்க வேண்டும். அவர் ஒடுங்கிப் போகாமல் மேலும் பிரகாசமடைய வேண்டும் என்பதே எனது வேணவா'' என்பதாக கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் மனோலயம் பற்றி மனோரீதியாக விவரிக்க முனைந்த உளவியலாளர் கோகிலா மகேந்திரன் மனித ஆழ்மன உணர்வுகளின் தன்மையை விவரிக்கையில், தொகுப் பாசிரியர் திருஞான சுந்தரரின் உணர்வு களை வெளிக்கொணர முனைந்தார். அவர் அவ்வேரினை இனங்காட்டி கூறு கையில், ''சாவு சாஸ்வதமான போதும் இழப்புகள் தாளமுடியாதன என்றபோதும் அதன் தன்மைகள் பல நிலைகளைக் கொண்டவை. மனோரஞ்சிதன் பிறந்த போது திருஞான சுந்தரம் அவர்களுக்கு ஒன்பது வயது. ஆனால், அந்நேரத்தில் ரேடியோ சிலோனில் 'ஸ்வப்ன வாழ்வில் மகிழ்ந்தேன்' எனும் பாடல் ஒலித்தது என்பது அவருக்கு இன்றும் நினைவில் இருக்கின்றது. இவ்வாறான நினைவு பதிவுக்கு அடிப்படைக் காரணம் ஒன்று அந்த நிகழ்வின் ஆழமான பதிவு, இரண்டாவது அப்பாடலின் மீது அவர் கொண்ட அளவற்ற மையல். இங்கே அந்த நிகழ்வு 37 - வருடங்களின் பின்னரும் நினைவு மீட்டலுக்குள்ளாகி பிரிவென்னும் வேதனையான இழப்பிற்கு அதனை ஆவணப்படுத்துவதன் மூலம் பரிகாரம் தேடுகிறது. நமது சமய, சம்பிரதாய சடங்குகளெல்லாம் அந்தியேட்டி போன்ற கிரிகைகள் மூலம் இவ்வாறான பரிகாரங்களை தேடுவன வாகும்'' என ஓர் உளப்பகுப்பாய்வினை செய்தார். அருணா செல்லத்துரையின் மனோரஞ்சிதனுடனான அறிமுகத் தையும், அவருடைய தன்மை களையும் நினைவுகூர்வதாகவும், திருஞான சுந்தரம் அவர்களுடன் பணிபுரிந்த நாட்களையும், அன்றைய தன்மைகளை நினைவு கூர்வதாகவும் அமைந்திருந்தது.

தில்லை நடராஜா அவர்கள் மனோரஞ்சிதனினதும், திருஞான சுந்தரம் அவர்களினதும் பல சிறப்புக்களைக் கூறி அன்றைய காலகட்டத்தின் சில நிகழ்வு களை நினைவு கூர்ந்து சபையோரை உணர்வு பூர்வ மான குதூக லத்துக்குள் ளாக்கினார்.

நன்றி செலுத்த நான்கு நிமிடங்களை எடுத்துக் கொண்ட திருஞானசுந்தரம் அவர்கள் விழா நிகழ்வினை இனிதே நிறைவு செய்தார்.

நிகழ்வு முழுவதையும் வானொலிக் கலைஞர் உவைசுர் ரகுமான் அருமையாக தொகுத்து வழங்கினார்.

நூலின் அமைப்பும், முகப்பட்டையும் மனதைத் தொடுகின்றன. இளைஞர் பிரதீபனின் உணர்வு மிக்க கைத்திறன் வியப்புறச் செய்கிறது. சபையோர் நடுவே அவர் பொன்னாடை போர்த்தி கௌரவப் படுத்தப்பட்டது பொருத்தமானதே.

**கே.வி.**




## புலம்பல்கள் பல ரகம்

''மனோலயம் நினைவு மலர் வெளியீட்டு விழாவிலே வாய்விட்டுச் சிரிக்க நல்ல நகைச்சுவை கதைகள் கிடைத்தன. 'என்ன, நினைவுமலர் விழாவில் வாய்விட்டுச் சிரிக்க நகைச்சுவை கதைகளா?' அப்புடின்னு கேட்கத் தோணல்ல. சொற்பொழிவுன்னா நாலும் இருக்கனும், நகைச்சுவை கட்டாயம் இருக்கனும். இந்தமலர் வெளியீட்டு விழாவிலே பேசுனவங்க சபாஷ் போடுற மாதுரி நன்னா பேசுனாங்க''

''அடிசக்கை''

''கல்வி அமைச்சுமேலதிகச் செயலர் தில்லை நடராஜா இருக்காங்களே! அவுக ஒரு புலம்பல் கதை சொன்னாங்க''

''சொல்லுதியலா!''

''ஒரு அந்தியேட்டி கிரியை நிகழ்வு. குடும்ப உறவினர் பெயரெல்லாம் வைச்சு ஆச்சி புலம்பல், ஆத்தா புலம்பல், பொஞ்சாதி புலம்பல்ன்னு கல்வெட்டு பதிவு செய்வாங்கலாமில்லலே. அது நடந்து கிட்டிருக்கு''

''ஒருத்தர் இதை எல்லாம் பார்த்துக்கிட்டு இருக்கார். கண்ணு கலங்குகிறது. கை பிசைஞ்சிக்கிட்டு இருக்கு. பதிவு செய்ரவருக்கு கையும் ஓடல்ல காலும் ஓடல்ல. அவரைப் பார்த்து நீங்க யாரு? உங்க பேரு என்ன? உங்களுக்கு என்ன வேணுமின்னு பதறிப் போ[illegible] கேட்கிறாரு.''

''ஐயா சாமி! இவுக நமக்கே கொஞ்சம் பணம் தரனும். எப்புடி கேட்கிறதுன்னு தெரியல்ல. அது தான் நம்ம பேரையும் பதிங்கன்னு சொல்லுதேன்.''

''அடப்பாவி!''

''ஆமா! இதை எப்படித்தான் பதியுறது?''

''கடன்காரர் புலம்பல்ன்னு பதிஞ்சிட்டாப் போரது.''

## ஆட்டிப் படைக்கும் பப்ளிசிட்டி மோகம்

''பப்ளிசிட்டி இருக்கே இதுவொரு பொல்லாத பிசாசு. சாதாரண மனுஷன் முதல் அரசியல்வாதி, எழுத்தாளன், ஆட்சியாளன் வரை எல்லோரையும் புடிச்சு, லோ லோன்னு ஆட்டி வைச்சிக்கிட்டிருக்கு. இதுலே இன்னொரு விசயம் என்னான்னா அது பல விதத்திலும் புத்துப் பாம்பு மாதுரி தலையை வெளியிலே நீட்டும். இவுகளுக்கு அவுக பப்ளிசிட்டிக்காக இந்த பாடுபடுரது மத்தவங்க கண்ணுக்கு கேளிக்கையாக படுரது வெளங்கவே வெளங்காதாம்''

''அடப்பாவமே!''

''இவ்வளவுக்கும் அவுக படுகிற பாடு ரொம்பவும் நையாண்டியாக இருக்கும். நம்ம தில்லை நடராஜ அவுக இதுக்குப் பொருத்தமாக அவுக கலந்துகின்ன விழாவிலே நடந்த ஒரு சமாசாரத்தை மனோலயம் நூல் வெளியீட்டு மேடையிலே சொன்னாங்க. இவுக மேடையிலே இருந்தப்போ ஒருத்தர் அடிக்கடி கிட்ட வந்து காதுல குசுகுசுத்தாராம்.''

''அப்புடி என்ன ரகசியம்?''

''பெருசா ஒன்னுமில்லே. காவற்காரன் கந்தசாமியை காணவில்லை. அறிவிப்பைக் கேட்டவுடன் கந்தசாமி மேடைக்கு வரவும்! இதுதான் அவரு சொன்னது.''

''ஐய்யய்யோ, பாவம் மனுஷனுக்கு என்ன ஆச்சுதோ?''

''இப்புடி நாலைஞ்சு முறை அந்த ஆளு வந்து ஸ்பீக்கர்லே அறிவிக்கச் சொல்லிட்டாரு.''

''ஆகா! இப்புடி அசட்டை பண்ணலாமோ?''

''கூடாதுதான் ரொம்பவும் பிசியாக இருந்ததால மறந்துட்டாரு. அப்புறம் பரிதாபம் தோணிடிச்சி. ஆமா! இந்த காவற்காரன் கந்தசாமி யாருன்னு, சொன்னவனைக் கேட்டாரு.''

'' அது நாம தாங்கன்னு அந்த ஆளு தலையை சொரிஞ்சின்னு நின்னான்.''

''ஏலே! ஏண்டா இப்புடி அறிவிக்கச் சொன்னே?''

''அதுவொன்னும் இல்லே சாமி. எல்லோரும் நான்தான் காவற்காரன் கந்தசாமின்னு தெரியட்டுமேங்கிற ஆசைதான்.''

''அடப்பாவி!''




எம்.லட்சுமி,
திருமுறிகண்டி.

*கேள்வி:* **சில ஆண்கள், பஞ்சவர்ணக் கிளி மாதிரி மனைவி வீட்டில் இருக்க வேறு பெண்களைத் தேடி அலைகின் றார்கள் ஏன் பித்தா?**



*பதில்:* ஆண்களென்ன கொக்கா... மூன்று குதிரைகளை ஓட்டும் வலு அவர்களிடம் இருக்கிறது.

கே.சாந்தன்,
தெஹிவளை.

*கேள்வி:* **பித்தங்கிள்! ஆடு சைவமா, அசைவமா?**

*பதில்:* அது சைவம்தான். அதை உண்ணும்போது அசைவம் ஆகிறது.

சுமையா செஸ்மி,
பேராதனை.

*கேள்வி:* **நகைச்சுவை நடிகர்கள் விவேக், வடிவேலு இருவரில் கலக்கிக்கொண்டிருப்பவர் யார்?**



*பதில்:* விவேக்: புத்திசாலித்தனமான வெகுளித்தனம்.

வடிவேலு: வெகுளித்தனமான புத்திசாலி. நான் இருவருக்கும் ரசிகன்.

எஸ்.கஜமுகன்,
கிளிநொச்சி.

*கேள்வி:* **பித்தா! எனது நண்பன் எதைக் கேட்டாலும் 'இல்லை இல்லை' என்கிறான் அப்படியானால், அவன் வாழ்வில் எதுவுமே இல்லையா?**

*பதில்:* இந்த இல்லை மட்டுமல்ல, இன்னும் பல இல்லைகள் இருக்கின்றன.

- ஆண்களில் மென்மை இல்லை.
- பெண்களில் அன்பு இல்லை.
- நிலாவில் காற்று இல்லை.


கொசுக்களுக்கு பல் இல்லை.

- சுவிட்சர்லாந்துக்கு இராணுவம் இல்லை.
- தண்ணீர் பாம்புக்கு விஷம் இல்லை.
- ஜோர்ஜ் புஷ்ஷுக்கு இதயம் இல்லை.
- இலங்கையில் நீதி இல்லை.

பி.சண்முகப்பிரியா,
புதுக்குடியிருப்பு.

*கேள்வி:* **பித்தூ! இறைவன் உங்களிடம் தோன்றினால் என்னவரம் வேண்டுவீர்?**

*பதில்:* இறைவா! அடுத்த பிறவியிலாவது நான் எலியாய்ப் பிறக்க வரம் தா அவள் விரல்களில் எப்போதும் மவுஸாக.



ஆர்.சிவா,
முல்லைத்தீவு.

*கேள்வி:* **எம்மைவிட்டுஒருபோதும் விலகாத உறவு எது பித்தா?**

*பதில்:* நாம் விலகினாலும், விலக்கினாலும் எம்மைவிட்டு விலகாத உறவு தாய் மட்டுமே!

எம்.எம்.ஷப்னாஸ்,
கல்முனை.

*கேள்வி:* **பித்தூ! கனவுகள் நிஜமானால், எப்படியிருக்கும் நினைத்துப் பார்க்க சந்தோஷமாக இல்லையா?**



*பதில்:* கனவுகள் நிஜமானால், சினிமா நடிகைகள் நிரந்தரமாகவே பிரசவ ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருக்கும்.

எல்.சாந்தீபன்,
கொழும்பு-14.

*கேள்வி:* **பித்தா! நான் இரண்டும் கெட்டானாய் வாழ்கிறேன். சிலநேரம் வாழ விரும்புகிறேன், சிலநேரம் வாழ்வையே வெறுக்கின்றேன். இதற்கு என்ன காரணம்?**

*பதில்:* இரண்டுக்கும் காரணம் ஒன்றுதான். ஆசை.

ஆசை நிறைவேறும்போது , வாழ்க்கையில் விருப்பம் கொள்வீர்கள். அது நிறைவேறாதபோது, வெறுப்புக்கொள்வீர்கள்.

பலநேரம், ஆசை நிறைவேறிய பின் கூட, திருப்தி வருவதில்லை. மாறாக, ஆசையின் வீரியம்தான் அதிகமாகிறது. அதன் மீதான வெறிதான் கிளம்புகிறது.

என்.துஷ்யந்தி,
மீசாலை.

*கேள்வி:* **ஒழுக்கச் சீர்கேடான செயல்களை செய்கின்றவர்கள் சமயச்சொற்பொழிவு செய்கிறார்களே பித்தா?**

*பதில்:* அழுக்காக இருக்கும் விளக்குமாறுதானே வீட்டைக்கூட்டுகிறது.

ரஞ்சனி,
சிலாபம்.

*கேள்வி:* **மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். அப்படியென்றால் கணவன் அமைவதெல்லாம்?**

*பதில்:* வரதட்சணை கொடுத்தவரம்.

வை.சாவித்திரி,
வெள்ளவத்தை.

*கேள்வி:* **மூதலாவது கண்மாற்று சத்திர சிகிச்சை எப்போது நடந்தது பித்தா?**

*பதில்:* பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனாரால்.

எம்.ஏ.அத்தாஸ்,
பொத்துவில்.

*கேள்வி:* **வதந்திகள் எப்படித் தீயாக பரவுகின்றன பித்தா?**

*பதில்:* வதந்'தீ'யாக.

ஜெயக்குமார்,
தெமட்டகொட.

*கேள்வி:* **அன்புள்ள பித்தா! என்ன இது...என்ன இது...எந்தன் மனம் என்னை விட்டு தூரம் நின்று பார்க்கிறதே?**



*பதில்:* பார்க்கும், பார்க்கும். யாருக்கோ 'அல்வா' கொடுக்கிறது எண்டு தீர்மானிச்சிட்டீங்க போல...

ஜோன்சன்,
தெல்தெனியா.

*கேள்வி:* **'மொபைல் போன்களை அளவுக்கு அதிகம் பயன்படுத்துபவர்களின் விந்தணுக்களின் எண்ணிக்கை குறைகிறது' என்று ஓர்ஆய்வில் தெரிய வந்துள்ளதாமே உண்மையா பித்தா?**

*பதில்:* எவ்வளவு குறைகிறதாம்? பத்தாயிரம்? ஐம்பதாயிரம்? ஐந்து லட்சம்?ஏன் கேட்கிறேன் என்றால், ஒவ்வொருநாளும் மனிதனுக்குள் குறைந்தபட்சம் ஐம்பது கோடி விந்தணுக்கள் உற்பத்தியாகின்றன. ஜீவ நீரூற்று.

பிற்காலத்தில் மொபைல் போன்கள் எல்லாம் வந்து இப்படிப் பிரச்சினை உண்டாக்கும் என்று தெரிந்துதான், இறைவன் அந்தளவுக்கு முற்பாதுகாப்பாக 'தீர்க்கதரிசி'யாகச் செயல்பட்டாரோ என்னவோ?

> பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவைகளின் தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான். அனுப்ப வேண்டிய முகவரி:
>
> 'பித்தன் பதில்கள்'
> சுடர் ஒளி (வாரஇதழ்)
> இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
> கொழும்பு- 14.

## புதியவன்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''உடனே சொல்லிடுங்க சங்கர் ஸேர். நான் ரூட்டினா வெரிபை பண்ணி இருக்கணும். அந்தாள் செய்த அசாத்தியமான வேலையையும் அவர் திறமையையும் பார்த்தா அவர் சேர்டிபிகேட்டை உடனே சோதிச்சுப் பார்க்கணும் என்று எவனுக்கும் தோணியிருக்காது. இருந்தும் என் பேரில தப்புதான். எம்.டி.கிட்ட சொல்லி என் வேலை பறிபோய் விடாமல்...''

''முயற்சி பண்றேன் சுந்தரேசன்''

எம்.டி. என்னைப் பார்த்து ''வாய்யா சங்கர். ஏதாவது சந்தேகம் க்ளாரிபிகேஷன்னா நாராயணைக் கேளு. என்னைத் தொந்தரவு செய்யாதீங்க!''

''இல்லை ஸேர் வேறு விஷயம்''.

''நீங்க ஆரம்பிக்கிறதுக்கு முன்னால ஒண்ணு உங்ககிட்ட சொல்லணும். டி.ஜி.எம். போஸ்ட் ஒண்ணு அடுத்தமாதம் காலியாகிறது. அதுக்கு நாராயணைப் போடுறதில் உங்களுக்கு ஏதும் ஒப்ஜெக்ஷன் இருக்கக்கூடாது...''

''இல்லை ஸேர்..இந்த ரிப்போர்ட்டை மட்டும் பார்த்துடுங்க''.

''என்ன ரிப்போர்ட்?''

''பேர்ஸனல் டிப்பார்ட்மெண்டில ..''

''நாராயண்கிட்ட காட்டுய்யா! இதை ஏன் என்கிட்ட...''

''இது நாராயணைப் பற்றிய ரிப்போர்ட் ஸேர்''

''குடு பார்க்கலாம்''

மேலாகப் படிக்க ஆரம்பித்தார். மூன்றாவது வரியிலேயே உன்னிப்பாகப் படிக்கத் தொடங்கினார். அவர் விழிகள் பெரிதாகி வரிகளை விழுங்கின. முடித்தார். நிமிர்ந்தார்.

''நம்ப முடியலை!''

''என்னாலேயும் முதல்ல நம்ப முடியலை ஸேர்''.

இண்டர்காமைத் தட்டி, ''நாராயணை உடனே கூப்பிடும்மா?'' என்றார்.

''மை கோட் மை கோட்!''

''அப்புறம் அந்தப் பெண் கலா இல்லே, அவளை என் கண் முன்னாலேயே நிர்வாணமா போட்டோ எடுத்தான் ஸேர்!''

''சரிதான்...இது வேறயா? எங்கம்மா நாராயண்?''

''ஸீட்ல இல்லை ஸார். பதில் இல்லை!''

''எங்கே போய் விட்டான்?''

'வீட்டுக்குப் போயிட்டதா...''

''வீட்டு விலாசம் தெரியுமில்ல...வண்டி அனுப்பிச்சுக் கூப்பிட்டு வரச் சொல்லு. ஒரு நிமிஷம் ... சங்கர் உனக்கு அவன் வீடு தெரியுமல்ல?''

''தெரியும் ஸேர்''

''நீயே வண்டி எடுத்துக்கிட்டுப் போய் உடனே அவனைக் கையோட அழைச்சுட்டு வா. குயிக். இன்னிக்கே மெட்டரைத் தீர்த்துடலாம். அவன் என்ன மாதிரி கில்லாடியா இருந்தாலும் பொய் உதவாது... ஏமாத்து... நம்மை எல்லாம் என்ன இளிச்சவாயன்களா நினைச்சுக்கிட்டானா?''

நான் சந்தோஷத்துடன் ஆபீஸ் காரில் நாராயண் வீட்டுக்குப் பறந்தேன்.

வீட்டுவாசலில் நாராயண் கதவைச் சாத்திக்கொண்டிருக்கும்போது அவனைச் சந்தித்தேன்.

''நாராயண் வாய்யா!''

''எம்.டி. கூப்பிட்டனுப்பிச்சாரா?''

''ஆமாம், உன் சேர்டிபிகேட் அழகெல்லாம் பார்த்துட்டார்''.

'தெரியும்''

''உடனே வா''

''நான் வரலை சங்கர்! எம்.டி. கிட்டச் சொல்லிடுங்க. எல்லாத்துக்கும் தாங்க்ஸ் என்று சொல்லிடு...இந்தக் கடுதாசியை போஸ்ட் பண்ணலாம் என்று இருந்தேன்.. நீங்களே வந்துட்டிங்க. இதை நீங்களே கொடுத்துடுங்க. கலாகிட்ட எல்லாத்துக்கும் தாங்க்ஸ் என்று சொல்லிடுங்க. மற்றவங்ககிட்டயும் சொல்லிடுங்க. அவசரமாகப் புறப்பட்டுப் போறதுக்கு மன்னிக்கச் சொல்லுங்க''.

''புறப்பட்டுப் போறியா? எங்க?''

''எங்க போகணுமோ அங்க. இந்தாங்க கடுதாசியைப் பிரிச்சுப் பாருங்க''.

பிரித்தேன். ஒரே ஒரு வரி 'நான் என் வேலையை ராஜினாமாச் செய்கிறேன். வந்தனம். நாராயண்' நான் நிமிர்ந்தேன்.

''ஊருக்குப் போறியா? லக்கேஜ் எங்கே?''

''லக்கேஜ் இல்லாமல் வந்தேன், லக்கேஜ் இல்லாமல் போறேன்''.

''கால்ல செருப்புக் கூட இல்லையே!''

''வேண்டாம்''.

அவன் புறப்படுமுன் அவன் கால் விரல்களில் தப்பு இருப்பது தெரிந்தது... அவனுக்கு இரண்டு வலக் கால்கள் இருந்தன!

''நாராயண்!''

விறுவிறு என்று நடந்துசென்று சடுதியில் தெருமுனையில் மறைந்தான்.

அவ்வளவுதான். அதற்கப்புறம் நாராயணிடமிருந்து எந்தவிதத் தகவலும் இல்லை. அவனுக்கு இதுவரை கொடுக்கப்பட்ட சம்பளம் ஒரு பைசா பாக்கியில்லாமல் கூட்டப்பட்டு ஒரு செக் அவன் மேஜையில் எழுதி வைத்திருந் தான்.

அந்த வினோத நாராயண் வந்தான், போனான்.

கலா என்னிடம் அழுதாள். என் உள்ளுக்குள் கலாவை நான் பார்த்த சந்தர்ப்பங்கள் குறுகுறுத்தன. எனக்கு டி.ஜி.எம். போஸ்ட் கிடைத்தது. நாராயண் செய்த மாற்றங்களையெல்லாம் நான் மாற்ற விரும்பவில்லை. எல்லாவற்றிலும் ஆதாரமாக ஒரு திறமையும் ஆபீஸ் முன்னேற்றத்தில் ஓர் அக்கறையும் தெரிந்ததால்.

நாராயண் எண்ணம் ஒன்றரை மாதம் புயல் அடித்து ஓய்ந்துவிட்டது.

என் நெஞ்சில் முன் போல அந்தக் கேள்வி இன்னும் இருக்கிறது. அவன் யார்?

''அவன் யார் ஸேர்?''

ஒரு மாதத்துக்குப் பிறகு நான் கணேஷின் அறையில் உட்கார்ந்திருந்தேன்.உடன் வசந்தும் உட்கார்ந்திருந்தான்.

கணேஷ் எல்லாவற்றையும் கேட்கும்போது குறுக்கே பேசவே இல்லை. வசந்தான் அவ்வப்போது ''அப்படியா! கில்லாடியா எந்த ஆளு?'' என்றெல்லாம் கமெண்ட் அடித்துக் கொண்டிருந் தான். குறிப்பாக அந்த போட்டோ பிடிக்கும் பகுதி வந்தபோது வசந்த் சுறுசுறுப் பாக அந்தப் பெண்ணின் அட்ரஸ் கேட்டான்.

எல்லாம் முடிந்ததும் ''வசந்த், அந்த ஆள் யாரு சொல்லு பார்க்கலாம்?'' என்றான் கணேஷ்.

''என்ன பாஸ்! ரொம்பச் சுலபம். அவன் ஒரு மோசடிக்காரன், சேர்ட்டிபிக்கேட் பொய், எல்லாம் பொய். ஆள் கண்டுபிடிக்கப்பட்டதும் காணாமப் போய்ட்டான்''.

''அவனால் எப்படி அவ்வளவு அமானுஷ்யமான காரியங்கள் எல்லாம் செய்யமுடிஞ்சது?''

''அமானுஷ்யமா! என்ன இதில் இருக்கு? பத்துப் பக்கத்தைப் படிச்சுப் பார்த்து ஒரு நிமிஷத்தில் இந்த இடத்தில் தப்பு இருக்கிறது என்று சொல்வது ஸ்பீட் ரீடிங்ல சாத்தியம் பாஸ்''.

''நான் அதைச் சொல்லலை. ஒரு ராத்திரியில் பைல் பார்த்து டெண்டர் தயார் பண்ணியது?''

''எனக்கென்னவோ அது கொஞ்சம் ப்ளானா இருக்கும் என்று தோணுது. முன்னாலேயே பத்துப் பதினைஞ்சு நாளா அதுக்குத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள, திருட்டுத்தனமா பைலைப் பாக்கலை என்று என்ன காரண்டி? இதெல்லாம் அமானுஷ்யமா எனக்குப் படலை''.

''அந்தப் பெண்ணைப் போட்டோ எடுத்தது?''

''அது ஒரு பர்வர்ஷன்தான். இதைவிட எவ்வளவோ பர்வர்ஷனை நாம பாத்ததில்லையா? மை கோட்! எனக்கு தெரிஞ்ச ஒரு பெரிய புள்ளி இப்பகூட பீடிங் போத்தலில் தான் பால் சாப்பிடறார். தினம் ஒரு நிப்பிள் மாத்தணும். வாராவாரம் ஏதாவது ஒரு தாய்ப்பால் வேற வேணும் அவருக்கு!''

''போதும் வசந்த்''

''எதுக்குச் சொல்ல வந்தேன்னா பர்வர்ஷன்கள் பல வகை. குளித்தலைக்காரர் ஒருத்தர்...''

''ஓ.கே.! ஓ.கே.! அவர் கால் கட்டைவிரல்?''

''அது வந்து ஸார் ஆறாவது விரலைப் பார்த்துட்டு அந்த மாதிரி கற்பனை பண்ணிண்டு இருப்பார். எனக்கென்னவோ எதுவும் அமானுஷ்யமாப் படலை. போஸ். நீங்க என்ன சொல்றீங்க?''

''நான் வேற விதமா நினைக்கிறேன். அந்த ஆள் மனுஷனே இல்லை!''

''பின்னே?''

''வேற உலகத்தில் இருந்து நம்ம உலகப் பழக்க வழக்கங்களைக் கவனிக்க அல்லது குறிப்பெடுத்துக்க வந்த ஒரு பிரஜை. அந்தக் கிரகத்தில பெண்களே இல்லாமல் இருக்கலாம். அல்லது வேறு வடிவத்தில் இருக்கலாம். அவங்களுக்கு மனித ஆண்வடிவத்தைப் பத்தித் தெரிஞ்சிருக்கலாம். பெண் வடிவத்தைப் பத்தி அவங்க அறிவு இன் கம்ப்ளீட்டா இருக்கலாம். அதுக்காகத்தான் அந்தப் பெண்ணைப் போட்டோ எடுத்திருக்கான். அவங்க எல்லாருமே ஸுப்பர் பிரெய்ன்களா இருக்கலாம். அசுரவேகத்தில் சாதனைகள் செய்யக் கூடியவங்களா இருக்கலாம். இங்க பூமிக்கு வாரதுக்கு முன்னாடி அவசர அவசர மாக மனித வடிவம் பூண்டதில் ஒரு சின்னத் தப்பு நேர்ந்து போய், இரண்டு காலும் ஒரே மாதிரி ஆயிடுச்சு என்று வைச்சுக்கலாம். அவங்களுக்கு நம்ம மனித முயற்சிகள் எல்லாம் அவங்க வேகத்துக்குச் சுண்டைக் காயா இருக்கலாம். அவன் வேலை முடிஞ்சது. அவன் போய்ட்டான்! ஏன் 'அவன்' என்று சொல்றதே தப்பு. அது போயிட்டது அவங்க உலகத்துக்கு! என்ன சொல்றே வசந்த்.''

''என்னத்தைச் சொல்றது! சமீபத்தில ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரோட சயன்ஸ் பிக்ஷன் நிறைய படிக்கறீங்க என்று தெரியுது.''

'' சயன்ஸாவது பிக்ஷனாவது! எல்லாம் ரீல். இதை பாருங்க, இந்த பென்சில் இருக்கு. இதை 'ஏ பென்சிலே! தானாகவே கூர்ச்சை மேல நின்று டான்ஸ் ஆடு' என்று சொன்னா ஆடுமா? ஆடாது. சயன்ஸ்பிக்ஷன்ல ஆடுமாம்! என்ன ஒரு ...போஸ் அத பாருங்க?'' அந்தப் பென்சில் அவன் குறிப்பிட்டது போலவே ஆடிக் கொண்டிருந்தது வேறுகதை.

(நன்றி: சுஜாதா)

# சிறுவர் பக்கம்




ஏரிக்கரையில் மிகப் பெரிய பாறை ஒன்று இருந்தது. அதற்கும் மேல் இன்னொரு பாறையும் இருந்தது. ஒரு பெண் சிங்கம் கீழேயுள்ள பாறையில் உட்கார்ந்து, இதமான வெயிலை அனுபவித்துக் கொண்டிருந்தது. மேலுள்ள பாறை மீது சிறுத்தை உட்கார்ந்திருந்தது. அது பெண் சிங்கத்துக்கு வணக்கம் சொல்லியது. பெண் சிங்கம் எந்த பதிலும் சொல்லாமல், ஏரிக்கரை இயற்கை எழிலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது. அப்போது அதன் மேல் கல் ஒன்று விழுந்தது.

அது மேலுள்ள பாறையிலிருந்து விழுந்திருந்தது. ஆனால் சிறுத்தை அந்த இடத்தில் இல்லை. பெண் சிங்கம் கோபத்தில் கொதித்துப் போனது. அது சிங்கராஜாவிடம் சென்றது.

''என் மீது கல் எறிந்த மரியாதை தெரியாத சிறுத்தைக்கு தண்டனை கொடுக்க வேண்டும் '' என்று முறையிட்டது.

சிங்கராஜாவிடம் நடந்ததை அப்படியே விவரித்ததும், கோபத்தில் சிங்கராஜா, ''நான் சிறுத்தைக்கு கடுமையான தண்டனை கொடுக்கிறேன். ஆனால் இதைப் பற்றி எல்லோர் முன்னிலையிலும் விவரமாகச் சொல்லி தண்டனை கொடுக்க விரும்புகிறேன்.'' என்றது.

சிங்கராஜாவின் குகை முன்னால் நீதி விசாரணை ஆரம்பமானது. அங்கே 100க்கும் அதிகமான விலங்குகள் மற்றும் பறவைகள் கூடியிருந்தன. சிங்கராஜா மற்றும் பெண் சிங்கம் அரசருக்குரிய பாறையின் மீது அமர்ந்திருந்தன.

சிங்கராஜா சிறுத்தையிடம் கேட்டது,

'' நீ மேல் பாறையில் உட்கார்ந்திருந்தாயா?''

''ஆமாம், மகாராஜா'' சிறுத்தை அமைதியாகப் பதில் சொன்னது.

''கீழ் பாறையின் மீது உட்கார்ந்திருந்த பெண் சிங்கத்தின் மீது நீ கல் எறிந்தாயா''

''இது பொய்.'' என்ற சிறுத்தை, ''நான் எப்படி இப்படியொரு முட்டாள் தனமான செயலைச் செய்வேன்? எனக்கு உயிர் மீது ஆசையில்லையா?'' என்றது.

பெண் சிங்கம் கர்ஜித்தது,

''வெட்கமில்லாதவனே, பொய்யனே, நீ மேலே உள்ள பாறையில் உட்காரவில்லை? நான் பொய் சொல்கிறேன் என்கிறாயா?''

''ஆமாம். நான் அங்கு உட்கார்ந்திருந்தேன். ஆனால் இதற்கு அர்த்தம் நான் உங்கள் மீது கல் எறிந்தேன் என்பதல்ல.'' என்றது.

''அப்புறம் யார் எறிந்தது?'' என்ற பெண் சிங்கம் தன் காதுகளை ஆட்டிக்கொண்டே கேட்டது.

சிங்கராஜா கூடியிருந்த விலங்குகளைப் பார்த்துப் பேசியது,

''நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சிறுத்தைதான் தன் மீது கல் எறிந்ததாக சிங்க ராணி சொல்கிறது. ஆனால் சிறுத்தை இதை மறுக்கிறது. என்னுடைய கருத்து சிறுத்தைதான் ராணி மீது கல் எறிந்தது! ஆனால் நான் உங்கள் அனைவரின் கருத்தையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.''

''மகாராஜா, ராணி தவறு செய்ய முடியாது'' என்றது காண்டாமிருகம்.

''சிறுத்தை பொய் சொல்கிறது.'' என்றது குள்ள நரி.

''அங்கே அந்த நேரம் சிறுத்தையைத் தவிர வேறு யாருமில்லை'' என முணுமுணுத்த நீர் யானை, ''பிறகு யார் இதைச்செய்திருப்பார்?'' எனக் கேட்டது.

சிங்கராணியின் முகம் மலர்ந்தது. சிங்கராஜா பேசியது, ''உங்கள் அனைவரது கருத்துக்களும் எங்களது கருத்தைப் போன்றே உள்ளன.''

அப்போது கழுதைப் புலி பேசியது, ''மகாராஜா,கண்ணால் பார்த்த சாட்சியாக நான் இருக்கிறேன். சிறுத்தை கல் எறிந்ததைப் பார்த்தேன். இதற்கு தக்க தண்டனை வழங்குங்கள்.''

சிறுது நேரம் கழித்து சிங்கராஜா பேச ஆரம்பித்தது, ''சிறுத்தை கல்லெறிந்தது எனக்குத் தெரியும். நான் எல்லோரது கருத்தையும் கேட்டேன். கழுதைப் புலியின் சாட்சியும் இருக்கிறது. யாரும் சிறுத்தைக்கு ஆதரவாக இல்லை. கண்டிப்பாக சிறுத்தைக்கு தண்டனை கொடுக்க வேண்டுமா? என்பதை நான் உங்கள் எல்லோரிடமும் கேட்கிறேன்.''

எல்லா விலங்குகளும் ஒரே குரலில் பதிலளித்தன, ''ஆமாம் மகாராஜா''

(தொடரும்...)

## அழகாக நிறம் தீட்டுங்கள் 25



**தம்பி, தங்கைகளே!**

மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## விடுகதைகள்

1. பெட்டி திறந்தான். கிருஷ்ணன் பிறந்தான். அது என்ன?
2. நான் இறங்காத கிணற்றில் என் தம்பி இறங்குவான். அது என்ன?
3. டே என்றான். உள்ளே போனான். அது என்ன?
4. நாலு உலக்கை குத்தி வரும். இரண்டு முறம் புடைத்து வரும். ஒரு துடைப்பம் பெருக்கிக் கொண்டே வரும். அது என்ன?
5. முள்ளும் முடியும் பிய்த்து எறிந்தால் உள்ளே இனிக்கும் சர்க்கரை. அது என்ன?
6. இரண்டு வீட்டுக்கு ஒரே தூண். அது என்ன?
7. தெரிந்து காய் காய்க்கும். தெரியாமல் பூ பூக்கும். அது என்ன?
8. ஆழக் குழி தோண்டி அதிலொரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?
9. நான் ஏறாத மரத்தில் என் தம்பி ஏறுவான். அது என்ன?
10. ஆடும் வீட்டுக்குள் அச்சமின்றி பிள்ளைகள். அது என்ன?


விடைகள்

1. வேர்க்கடலை.
2. ஊசி.
3. நாக்கு
4. யானை
5. பலாப்பழம்
6. மூக்கு
7. அத்திமரம்
8. தென்னைமரம்
9. அணில்
10. தூக்கணாங்குருவி

## சிறுவர் கைவண்ணம்



ஆர்.புஸ்பகுமார், தரம் 5 ஏ,
புனித அந்தோனியார் தமிழ் ம. வி.,
கொழும்பு-14.



எ.ஜொனிங்சன், தரம் 10,
சென்.ஜோசெப்ஸ் வித்தியாலயம்,
பாசையூர், யாழ்ப்பாணம்.



இராமசாமி றமேஷ்,
உடுப்புக்குளம்,
அளம்பில்.



எ.எட்றீசியா, தரம் 10,
பாசையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.
மகளிர் வித்தியாலயம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 22



★வரைந்தவர் - ஆர்.எம்.வினோத் ★ தரம் 2
★சென் தோமஸ் கல்லூரி, கல்கிசை.

### பாராட்டுப் பெறுவோர்....

1. செல்வி கெ.ஜெனிற்றா, தரம் 6, 94, மடத்துவீதி, மன்னார்.
2. பு.துஷாயினி, தரம் 3 சி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு- 04.
3. கை.மிதுர்சாளினி, தரம் 2, இ.காவத்தை தமிழ் ம.வி.,காவத்தை.
4. எம்.ஏ.பாத்திமா சானா ஹைனைனா, தரம் 5, கே.எம்.மஃஹூர் மகளிர் உயர் (நவோதயா) பாடசாலை, நிந்தவூர்- 14.
5. இராமசாமி வினோத், தரம் 7, உடுப்பக்குளம் தமிழ் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு.

# மியாமி கரைதனில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

''சரி சரி கவலைப்படாதே. தைரியமாக செயல்படு. இந்த சொசிமோவைப் பார்த்தாலே போதும். வீரம் தானாக வந்துவிடும். அற்புத மான வீரன். அவனை மெக்டோனா ஒரு கீழ்த்தரமான கொலைகாரனாக்கி விட்டான். அதெல்லாம் கிடக்கட்டும். நீ மியாமியை விட்டு போ. தெருவில் எங்காவது சைக்கிளில் சுற்றிக் கொண் டிரு. நான் தொடர்பு கொள்கிறேன்...''

அவள் முடிக்கவில்லை.-

அப்போது- சட்டென போன் கைமாறியதைப் போன்ற ஒரு உணர்வு ரீட்டாவிற்கு ஏற்பட்டது. அவள் உஷாரானாள். ஜோன்சனை வேவு பார்த்துக்கொண்டிருந்தவன் அவனுடைய போனை பறித்தெடுத்து தனது காதில் வைத்துக் கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

அவசரம், பயம், படபடப்பு அனைத்தையும் கைவிட்ட அவள் மிகமிக அமைதியாக காதல் ரசம் ததும்ப ஹலோ ஜோன்! நான் உன்னை எப்படி பிரிந்திருக்க முடியும். சீக்கிரம் வந்து விடுகிறேன் டார்லிங். மியாமியில் உன்னை வெகுநேரம் காக்க வைத்ததற்கு மன்னித்துவிடு. அந்த மியாமி நல்ல இடமே இல்லை. அங்கே பயங்கரவாதி கள் இருக்கிறார்களாம். நாம் நாளைக்கு வேறு ஏதாவது ஹோட்டலை ஒழுங்குபடுத்திக் கொள்வோம். இன்று என்னை மன்னித்துவிடு டார்லிங்....!''

அவள் மென்மையாகப் பேசுவது போல் பாசாங்கு செய்து கொண்டு டெலிபோனை ரொம்பவும் அவதானமாக காதில் வைத்துக் கொண்டிருந்தாள்.

சில வினாடிகள் நகர்ந்தன.

அமைதி. பதில் எதுவும் இல்லை. அவள் நினைத்தது சரியானதுதான். யாரோ அதை காதில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''டார்லிங் ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?''

ரீட்டா மறுபடியும் காதல் ததும்பக் கேட்டாள்.

இப்போது- போனில் ஒரு பெருமுச்சு இழையோடுவது போலிருந்தது. அது கைமாறுவதையும் உணரமுடிந்தது. அவள் சிரித்துக்கொண்டே சொசிமோவிடம் விசயத்தைச் சொன்னாள். சொசிமோவும், ரீட்டாவும் கானகத்தில் வேகமாக ஓடத் தொடங்கினார்கள். அவர்களின் காலடிகள் பட்டு புல்பூண்டு கள் நசுங்கின.

(தொடரும்)

# குடாநாட்டு வைத்தியசாலைகளில் ...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு இல்லை என அடிக்கடி அதற்குப் பொறுப்பானவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். அவ்வாறானால் ஏன் 'O/S' என்ற அடையாளம் இடப்படுகின்றது. மருந்து போதியளவில் இருந்தால் அவ்வாறு எழுதவேண்டிய அவசியம் இல்லை. கையிருப்பில் மருந்துகள் இல்லை என்பதனாலேயே அவ்வாறு எழுத வேண்டிய அவசியம் எழுகின்றது. வைத்தியசாலை உயர் மட்டம் மருந்துகள் போதியளவு உள்ளன என்று கூறுகின்றது. அதே நேரம் மருந்து கொடுக்கும்இடங்களில் உள்ளவர்கள் மருந்து முடிவடைந்து விட்டது என்கிறார்கள். இரு தரப்புக்கும் இடையே இடைவெளி ஒன்று உள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இதனடிப்படையில் நோக்கும் போது வைத்தியசாலைக்கு வரும் மருந்துகள் வேறு எங்கேயாவது செல்கின்றனவா என்றே எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறு செய்வதானால் அவை வெளியில் தனியார் மருந்தகங்களுக்கே செல்லவேண் டும். எனவே இந்த முரண்பாட்டை கண்டு பிடித்துத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு சம்மந்தப்பட்டவர்களுக்கு உரியது.

கிளினிக்குகளில் தொடர்ச்சியாக மருந்து கள் இல்லை என்று கூறப்படுவதால் பலர் கிளினிக்குகளுக்கு செல்வதை நிறுத்தி விடுகிறார்கள். இதனால் அவர்களின் நோய்கள் மேலும் அதிகரித்து உயிரிழப்புகள் இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. அத்துடன் வசதி படைத்த சிலர் கிளினிக்குகளுக்கு செல்லாமல் அந்த மருந்துகளைத் தனியார் மருந்தகங்களில் வாங்கி உபயோகிக்கிறார்கள்.

வைத்திய ஆலோசனைகள் இல்லாமல் மேற்கொள்ளப்படும்இத்தகைய நடவடிக்கைகளும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லை எனக் கூறப்படுவதாலேயே இத்தகைய நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதை வைத்தியசாலை வட்டாரங்கள் இதுவரை புரிந்துகொள்ளாமல் உள்ளமை வேதனைக்குரியதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து நிலவிவரும் சில நிர்வாகச் சிக்கல்கள் காரணமாகக் குறிப்பிட்ட குறைபாடு கள் இதுவரை சீர்செய்யப்படவில்லை.

குடாநாட்டில் தற்போது டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் பதினெட்டுப்பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். டெங்கு தொடர்பான சுகாதார நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இந்த நிலையில் வைத்தியசாலைகளில் போதிய மருந்துகளும் கையிருப்பில் இருக்க வேண்டும். அதன் மூலம் நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். இதற்கு சிறந்த திட்டமிடலும் நிர்வாகத் திறமையும் சம்மந்தப்பட்ட தலைமைகளுக்கு அவசியம்.

வைத்தியசாலைகளில் தொடரும் இந்த'O/S'குறியீட்டு முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டிய பொறுப்பும் கடமைப்பாடும் சம்மந்தப்பட்வர்களுக்கு உரியது. வைத்தியசாலை நிர்வாகங்கள் தமது வைத்தியசாலைகளில் உள்ள மருந்து கொடுக்கும் இடங்களுக்குச் சென்று மருந்து வழங்கும் நடை முறைகளை மேற்பார்வை செய்து மருந்துகளின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நோயாளியை பரிசோதித்து விட்டு மருந்துகளை எழுதும் வைத்தியர்களும் இந்தப் பிரச்சினைகளை உரிய மட்டங்களுக்கு சென்று தெளிவு படுத்த வேண்டும். மருந்து கொடுக்கும் நிலையங்களில் உள்ளவர்கள் தமக்கு விரும்பியவேளைகளில் மருந்துகள் உள்ளன என்று கூறவும் மருந்துகள் இல்லை என்று கூறவும் வைத்தியசாலை நிர்வாகம் அனுமதிக்கக்கூடாது. அதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு நிர்வாகத்துக்கே உரியது. மிக முக்கிய நோய்களுக்குரிய மருந்துகளுக்கே தட்டுப்பாடு நிலவுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றின் விலை தனியார் மருந்தகங்களில் மிகவும் அதிகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு காலாண்டுக்குஒரு முறை மருந்துகள் அனுப்பி வைக்கபப்படுகின்றன. வைத்தியசாலை நிர்வாகத்தின் தேவைக்கேற்பவே சுகாதார அமைச்சு அவற்றை அனுப்பி வைக்கிறது. காலாண்டுக்குரிய மருந்துகள் எவ்வாறு ஒரு சில வாரங்களில் முடிவடையும் என்பதும் இங்கு பலரும் எழுப்பும் வினா.

எனவே இங்கு மருந்து வழங்கும் விடயத்தில் எங்கோ ஓரிடத்தில் தப்பு நிகழ்கிறது என்பது உறுதியாகத் தெரிகிறது. நிர்வாக மட்டத்தில் மேற்கொள் ளப்படும் தவ றான மருந்துத் தேவைக் கணிப்பீடு அல்லது மருந்து வழங்கும் இடத்தில் மேற்கொள்ளப் படும் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாகவே இவ்வாறாக தவறுகள் இடம் பெறுகின்றன என்பதும் உண்மையே.

எனவே இந்த நிலைமை விரைவில் சீர் செய்யப்பட்டு மருந்துத் தட்டுப்பர்டு நீக்கப் பட வேண்டும்.

அத்துடன் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் தேவையான அளவு மருந்துகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதன் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குப் படையெடுக்கும் நோயாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவதுடன் நோயாளிகள் அலைவதையும் தடுக்க முடியும். மேலும் அரச வைத்தியசாலைகளில் போதியளவு மருந்து இருப்புப் பேணப்பட்டால் தனியார் மருந்தகங்களில் மருந்துகளின் விலை எகிறலைத் தடுக்க முடியும்.

எனவே யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமும் சரி அல்லது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அதிகாரிகளும் சரி இது விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டுக் குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க உதவி புரிய வேண்டும்.

வைத்தியசாலைகளில் எந்தவகையான மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்பதை வெளிப்படையாக அறிவித்து அவற்றை விரைவில் தருவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஒட்டுமொத்தத்தில் மருந்துப் பற்றாக்குறைக்கான தீர்வு எவ்வாறு எட்டப்படப்போகின்றது என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பு.

# ராசி பலன்

**12-11-2007 முதல் 18 -11-2007**

**பொ.சந்திரலிங்கம்**

## மேஷம்


**அஸ்வினி, பரணி, கார்த்திகை1.**



காரியசித்தியுண்டு. குறுந்தூரப் பிரயாணம் அமையும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவருக்கு உதவ முடியும். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகளுக்கான வாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறும்.

## துலாம்

**சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3**



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புஉண்டு. பணம்இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர் வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## இடபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2**



காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக பக்தி உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். குரு வழிபாடு செய்வது சிறப்பு.

## விருச்சிகம்

**விசாகம் 4, அனுசம், கேட்டை**



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம்உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது.

## மிதுனம்

**மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3**



காரியதடை இருக்கும். வார பிற்பகுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவிக்கு வருவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில்அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு.புதிய முதலீடுகள் அமையும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது.

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1**



காரியதடைவிலகும். சிறு பிரயாணம் அமையும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நல மில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

**புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்**



காரிய சித்தியுண்டு. பிர யாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர்,அயலவர்உதவி செய்வர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகை வரால் தொல்லையுண்டு. .திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மகரம்

**உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2**



காரியத் தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையும்.அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக பக்தி உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். குரு வழிபாடு சிறப்புத் தரும்.

## சிம்மம்

**மகம், பூரம், உத்தராடம் 1**



காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர்நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட் டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கும்பம்

**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழி ல் துறையில் முன்னேற்றம் குறைய லாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## கன்னி

**உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**



காரியத்தடை விலகும் . சிறு பயணம் அமையும். பணப் பற்றாக்குறை நில வும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர்நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் உண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலீடு செய்யும் போது அவதானம் வேண்டும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகஎண்ணம்குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறை ய ல ா ம். எதிர் பார்ப்புகள் நிறை வேறும்.

## மீனம்

**பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி**



காரிய சித்தியுண்டு. பிரயா ண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர்,அயலவர்விலகி இருப்பர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம்அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு.பகை விலகும். திருமணவாய்ப்புஉண்டு. புதியமுதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறை வேறும்.

# பரதநாட்டிய அரங்கேற்றம்



ஸ்ரீமதி ஜெயசித்ரா சிவமயூரனின் மாணவிகளான, ஜீவிதா நவரட்ணசிங்கம், சஜந்தநிதி நவரட்ணசிங்கம் சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும். வவுனியா நீதிவான் எம். இளஞ்செழியன் பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்து கொள்வார்.





கலைமாமணி
ஸ்ரீகலா பரத்

நாட்டிய கலாமந்திர் இயக்குநர் கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் திரு.திருமதி கிட்ணமூர்த்தி தம்பதியினரின் புதல்வியுமான செல்வி திவ்வியா கிட்ணமூர்த்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் 10ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தமிழகத்தில் இருந்து கலை மாமணி ஸ்ரீகலா பரத் கலந்து சிறப்பிக்க உள்ளார். திவ்வியா கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவியும் ஆவார்.



இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்தின் ஆதரவில் இயங்கும் கொழும்பு கலாலய இசை நடனக் கல்லூரியின் கலைவிழா கலாலய மண்டபத்தில் நடைபெற்ற போது, இடம் பெற்ற 'கலாலய' இசை நடனக் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வுகளில் ஒன்றைப் படத்தில் காணலாம்.
(படம்: அ.இராமலிங்கம்)




எல்லைத்தேடி வர, நாடிவரும்யோகம் எதைது மாந்திரீக சக்தியால் - எதிரியபயம் நீங்க தீய சக்திகள் அணுகாது. நிம்மதியான வாழ்வுபெற, இல்லத்தில் செல்வம் பொங்க, பேய், பில்லி, சூனியம், மனப்பயம் அணுகாதிருக்க, இல்லத்தில் காவல் செய்து சுபீட்சமாக வாழ, காரிய வெற்றிபெற, லட்சுமி கடாட்சியம் கிட்டி, நவக்கிரகங்களின் தோஷம் நீங்க, ஆனந்தம், அகமகிழ்ச்சிபெற, பூர்வபுண்ணிய சொத்து பெற்று நிம்மதி வாழ்வுபெற

உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி பேராசிரியர்
**P.K. சாமி J.P. ஐயா**
162, Kotahena St., Colombo 13, Tel:- 2470615

முதல் 1 kg 1,950/-
அடுத்து 1 kg 1,050/-

கொழும்பு வாழ் மக்களின் நன்மைகருதி பொதிகள் ஆவணங்கள் மிகவும் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு 4 வேலை நாட்களிலும் அனுப்பி வைக்கப்படும். பொதிகள் கட்டணமின்றி வீடுவந்து சேகரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
Tel: 0112 458424
Hotline: 0777 680914 ,0773 564294

**Students / Businessmen / Working Employees**

**INTERNATIONALLY RECOGNISED**
**AMERICAN DEGREES**



Be qualified, while studying @ your home anywhere in
**SRI LANKA**

**PARAMOUNT UNIVERSITY OF TECHNOLOGY**
**WYOMING, USA**

FOR THE FIRST TIME IN SRI LANKA
get an American Degree for
**less than 200 000 Rs...**

- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- Bachelor of Electrical and Electronic Engineering

Limited Registrations taken in per year.....

**Call Farhadh on 0777 99 44 00**

Governor's College - Degree Division
376 Galle Road, Colombo 03
Tel - 112 375 371
Email - governors@sltnet.lk







**HOTEL WESTEERN PVT LTD**

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfourt Place, Bambalapitiya,Colombo - 04.
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteen.com
Webxite:www.hotelwesteen.com


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட்மார்க் எண்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினரால் 2007 ... 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.